www.padippakam.com


# பொருளியல் நோக்கு

MARCH
மார்ச்
1990


# வடக்கு – கிழக்கு: இன்றும் நாளையும்

## பேட்டி

ஈ. பி. ஆர். எல். எப். சுரேஷ் பிரேமச்சந்திரன்

ஸ்ரீ. ல. மு. கா. எம். எச். எம். அஷ்ரப்

எல். ரி. ரி. ஈ. திலீப் யோகி

ஈரோஸ் வி. பாலகுமார்

இந்திய கருத்து: டி. ராத்

மற்றும்

நீலன் திருச்செல்வம　　விக்டர் சந்தியாபிள்ளை

சி. சூரியகுமாரன்　　கே. டி. அருள்பிரகாசம்

மக்கள் வங்கி வெளியீடு

www.padippakam.com

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

பெப்ரவரி 1990

01. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச்செலவுச் சுட டெண் 1990 பெப்ரவரியில் 952.6 புள்ளிகளாக இருந்தது. இது இவ்வருட ஜனவரி மாதத்தில் 937.7 புள்ளிகளாகவும், 1989 பெப்ரவரியில் 780.8 புள்ளிகளாகவும் இருந்தது. கடந்த 12 மாதங் களுக்குமான சராசரி விகிதம் 842.5 புள்ளிகளாக இருந்து வந்துள்ளது. அதற்கு முன்னைய 12 மாதங்களின் அளவிலும் பார்க்க, 92.4 புள்ளி அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பானிய அபிவிருத்தி உதவி 18.4 சதவீதத்தால் அதிகரிக்கப்படவிருக்கின்றது. ஏழு வருட தாட்சண்ய காலத்துடன் 25 வருடங் களில் திரும்பிச் செலுத்தக்கூடிய 300 கோடி யென் பண்டக்கடன்; பத்து வருட தாசண்ய காலத் துடன் 30 வருடங்களில் திரும்பிச் செலுத்தக் கூடிய திட்டக்கடன்கள் என்பவற்றை இந்த உதவி உள்ளடக்குகின்றது.

03. குலோரேபுலோரா கார்பன்களின் உற்பத்தி மற்றும் நுகர்வினை 2000 ம் ஆண்டளவில் தடை செய்யும் பிரகடனத்தில் 84 நாடுகள் கையெழுத்திட்டன. ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஐ. நா. சுற்றுச் சூழல் நிகழ்ச்சித் திட்ட கூட்டத்தில் இது இடம் பெற்றது. சூரியனின் தீங்கு விளைவிக்கக் கூடிய கதிர் வீச்சுக்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் ஓஸோன் படலத்தை இந்த காபன் அழிக்கிறது.

05. கேகாலை கச்சேரியில் அமைந்திருக்கும் ஒருங் கிணைந்த கிராமிய வளர்ச்சித்திட்ட அலுவலகம், இறம்புக்கனையில், மல்பேரி செடிகளை பயிரிடும் முன்னோடித் திட்டமொன்றை துவக்கி வைத் துள்ளது. மல்பேரி செடிகளை வளர்ப்பதற்கு தகைமை பெற்றிருக்கும் ஒவ்வொருவருக்கும் ரூ. 18,000 மானியம் வழங்கப்படும். அத்துடன், ரூ. 7000 வங்கிக்கடனையும் அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

06. அரிசி விலைகளை குறைக்கும் நோக்கில், 100,000 மெட். தொன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை தனது களஞ்சியங்களிலிருந்து தனியார்துறை வியாபாரிகளுக்கு விடுவிப்பதற்கு உணவுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. விலையதிகரிப் புக்களை தடுத்து நிறுத்தும் பொருட்டு தாய் லாந்து, வியட்னாம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளி லிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

பத்து இலட்சம் வீடுகளை அமைக்கும் திட்டத் துக்கு ஜப்பானிய அரசாங்கம் 38 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. தேசிய இருப்பிட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கிராமிய மற்றும் நகர முடியிருப் புக்களில் வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்வதே இச்செய்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். (அ) பாதை அமைப்பு (ஆ) நீர் வினியோகம் (இ) மின்சாரம் ஆகிய மூன்று பிரிவு களில் உபகாரணங்களும் இயந்திரங்களும் அமை கின்றன. இது தவிர, பாரிய வீடமைப்புத் திட்டங் களை பராமரிப்பதற்கு அவசியமான உபகரணங் களும் பெறப்பட்டுள்ளன.

07. இலங்கையை சர்வதேச இரத்தினக்கல் பதப்படுத் தும் மையமொன்றாக மாற்றியமைப்பதற்காக பெருந்திட்டமொன்றை வரையும்படி ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு வர்த்தக, கப்பற்துறை அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார். 1983 ல் 47 கோடி ரூபாவாக இருந்த பதப்படுத்தப்பட்ட கற்களின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள், 1988 ல் 207 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தன. நாட்டில் 30,000 தேர்ச்சி பெற்ற கல் செப்பனிடுவோர் இருக்கிறார்கள். வேலைகளுக்கான கட்டளைகளை ஏற்று, நிறைவேற்றும் ஆற்றல் இவர்களுக்குண்டு.

12. பசறையில், உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சி திருப்திகரமான முடிவுகளை தந்துள்ளது. லுணுகலை, பசறை, பிபிலேகம ஆகிய பிரதேசங்களின் மண்ணின் தன்மை உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கைக்கு உகந்தது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

13. இலங்கையின் இரண்டாவது தெங்கு அபிவிருத்தி செய்திட்டத்துக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 250,000 அ. டொலர் தொழில் நுட்ப உதவிக் கொடையொன்றை அங்கீகரித்துள்ளது. தெங்குப் பயிர்ச் செய்கையில் மேலும் முதலீடுகளை மேற் கொள்வது குறித்த சாத்தியப்பாடுகள் பற்றி இதன் கீழ் ஆராயப்படும்.

பனை மரம், கிராமிய பொருளாதாரத்தில் பெருந் தொகையான வேலை வாய்ப்புக்களை வழங்கும் உள்ளார்ந்த ஆற்றல் கொண்டதாகும். இதி லிருந்து இப்போழுது சுமார் 40,000 குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்தை நடத்தி வருகிறார்கள்.

20. குருணாகல் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிக்கும் தேசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடை யில் கடன் வழங்கும் ஒப்பந்தமொன்று கைச்சாத் தானது. கிராமிய அபிவிருத்தி வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவு கடன்களை வழங்குவதற்கு இது வகை செய்கின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி முகவரகம் என்பவற்றின் உதவியுடன் தேசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் மீள் நிதிப்படுத்தும் வசதிகளுடன் இது மேற் கொள்ளப்படும். சர்வதேச அபிவிருத்தி முகவரகமும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கைக்கு 3 கோடியே 50 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

பொருளியல் நோக்கு

மலர் 15 இதழ் 12 மார்ச் 1990

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## உள்ளே


| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக்குறிப்பேடு | | மார்ச் 1990 |
| டப். ஹைட்டியாரச்சி | 32 | செலாவணி நிலுவை கருத்து, கோட்பாடு, இலங்கை அனுபவம் |

**விசேஷ அறிக்கை** வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| திஸரணி குணசேகர | 2 | சமாதானத்துக்கு கை கொடுங்கள் |
| திலீப் யோகி | 4 | புலிகளின் நிலைப்பாடு |
| சுரேஷ் பிரேமச்சந்திரன் | | அதிகார பரவலாக்கம் |
| வி. பாலகுமார் | 9 | கடைசி சந்தர்ப்பம் |
| எம். எச். எம். அஷ்ரப் | 12 | புதிய வரலாற்றுக்கட்டத்தில் முஸ்லிம்கள் |
| நீலன் திருச்செல்வம் | 17 | அபிவிருத்திக்கான உத்தி |
| சி. ராத் | 21 | இந்திய அணுகுமுறை |
| வி. சந்தியாப்பிள்ளை | 23 | கிழக்குக் கரையில் வாய்ப்புகள் |
| கே. டி. அருள்பிரகாசம் | 25 | வடக்கு - கிழக்கு : ஒருங்கிணைந்த அபிவிருத்தி |
| சி. சூரியகுமாரன் | | மத்திய - மாநில உறவு |


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமல்ல. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளிவருகிறது. அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

### அடுத்த இதழ்

★ "பொருளியல் நோக்கு" இதழின் பதினைந்காவது வருட சிறப்பிதழ்.

**அட்டை தயாரிப்பு**
தயான் ஜயதிலக.

www.padippakam.com

## வடக்கு - கிழக்கு

# சமாதானத்துக்கான இறுதி வாய்ப்பு கிட்டியிருக்கிறது

இன்னமும் சமாதானம் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பிருக்கிறது. வடக்கு - கிழக்கு மீண்டும் ஒரு முறை கொலைக்களமாக மாறுவதை தடுப்பதற்கு நூலிழையளவிலேனும் ஒரு சந்தர்ப்பம் இப்பொழுது கைக்கெட்டியிருக்கிறது. புல தமிழ் தீவிரவாத தலைவர்களுடன் உரையாடியதில் இந்த முடிவுக்கே என்னால் வர முடிந்தது.

'திலீப்' யோகி நகைச்சுவையுணர்வு கொண்ட ஒரு புலி. ஈ. பி. ஆர்- எல். எப். ன் ஈழப்பிரகடனத்துக்கு இரு தினங்களுக்குப் பின்னர் அவரை சந்தித்தேன். மிகுந்த நம்பிக்கையுடன் எனது கேள்விகளுக்கு பதிலளித்தார். தற்போதைய காட்சியின் புல எதிர்முரண் நிலைகள் குறித்து அவர் நன்கு அறிந்திருக்கிறார். ஜே. வி. பி., ஸ்ரீ. ல. சு. க., விஜய, விடுதலைப் போராட்டத்தில் புத்திஜிவிகளின் பங்கு போன்ற பல்வேறு விடயங்களையும் அவரது சம்பாஷணையின் போது - பேட்டிக்காகவன்றி - தொட்டுச் சென்றார். அவரது கதைப்புக்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சில அம்சங்கள் வெளிப்பட்ட போதும், அவரது வாதங்களில் பலவீனமான சில காரணிகள் காணப்பட்ட போதிலும் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளிலும், அவற்றை செயலாக்கத்தில் விடுவதிலும் அவர் காட்டிய தீவிரம், இவையனைத்தையும் மறக்கடித்து விடுகிறது. குறைந்த பட்சம் இப்போதைக்காவது, விட்டுக்கொடுப்பதற்கும், சலுகைகளை வழங்குவதற்கும் அவர்கள் விருப்புடன் இருக்கிறார்கள். இது கூட ஒரு பெருமாற்றம் தான். முன்னோக்கிய ஒரு அடி என்றும் கூறலாம்.

பாலகுமார் சிந்தித்து, ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேசினார். ஆயிரம் சிக்கல்கள் நிறைந்திருக்கும் ஒரு நிலையிலும் கூட, சரியான நூலிழையை இனங்கண்டு, பற்றிக் கொள்ளும் ஆற்றல் அவருக்கிருக்கிறது. தமது அமைப்பு, தொடர்ந்து உயிர்வாழ வேண்டுமென்பதே அவருடைய முக்கிய கரிசனம் என்பதும் தெரிகிறது.

''சுரேஷ்'' பிரேமச்சந்திரன் ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொன்னார். என்றோ ஒரு நாள் - அதுவும் கூடிய விரைவில் ஈ. பி. ஆர். எல். எப். திரும்பி வரும் என்பது தான் அது. ஆனால், இந்த பழைய அரசியல் நண்பரின் வாக்கு வன்மைக்கு தொடர்ந்து செவிமடுத்த போது, எனக்கு இதற்கு மாறான ஓர் எண்ணமே தோன்றியது. சுயவிமர்சனத்திலோ அல்லது தவறு எங்கு நடந்தது என்பதை கண்டறிவதிலோ போதிய அக்கறை காட்டப்படவில்லையாதலால், இது நடக்க முடியாத ஒன்று என்பது தான் அந்த எண்ணம். தனிநாடு தான் ஒரே மாற்றுவழி என்பது குறித்து அவர் பேசினார்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் வரலாறு மீண்டும் நிகழும் ஒரு காட்சியே அங்கு தென்படுகிறது. தமிழ் தீவிரவாத தலைவர்கள் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் குறித்து கூறியவற்றை செவிமடுத்த போது, சில வருடங்களுக்கு முன்னர் சிங்களத் தலைவர்கள் பேசிய பேச்சுக்களே என் நினைவுக்கு வந்தன. இந்தச் சிங்களத் தலைவர்கள் - இடதுசாரிகளும் இதில் அடக்கம் - தமிழர் மற்றும் அவர்தம் விடுதலைப் போராட்டம் என்பன குறித்து அப்போது இப்படித்தான் பேசினார்கள். நிலையாப்பிரகாரமாக வெளிவரும் ஒரு வித அடாவடித்தனம், ஒடுக்கும் எண்ணம் - அனைத்துக்கும் மேலாக முற்று முழுதான அறியாமை என்பனதான் இந்தப் பேச்சுக்களில் தொனிக்கின்றன. இந்த மனப்போக்குத்தான் நமது அரசியல்வாதிகளுக்கும் - பொதுவாக நாட்டுக்கும் - அழிவை எடுத்து வந்திருக்கிறது. அஷ்ரப் (ஆரம்ப நாட்களின்) அமிர்தலிங்கத்தைப் போலவே பேசினார். இந்த காட்சியை நிறைவு செய்வதற்கு ஒரு முஸ்லிம் பிரபாகரன் மட்டுமே இப்பொழுது தேவை. இதை நினைப்பதற்கே பயமாக இருக்கிறது.

யு. என். பி. அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை, வடக்கிலும் கிழக்கிலும் வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களை விளைவித்தவர்களை கடுமையாக பாதித்தமையால் தான் இலங்கையின் இனப்போராட்டம் இவ்வளவு தூரத்துக்கு தீவிரமடைந்தது என்று பெரும்பாலான சுதந்திரக் கட்சியினரும், இடதுசாரிகளும் எண்ணி வருகிறார்கள். ஆனால், தீவிரவாத தமிழ்த் தலைவர்கள் எவரும் இந்த நோய்க்குறி குறித்து எதுவும் பேசவில்லை. இனப்பிரச்சினை வர வர மோசமடைந்து போனதற்கு பங்களிப்புச் செய்த பல காரணிகளை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். சிங்களம் மட்டும் சட்டம் மற்றும் 1970 களின் தரப்படுத்தல் என்பன இவற்றுள் முக்கியமானவை. (இவையிரண்டும் சுதந்திரக் கட்சியின் முற்போக்கு, ''மூடுண்ட பொருளாதார'' ஆட்சிக்காலத்திலேயே இடம் பெற்றுள்ளன என்பது சுவாரஸ்யமான ஒரு விஷயம்) ஆனால், இதற்கு காரணமாக இருந்த பொருளாதார காரணிகள் பற்றி கேட்ட போது அவர்கள் வெறுமனே மௌனம் சாதித்தார்கள். ஆக, 'வெங்காயம் - மிளகாய் கோட்பாடு' அவ்வளவுதான்.



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் தீர்வு

இந்த நெருக்கடிக்கு பிரதானமாக ஆரசியல் காரணிகளே பங்காளிப்புச் செய்திருக்கின்றன. அதனால் அவர்கள் அனைவரும் அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்திக் கூறி வருகிறார்கள். தனி நாட்டுக் கோரிக்கை மீதான பிரிவினைவாத போராட்டமும் கூட (இதனைச் சிலர் ஏற்க மறுத்தாலும்) ஒரு அரசியல் தீர்வுதான். "போர் என்பது வேறு மார்க்கங்கள் மூலம் அரசியலை தொடர்வது" என்று குளோஸ்விட்ஸ் கூறியுள்ளார்.

இன உணர்வுகளின் எழுச்சி இலங்கைக்கு மட்டும் தனித்துவமான ஒரு நிகழ்வல்ல. ஆனால், இந்நிகழ்வுப்போக்கு உலகெங்கணும் பரந்த அளவில் வியாபித்து வருகிறது. மிகப் பலம் பொருந்திய சோவியத் யூனியன் கூட இந்த எழுச்சிகளுக்கு மத்தியில் இப்பொழுது திணறிக் கொண்டிருக்கிறது.

பல தசாப்தாங்களாக தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் ஒடுக்கப்பட்டு, அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த ஒரு நிலையிலும் அந்தனைவிதமான அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் மண்டேலாவும் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் அந்த அரசாங்கத்துடன் பேசுவதற்கு இணங்க முடியுமானால், சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் (எல். ரி. ரி. ஈ. யை உள்ளிட்ட) குழுக்களுக்கும் ஒவ்வொன்றுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும் ஏன் முடியாது என்ற கேள்வி இங்கு எழுகிறது. இப்பொழுது அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் இம்முயற்சியில் முன்னோக்கி எடுத்து வைக்கப்பட்ட ஓரடி என்பதனை நாம் மறந்து விட முடியாது. நிலையான சமாதானத்தை அடைவதற்கு (ஏதாவது வழிகளிருப்பின்) இதுவே ஒரே வழி. போரினால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட நிகாராகுவாவிலும், நமீபியாவிலும் சுதந்திரமான தேர்தல்களை நடத்த முடியுமானால், சர்வதேச அமைப்புக்களினதும், அவதானிகளினதும் பங்குபற்றலுடன் வடக்கிலும் கிழக்கிலும் சுதந்திரமான, நியாயமான தேர்தலொன்றை நடத்தி வைக்கும் சாத்தியப்பாட்டை நாம் ஏன் மறக்க வேண்டும். மற்ற விடயங்களை வடக்கு - கிழக்கு மக்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும். கிழக்கைரோப்பாவிலும் உலகின் ஏனைய சில பகுதிகளிலும் இதுவரை காலமும் மௌனத்தில் துன்புற்று வந்த பெரும்பான்மையினர் இப்பொழுது தமது தலைவிதியை தமது கைகளிலேயே எடுக்கத் துணிந்துள்ளனர். இது வரையில் தமிழ் மக்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருந்து வந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், சில மாதங்களுக்கு முன்னர் ருமேனிய மற்றும் சில கிழக்கைரோப்பிய நாடுகளின் மக்களும் கூட அவ்வாறு பார்வையாளர்களாக மட்டும் தான் இருந்து வந்தார்கள். சுதந்திரமான, நியாயமான தேர்தலொன்று தமிழ் மக்களது ஜனநாயக படிமுறையைத் தூண்டிவிடும் பங்கினை வகிக்க முடியும். இவையனைத்துக்கும் மேலாக இன்றைய சூழலில், அரசியல் நிகழ்வுப் போக்கில் தமிழ் மக்களின் பங்காளிப்பை உறுதி செய்வதற்கு உள்ள ஒரே வழி, சர்வதேச அவதானிகளின் கண்காணிப்புடன் கூடிய (ஏதாவது) தேர்தலொன்றை நடத்துவதுதான். அநேகமாக, சமாதானத்தை அடைவதற்கு எமக்கு கிட்டியிருக்கும் இறுதி வாய்ப்பாக இது அமைய முடியும்.

இன்னும் சில நாட்களில், கடைசி இந்திய ஜவானும் எமது மண்ணை விட்டு வெளியேறியிருப்பார். இலங்கை அதன் வரலாற்றில் புதிய அத்தியாயமொன்றைத் துவங்கும். இனப் பிரச்சினையை சமாளிப்பது (அல்லது குழப்பியடிப்பது) மீண்டும் ஒரு முறை எமது முழுப் பொறுப்பிலும் வந்துவிடும். ஆனால், நாங்கள் என்றுமே நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. எமது தேசிய சிறுபான்மையினருக்கு நியாயமான ஓரிடத்தை அளிக்கத்தவறிமை, அதன் பின்விளைவாக எழுச்சியடைந்த போர்க்குணம் கொண்ட தீவிரவாதம், இந்தியத்தலையீடு வரையில் இட்டுச் சென்ற அண்மைக்கால வரலாற்று நிகழ்வுகள் என்பவற்றை நாங்கள் நன்கு மனதில் பதித்து, கருமாற்ற வேண்டிய தருணம் இப்பொழுது வந்திருக்கிறது. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும், நிரந்தரமான சமாதானத்துக்கு வழி சமைப்பதற்கும் எமக்கு இரண்டாவது சந்தர்ப்பம் இப்பொழுது கிட்டியிருக்கிறது. (சிவில், இராணுவ; சிங்கள, தமிழ், முஸ்லிம்; அரசாங்கம், எதிர்க்கட்சி ஆகிய) அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த கொள்கை வகுப்போரும், அரசியல்வாதிகளும் யதார்த்த நோக்குடனும் நிதானமிழக்காமலும், துணிவுடனும் செயல்படுவதற்கு வேளை வந்திருக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் இருக்கும் எமது சமூகம், அவர்களை அவ்விதம் செயற்படும்படி வற்புறுத்திக்கேட்க வேண்டும். ஒன்றுபட்ட ஒரு தேசம் என்ற முறையில் எமது நாளைய வாழ்க்கை, இன்று நாம் எடுக்கும் தீர்மானங்களிலேயே தங்கியிருக்கிறது. 'தேசங்களின் சுய நிர்ணய உரிமை' என்றி லெனின் கூறியதையும் 'நாம் சொல்வதெல்லாம் சமாதானத்துக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்பதுதான்' என்று லெனன் கூறியதையும் சேர்த்து செயற்படுவோம்.

திசரணி குணசேகர



படிப்பகம்

www.padippakam.com

## வடக்கு - கிழக்கு

# யோகியும் ஜனாதிபதியும் ..... மற்றும் மக்களும்

திரு. ''திலீப்'' யோகி எல். ரி. ரி. ஈ. இயக்க அரசியல் பிரிவான விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பின் தலைவர்களில் ஒருவர். இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கு வகிப்பவர். 'பொருளியல் நோக்கு' இதழுக்கு அளித்த பேட்டியொன்றில், தமது இயக்கத்தின் நிலைப்பாடு மற்றும் தற்போதைய சூழ்நிலையின் உட்சிக்கல்கள் என்பன குறித்து விளக்கினார்.

பெருந்தலைவர்



வே. பிரபாகரன்

**கேள்வி:**

இப்பொழுது நீங்கள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறீர்கள் அவர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்; அந்தக்கட்சி பல வருடங்களாக உங்களுக்கு எதிராக போராடியுள்ளது. அதுமட்டுமல்லாமல் அவர் ஒரு சிங்கள – பௌத்த தலைவர். அக்கட்சிக்குள்ளேயே பலகாலமாக செயற்பட்டு வந்த சிங்கள தீவிரவாத குழுவினதும் மற்றும் அதிகார பரவலாக்கத்துக்கு எதிரான பிரிவினதும் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் அவர் கருதப்படுகிறார். இந்த பின்னணியில் அவருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஏன் இணங்கினீர்கள்?

**பதில்:**

இந்த யுத்தத்தை தொடர்ந்தும் நடத்திச் செல்ல நாங்கள் விரும்பவில்லை. ஏனென்றால் பெருந்தொகையான குடிமக்கள் கொல்லப்பட்டு வந்தார்கள். உண்மையிலேயே அது ஒரு அவசியமற்ற யுத்தம். அதனால்தான் நாங்கள் தொடர்ந்து இந்திய அரசாங்கத்தினிடம் வேண்டுகோள் விடுத்து வந்தோம். பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென்று. ஆனால் இந்தியா அதற்கு நிபந்தனைகளை விதித்தது. ஒன்று, இந்திய–இலங்கை உடன்பாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது. எமது ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட வேண்டுமென்பது இரண்டாவது நிபந்தனை. எங்களோடு பேசுவதற்கு அவர்கள் விரும்பவில்லை. ஆனால், ஜனாதிபதி பிரேமதாஸா பதவிக்கு வந்ததும் எங்களை பேச்சுவார்த்தைக்கு வருமாறு பலமுறை அழைத்தார். அத்துடன் அவர் எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. அதனால், பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும், அதன் மூலம் தீர்வொன்றை காண்பதற்கும் இது நல்ல சந்தர்ப்பம் என்று நாங்கள் எண்ணினோம். ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் கூட, எங்களை சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு கொண்டு வருவதற்கு அவர் முயன்றார். ஆனால், அவ்வேளையில் இந்தியா அதற்கு இடம் தரவில்லை. நாங்கள் முதலில் இந்தியாவுடன் பேச வேண்டுமென்று அவர்கள் இலங்கை அரசாங்கத்தை நெருக்கி வந்தார்கள். ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் எங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். அதுதவிர, அவருக்கும் எங்களுக்கும் இடையில் பொது அக்கறை ஒன்றும் இருந்தது. இந்தியப்படை இங்கிருப்பதனை அவர் விரும்பவில்லை. நாங்களும் விரும்பவில்லை. அது ஒரு ஆக்கிரமிப்பு படையென்பது அவர் கருத்தாக இருந்தது. எங்களை ஒன்றாக இணைத்த காரணிகளில் அதுவும் ஒன்றாகும்.

**கேள்வி:**

ஒரு வருடத்துக்கு முன்னர் எல். ரி. ரி. ஈ. இயக்கம் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலவீனமுற்றுப் போயிருந்தது. ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் மாகாண சபையில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. அப்பொழுது, அநேகமாக எல். ரி. ரி. ஈ யின் கதை முடிந்துவிட்டது போல் தான் தெரிந்தது ஆனால், இப்பொழுது மீண்டும் உங்கள் கை ஓங்கியிருக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் உங்கள் இயக்கம் மீண்டும் ஒரு முறை ஆதிக்கம் பெற்று வருகிறது இது எவ்வாறு நடந்தது?

**பதில்:**

உண்மையில் நடந்தது இதுதான்; எங்கள் முதுகெலும்பை முறித்துவிட்டதாகவும், பெருமளவில் எங்கள் போராளிகளை கொன்றுவிட்டதாகவும் இந்தியா உலகுக்கு சொல்லியது. போராளிகள் 3000 பேர் கொல்லப்பட்டு விட்டதாக பிரசாரம் செய்யப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட போதிலும், இரண்டு வருட போரில் இயக்கத்தைச் சேர்ந்த 700 பேரை மட்டுமே நாங்கள் இழந்துள்ளோம். எங்கள் பலத்தை அதிகளவில் நாங்கள் இழக்கவில்லை. இந்த பிரசாரம் காரணமாக, இலங்கை அரசாங்கமும் இந்தியாவுடன் இருந்தது. எம்மால் அறிக்கைகள் வெளியிடப்பட்டபோது எவரும் அவற்றை வெளியிட முன்வரவில்லை. அதனால் உண்மைகள் வெளிவரவில்லை. மக்கள் அனைவரும் – இலங்கையரும் வெளிநாட்டினரும் எல். ரி. ரி. ஈ. முடிந்துவிட்டது என்ற மாயையை நம்பத்தொடங்கினர். எல்லோரும் யாழ்ப்பாண தீபகற்பத்தை மட்டும் தான் நோக்கினார்கள். நாங்கள் 1987 க்கு முன்னர் யாழ் தீப கற்பத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தோம். யாழ்ப்பாணம் மீதான எமது கட்டுப்பாடு தளர்ந்துவிட்டதனையடுத்து எமது கதை முடிந்துவிட்டது என்று பலர் நினைத்தார்கள். எங்களுடையது மரபுவழிதழுவிய இராணுவ அமைப்பொன்றல்ல; அது கெரில்லா அமைப்பு. அதனால் வடக்கிலும் கிழக்கிலும் ஊடுருவிப் பரந்து நாங்கள் இந்திய இராணுவத்துடன் போரிட்டோம்.

**கேள்வி :**

**இன்று உலகளாவிய ரீதியில் ஒரு பலம் பொருந்திய சக்தியாக இஸ்லாம் எழுச்சியடைந்து வருகிறது. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் இனரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தமது சொந்த அடையாளங்களை ஸ்தாபித்து வருகிறார்கள். இந்நிலையை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்? இன்று பல தீவிரவாத தமிழ் தலைவர்கள் முஸ்லிம் மக்கள் பற்றி கூறுவது, சில வருடங்களுக்கு முன்னர் தமிழர்களைப் பற்றி சிங்களத்தலைவர்கள் ('இடதுசாரி' மற்றும் 'முற்போக்கு' தலைவர்களும் இதில் அடக்கம்) கூறியதற்கு ஒப்பானதாகவே தெரிகிறது. இது, வரும் நாட்களில் வடக்கு - கிழக்கின் முக்கியமான பிரச்சினை யொன்றாக தலையெடுக்கும் என்று நீங்கள் எண்ணவில்லையா?**

**பதில் :**

வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்களும் தமிழர்களும் சேர்ந்தே வாழ்கிறார்கள். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அடுத்தடுத்து முஸ்லிம்-தமிழ் கிராமங்கள் அமைந்திருக்கின்றன. ஒரு பகுதியிலிருந்து ஐந்தாறு மைல்கள் போகும்போது மீண்டும் ஒரு முஸ்லிம் கிராமமும் அதனையடுத்து ஒரு தமிழ் கிராமமும் வருகின்றன அதனால், நாங்கள் இணைந்து கருமங்களைச் செய்வதற்கு, எவ்விதத்திலாகிலும் ஓர் ஒழுங்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தின் தலைவர்கள் சொன்னதற்கும் நாங்கள் சொல்வதற்கும்வித்தியாசம் இருக்கிறது. ஏனென்றால், மக்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராடிய புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். தமிழ் மக்களுக்காக மட்டும் நாங்கள் போரிடவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் வாழும் அனைத்து மக்களுக்காகவும் போராடினோம். இது முஸ்லிம்களையும் உள்ளடக்குகிறது. முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து பணிபுரிந்து, அவர்களை திருதியப்படுத்தக் கூடிய தீர்வொன்றைக் காணுவதே நாங்கள் செய்ய வேண்டியதாகும். அவர்கள் திருப்தியடையாவிட்டால், அதன் பின்னர் அவர் எந்த தீர்மானத்தையும் எடுக்க முடியும். நாம் அவர்கள் மீது எதனையும் பலவந்தமாக திணிக்கப் போவதில்லை. தமிழ் மக்கள் மீது பலவந்தமான தீர்வொன்றை திணிப்பதற்கு சில தலைவர்கள் முயற்சித்தது போல நாங்கள் செயற்பட மாட்டோம். முஸ்லிம் மக்கள் அனைவரையும் அழைத்து அவர்களுக்கு என்ன வேண்டும் என்று நாங்கள் கேட்போம். எது வேண்டுமோ அதனை நாங்கள் பேசி ஒழுங்கு செய்து கொள்வோம். முஸ்லிம் மக்கள் மீது தீர்வொன்றை திணிக்கப் போவதில்லை. இப்பொழுது சிலர் தங்கள் சொந்த அரசியல் ஆதாயம் கருதி பதற்ற நிலையை உருவாக்கி வருகிறார்கள். தமது சொந்த மக்களைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. வடக்கிலும் கிழக்கிலும் வாழும் அனைத்து மக்களுக்காகவும் நாங்கள் உயிர்த்தியாகங்கள் செய்திருக்கிறோம். அவர்கள் எம்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். எமது 17 வருட வரலாற்றில் இது வரையில் நாங்கள் யாரையும் காட்டிக்கொடுத்ததில்லை.

**கேள்வி :**

**அதாவது, பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக் காணும் பொருட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேசுவதற்கு நீங்கள் தயார்?**

**பதில்;**

அது குறித்து நாங்கள் இன்னமும் தீர்மானிக்கவில்லை. ஸ்ரீ. ல. மு. கா. உடன் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயங்குவதற்கு ஒரு காரணமிருக்கிறது. இந்தியா எமது மக்களை கொன்று குவித்துக் கொண்டிருந்தபோது, இந்தியாவுடன் இணைந்து செயலாற்றியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில்லையென்று நாங்கள் தீர்மானித்திருந்தோம். புதிய தேர்தலொன்றில் அவர்கள் போட்டியிட வேண்டும். அவர்கள் தெரிவு செய்யப்பட்டால், மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் நாங்கள் அவர்களுடன் பேச முடியும். வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல். முறையாக இடம் பெறவில்லை. ஸ்ரீ. ல. மு. கா. இந்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டது. அவர்கள் இந்தியாவிலிருந்து பயிற்சியும், பணமும் பெற்றார்கள். இந்திய இராணுவம் தமது மக்களை கொன்றபோது அவர்கள் மௌனம் சாதித்தனர். இப்பொழுதும் கூட அவர்கள் இந்தியாவையோ ஈ. பி. ஆர். எப். இயக்கத்தையோ தாக்குவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

நான் கிழக்கு மாகாணத்துக்கு சென்றிருந்த போது பெருந்தொகையான மக்களுடன் - முஸ்லிம் மக்களுடன் – பேசினேன். முஸ்லிம் காங்கிரஸ் மீது அவர்கள் விரக்தியடைந்துள்ளனர். மு. கா. தமது உரிமைகளுக்காக போராடுகிறது என்று முன்னர் இவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் நேர்மையானவர்கள் அல்ல என்பதனை இப்பொழுது இம்மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். தமது நலன்களையன்றி இந்தியாவின் நலன்களையே இவர்கள் பேணி வந்திருக்கிறார்கள் என்பது இப்பொழுது தெளிவாகி இருக்கின்றது. ஆகவே, தேர்தலின் பின்னர் தெரிவு செய்யப்பட்டால், மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் நாங்கள் அவர்களுடன் பேசுவோம்.

**கேள்வி :**

**ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் முன்வைத்த 19 அம்ச கோரிக்கை பற்றி என்ன கருதுகிறீர்கள்? தமிழ் மக்களின் பல பொதுவான கோரிக்கைகளை அது உள்ளடக்கவில்லையா?**

**பதில் :**

இது பற்றிப்பேச நான் விரும்பவில்லை. சில தனியாட்களை மட்டும் கொண்ட கட்சிகளும் கூட யோசனைகளை சமாப்பித்து வருகின்றன. ஆகவே அவற்றை யோசனைகளாக நாம் கருதுவதில்லை. மக்களின் பிரதிநிதிகளே கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும். இப்பொழுது நிறைய கட்சிகள் முளைத்திருக்கின்றன. இவை எந்த வகையிலும் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதில்லை. ஓரிருவரே இக்கட்சிகளில் இருக்கிறார்கள். இவர்கள் ஏராளமான யோசனைகளையும், கருத்துக்களையும் முன்வைக்கிறார்கள். அதனால் இந்த யோசனைகளைப்பற்றி எம்மால் கருத்துக்கூற முடியாது.

மாகாண சபை தேர்தலை நடத்துமாறு நாங்கள் அரசாங்கத்தை கேட்டு வருகிறோம். அத்தேர்தலில் யார் தெரிவு செய்யப்படுகிறார்களோ அவர்களே மக்களின் பிரதிநிதிகள். நாங்கள் மக்களை கலந்தாலோசிக்க வேண்டும். அதன் பிறகே நிகழ்ச்சித்திட்டமொன்றை எங்களால் முன்வைக்க முடியும்.

**கேள்வி :**

**சர்வதேச அவதானிகளால் கண்காணிக்கப்படும் சுதந்திரமான, நியாயமான தேர்தலொன்றை எதிர்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா?**

**பதில் :**

சர்வதேச அவதானிகளால் கண்காணிக்கப்படும் தேர்தலொன்று எமக்கு வேண்டும் என்று ஏற்கனவே எமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறோம். மக்களை சந்திப்பதில் எங்களுக்கு எவ்வித தயக்கமுமில்லை. சுதந்திரமான, நியாயமான தேர்தல் இடம் பெற்றுள்ளது என்பதனையும் எவரும் எவ்வித பயமுறுத்தலுமின்றி போட்டியிட முடிந்தது என்பதனையும் உலகம் தெரிந்து கொள்ள வேண்டும், மக்களின் சட்டபூர்வமான பிரதிநிதிகள் நாங்கள்தான் என்பதனையும் உலகுக்கு காட்ட வேண்டும்.

**கேள்வி:**

**நீங்கள் மக்களுக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? எந்த நோக்கத்துக்காக மக்களிடமிருந்து ஓர் ஆணையை நீங்கள் கேட்கிறீர்கள்?**

**பதில் :**

நாங்கள் ஏற்கனவே பிரச்சார வேலைகளை தொடங்கியிருக்கிறோம். மக்களுக்கு நாங்கள் சொல்வது இதுதான்: மாகாண சபையை ஓர் இடைக்கால தீர்வாக ஏற்றுக் கொள்ளுங்கள். இது ஒரு நிரந்தரத் தீர்வல்ல. மாகாண சபை போதிய அதிகாரங்களைப் பெற்றிருக்கவில்லை என்பதனை நாங்கள் அறிவோம். அதிகாரப்பரவலாக்கல் போதிய அளவில் இடம் பெறவில்லை. நாங்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர், மக்களை கலந்தாலோசித்து, எமது பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்துக்கொள்வதற்காக ஒரு திட்டத்தை வகுப்போம்.

எமது 17 வருட வரலாற்றில், நாங்கள் ஒரு போதும் மக்களை கைவிட்டு ஓடிவிடவில்லை என்பதனை எமது மக்கள் நன்கு அறிவார்கள். அதனால் நாங்கள் எதைச்சொன்னாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். அது தான் சரியான வழியென்று ஒப்புதல் தருகிறார்கள். ஜனநாயக வழிக்கு வருவதற்கு எங்களுக்கு உள்ள ஒரே வழி மாகாண சபை முறை தான்; வேறு மாற்று வழியில்லை. நாங்கள் முதலில் அதற்குள் வரவேண்டும். மக்களின் சட்டபூர்வமான பிரதிநிதிகள் நாங்கள் தான் என்பதனை உலகுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். அப்பொழுது தான் எங்களுக்கு தீர்வொன்றுக்காக உழைக்க முடியும். நாங்கள் மக்களுக்கு இதைத் தான் சொல்லி வருகிறோம்.

**கேள்வி ;**

**நீங்கள் மாகாண சபை அரசினை அமைத்துக்கொள்ளும் பட்சத்தில் இந்தியாவுடன் குறிப்பாக புதிய இந்திய அரசாங்கத்துடன் எந்தவிதமான உறவினை வைத்திருப்பீர்கள்?**

**பதில் :**

சுவாரஸ்யமான கேள்வி. அமைதிப்படை விலகிய பின்னர், இந்தியா குறித்த இலங்கையின் அணுகுமுறை

( 22 ம் பக்கம் பார்க்க )



படிப்பகம்

www.padippakam.com



# பிரச்சினை: அதிகார பரவலாக்கல்

சுரேஷ் பிரேமச்சந்திரன்



கந்தையா "சுரேஷ்". பிரேமச்சந்திரன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவர். பலஸ்தீனிய கெரில்லா தலைவரான அபு ஜிஹாத்தின் கீழ் லெபனானில் இராணுவ பயிற்சி பெற்றவர். இப்பொழுது இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினர்.

அரசாங்கத்தை தான் பயன்படுத்துவதாக எல். ரி. ரி. ஈ. நினைக்கின்ற அதே வேளை, அரசாங்கமோ எல். ரி. ரி. ஈ. யினை தாம் பயன்படுத்தலாமென நினைக்கின்றது. அரசாங்கம் என்ன செய்ய திட்டமிட்டுள்ளதோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்திய அமைதிகாக்கும் படையினர் வெளியேறிக் கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு தற்போதைய நிலையினை எடுத்துக் கொண்டால், எல். ரி. ரி. ஈ. அவர்கள் வெளியேறுவதால் ஏற்படும் வெற்றிடத்தினை நிரப்பிக் கொண்டு வருகிறது என்றே கூறவேண்டும். ஆயுதங்களுடன் எதுவித கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக எல். ரி. ரி. ஈ. யினர் நடமாடுகிறார்கள் 'இவர்களுக்கு இலங்கைப் படையினர் உதவி புரிந்து வருகிறார்கள். இதே போன்று மற்றைய இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் நடமாட முற்படுவார்களேயானால் நிச்சயம் அவர்கள் படையினரால் கைது செய்யப்படுவர்.

இன்று எல். ரி. ரி. ஈ. யினர் வரிகள் அறவிடத் தொடங்கி விட்டனர். ரூ. 150 கோடி சேர்ப்பதே அவர்களது இலக்கு என நான் நினைக்கிறேன். விமானங்களை சுட்டுவீழ்த்தக் கூடிய ஏவுகணைகளை வாங்குவது தான் அவர்களது விருப்பம். இவ்வாறு தான் எல். ரி. ரி. ஈ. யினர் மக்களுக்கு கூறிவருகின்றனர். இதைவிட இளைஞர்களை தமது அணியில் சேர்த்து, பயிற்சியும் வழங்குகிறார்கள். இவ்வாறு சேர்ப்பதற்கு பலாத்காரம் கூட பிரயோகிக்கப்படுகிறது. இந்தப் பின்னணியில் எல். ரி. ரி. ஈ. யினரது இறுதி நோக்கம் தான் என்ன? அரசாங்கத்திற்கு எல். ரி. ரி. ஈ. யினர் என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்று தெரியாமலில்லை. இருந்தும் ஜனாதிபதி பிரேமதாசா ஏன் தான் அவர்களுக்கு அதிகளவு சுதந்திரத்தைக் கொடுத்துள்ளாரோ எமக்குப் புரியவில்லை. காலப்போக்கில் அரசாங்கத்தினால் எல். ரி. ரி. ஈ. யினை கட்டுப்படுத்த இயலாது போய்விடுமோ தெரிய வில்லை.

எல். ரி. ரி. ஈ. யினர் தாம் தேர்தல்களை எதிர்கொள்ள தயாராயிருப்பதாக கூறுகின்றனர். ஆனால் அதேவேளை மாற்று இயக்கங்களை, கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களையோ, ஆதரவாளர்களையோ கொன்றும் வருகின்றனர். ஆயுதங்களைதாம் வைத்திருக்கப் போவதாக பகிரங்கமாகவே கூறி வருகின்றனர். இந்த நிலையில் நாட்டில் உடனடியாக சமாதானம் ஏற்படுமென நாம் எதிர்பார்க்க முடியாது. ஜனநாயக ரீதியிலான அமைப்பினை உருவாக்க நாம் உழைத்தோம். தமிழ் மக்களுக்கு தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் ஒரு வாய்ப்பினை அளிக்க நாம் விரும்பினோம். இதனாலேயே நாம் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்துவதை ஆதரித்ததுடன், அவற்றிலும் பங்கு பற்றினோம். மற்றைய குழுக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டோம். ஆனால் அந்த நேரம் ஒருவருமே முன்வரவில்லை. விசேடமாக எல். ரி. ரி. ஈ. யினர். ஈரோஸ் அணியினர் கூட முன்வரவில்லை. ஆனால் மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர், பாரளுமன்றத் தேர்தலில் 10 கட்சிகள் பங்குபற்றின. இது ஜனநாயக வழிமுறைகளில் நாம் பிரவேசித்ததன் பின்னர் நடந்தாகும்.

இப்போது எல். ரி. ரி. ஈ. யினர் புதிதாக மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். 1988 மாகாணசபை தேர்தல்களின் பின்னர் எல். ரி. ரி. யினர் இந்தியப்படையினரின் கடுந்தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கின்றனர். இராணுவ ரீதியாக பார்க்கின் அவர்கள் மிகவும் பலவீனமுற்ற நிலையிலேயே இருந்துள்ளனர். அரசியல் ரீதியாகவும் அவர்கள் அந்நியப்பட்ட நிலையிலேயே இருந்துள்ளனர். ஏனென்றால், மாகாண சபை ஈ. பி. ஆர். எல். எப். வசமே இருந்துள்ளது. இந்த நிலையிலேயே அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேச்சு வார்த்தைக்கு முன் வந்தனர். அவரும் இந்திய அமைதிப் படையினர் வாபசாக வேண்டுமென்ற



படிப்பகம்

www.padippakam.com

கோரிக்கை போன்ற ஏனைய கோரிக்கைகளுக்கும் சம்மதித்துள்ளார்.

ஆனால் எல். ரி. ரி. ஈ.யினர் மாறிவிடவில்லை. கடந்த ஒரு வருட காலமாக மாகாண சபை நிருவாகத்தின் செயற்பாட்டினைத் தடுக்கவே அவர்கள் முயற்சித்தனர். இந்த தடைகள், இடையூறுகளுக்கு மத்தியிலும் ஒருவாறு நாம் செயலகத்தை நிறுவி சில வேலைகளைச் செய்துள்ளோம். ஆனால் இலங்கை அரசாங்கம் மாகாணசபைக்கு அதிகாரங்களை பரவலாக்க விரும்பவில்லை. நீங்கள் வீதியொன்றினை அமைக்கவோ அல்லது ஆசிரியர்களை நியமிக்கவோ எதனையுமே செய்யமுடியாது. இது பற்றி நாம் கேட்கும் போது, அதிகாரங்கள் முற்றாக பரவலாக்கப்பட்டு விட்டதாகவும், பிரச்சினை என்னவென்றால் ஈ. பி. ஆர். எல். எப். க்கு எவ்வாறு ஆட்சி செய்வது என்று தான் புரியவில்லை என்றும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இந்த நிலையில் எவ்வாறு மாகாண சபை இயங்க முடியும்? இப்போது சபையைக் கலைக்க அரசாங்கம் விரும்புகிறது. எல்.ரி.ரி.ஈ.யும் சபை எவ்வாறேனும் கலைக்கப்பட்டு விட வேண்டுமென்பதையே விரும்புகிறது. ஈரோசும் இதனையே எதிர்பார்க்கிறது. ஆனால் முதலமைச்சரின் இணக்கமின்றி அரசாங்கத்தினால் சபைகளைக் கலைக்க முடியாது.

அதிகார பரவலாக்கம் குறித்து ஆலோசனைக்கென முதலமைச்சரின் 'புகழ் பெற்ற இந்திய விஜயம்' கூட அரசாங்கம் அனுமதித்த ஒன்றுதான். இதற்கு அரசாங்கமே அனுமதி கொடுத்தது. அவர் டெல்லிக்கு அழைக்கப்பட்டார். இலங்கை அரசியலில் இந்தியாவுக்கு பங்கில்லை என்று நீங்கள் கூற முடியாது. அதுவும் இந்திய அமைதிப்படையினரின் பிரசன்னம் இங்கிருக்கையில். எனவே அதிகாரப்பரவலாக்கம் குறித்த ஆலோசனைக்கு அரசாங்கத்தின் அனுமதி பெற்றே அவர் சென்றார். அவர் தேநீர் விருந்துக்காக அங்கு செல்லவில்லை. டெல்லி அழைத்தது. எனவே அவர் சென்றார். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக இந்தியா எமக்கு உறுதி அளித்திருந்தது. ஆனால் இலங்கை அரசாங்கம் இதனைச் செய்ய விரும்பவில்லை. நாம் என்ன செய்வது? இந்தச் சூழ்நிலையிலேயே வரதர் டெல்லி செல்ல வேண்டியேற்பட்டது.

இப்போது ஜனாதிபதி பிரேமதாசா எல். ரி. ரி. ஈ. யுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு ஈ. பி. ஆர். எல். எப். இப்போது வேண்டியதில்லை. இது சமாதானம், அமைதியில் முடிந்தால் நாங்கள் சந்தோஷப்படுவோம். ஆனால் இது நடக்குமென்று நான் எண்ணவில்லை. ஈ. பி. ஆர். எல். எப். நீடித்திருக்க வேண்டுமா அல்லது எல்.ரி.ரி. ஈ. நீடித்திருக்க வேண்டுமா என்பது அக்கறைக்குரிய ஒன்றல்ல. மாகாணசபைக்கு அதிகாரமளிக்க இலங்கை அரசாங்கம் தயாரா என்பதே கேள்வி. அதிகாரங்களை பரவலாக்க தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் மறுத்துவந்தால், அரசாங்கத்துடன் எல். ரி.ரி.ஈ. மோத நேரிடும். இது நடக்க சாத்தியங்கள் உள்ளன. ஒருவராலும் இதனைத் தவிர்க்க முடியாது. இலங்கை அரசாங்கம், ஈ. பி. ஆர். எல். எப். புடன் விரும்பியவாறு நடந்து கொள்ளலாம். இவை எதுவும் முக்கியமல்ல. முக்கியம் என்னவென்றால் அதிகாரபரவலாக்கலை எவ்விதம் செய்வார்கள் என்பதைப் பொறுத்ததே.

இந்த நிலையில், ஒரே ஒரு வழிதான் உண்டு. தனிநாடு தான் அது. சர்வதேச அபிப்பிராயம், விசேடமாக இந்திய அபிப்பிராயம் எல்லாம் இது தான். அரசியல்வாதிகள் மாத்திரமின்றி டெல்லி, சென்னையிலுள்ள புத்திஜீவிகள், சாதாரண ஜனங்கள் எல்லோரும் தனி நாடே இதற்குரிய வழி எனக் கருதுகிறார்கள். மேற்கு நாடுகளிலும் இதே விதத்தில் தான் சிந்திக்கிறார்கள். எல்லாமே இந்த அரசாங்கத்தில் தான் தங்கியுள்ளது. அரசாங்கம் அதிகாரப்பரவலாக்கலைச் செய்ய முன் வருமா அல்லது வராதா என்பதே கேள்வி. அதிகாரப் பரவலாக்கலுக்கு உடன்படுவார்களேயானால் நாடு பிளவடையாது. இல்லையேல் நாடு இரண்டாகும்.

ஈ. பி. ஆர். எல். எப். சபையைக்கலைக்கப் போவதில்லை. சபைக்கான அதிகாரபரவலாக்கலுக்கு இலங்கை அரசாங்கம் முன்வருமாயின், நாங்கள் கலைக்க யோசிப்போம். இல்லையேல் இந்த சபை தொடரும். எல். ரி. ரி. யினர் ஜனநாயக வழிமுறைகளில் பிரவேசிக்க விரும்பினால், இலங்கை அரசாங்கம் அதற்கேற்ற சூழ்நிலைகளை தோற்றுவிக்க வேண்டும். இதே வேளை தேர்தலில் கலந்து கொள்ளவுள்ள குழுக்களிலொன்று அதிக அளவிலான ஆயுதங்கள் சகிதம் இருக்கையிலே எவ்விதம் சுதந்திரமும் நீதியுமான தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கலாம்? இவை முதலில் தெளிவு படுத்தப்பட வேண்டும். இவ்வாறில்லையேல் தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை. ஒரு பக்கம் எல். ரி. ரி. ஈ. ஜனநாயக வழி முறைகளில் நாட்டம் கொண்டுள்ளதாக கூறும் அதே வேளை சாகுள் அறவிட்டும்' பயிற்சி அளித்தும், ஏவுகணைகளை வாங்கப் போவதாவும் கூறி வருகிறது. இதன் அர்த்தம் தான் என்ன? இலங்கைக்கும் இந்தியாவுக்குமான செப்டெம்பர் 18 ஆம் திகதியகூட்டு அறிக்கையில், எல். ரி. ரி. ஈ யினரை சமாதான குழுவில் பங்கு கொள்ள

( 29 ம் பக்கம் பார்க்க )



படிப்பகம்

www.padippakam.com

# வடக்கு - கிழக்கு
# சமாதானத்துக்கான கடைசி சந்தர்ப்பம்

வி. பாலகுமார்

**வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு சமாதானம் முதல் தேவை என்கிறார் பாலகுமார். ஈழவர் ஜனநாயக முன்னணியின் (முன்னர் ஈரோஸ் இயக்கம்) பொதுச் செயலாளர் அவர். நாட்டின் தற்போதைய நிலையை அலசி, சமாதனத்தை நிலை நிறுத்துவதற்கான வாய்ப்புகளையும், அவசியத்தையும் விளக்குகிறார்.**

எங்களது பிரதேசத்தைப் பொருத்தவரை இது ஒரு புதிய காலகட்டமாகும். இந்திய அமைதிப்படையினர் வெளியேறிக் கொண்டிருக்க எல். ரி. ரி. ஈ. சக்திவாய்ந்த நிலையிளுள்ளது. மாகாண சபை செயலிழந்துள்ளது. அதன் செயற்பாடு திருகோணமலை நகருடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கும் தமிழ் குழுக்களுக்கும் பிரதானமாக எல். ரி. ரி. ஈக்கும் சுமுகமான முறையில் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. இதனால் கொஞ்சக்காலம் அமைதி நிலவுமென்று நினைக்கிறேன்.

ஈ. பி. ஆர். எல். எப். பைப் பொறுத்த வரை அவர்களது ஆட்டம் முடிந்து விட்டது. எங்களுக்கும் எல். ரி. ரி. ஈ.க்கும் சில பிரச்சனைகளுள்ளன. அவற்றை நீக்கும் பணியில் இப்போது ஈடுபட்டுள்ளோம். இதனால் ஏதேனும் குழு மோதல்கள் ஏற்படவும் வழியில்லை. இலங்கை இராணுவத்துக்கும் தமிழ் குழுக்களுக்குமிடையேயும் மீண்டும் போர் ஏற்படுவதற்கான சாத்தியம் மிகவும் குறைவு. அங்கொன்று இங்கொன்றாக ஏதேனும் மோதல்கள் ஏற்பட்டாலும் கூட, முழு அளவில் பார்க்கையில் அமைதி நிலவுமென்றே நினைக்கிறேன்.

திட்டவட்டமாக கூற வேண்டியது ஒன்றுள்ளது. இந்தக்கட்சியிலோ, அரசிலோ எமக்கு நம்பிக்கையில்லை. எல்லாமே வாக்குறுதியளிக்கும். அதிகாரங் கொண்ட ஒருமனிதரிலேயே தங்கியுள்ளது. ஜனாதிபதி பிரேமதாசாவே அவர். கட்சியிலிருந்தோ அல்லது அரசிலிருந்தோ அவர் வேறானவர். இவ்வாறு நான் கூறுவது உங்களுக்கு ஆச்சரியத்தையேற்படுத்தலாம். ஆனால் இது ஒரு அப்பட்டமான உண்மையாகும். நாங்கள் அவரில் நம்பிக்கை வைக்கலாமென்பதை உணருகிறோம். அவரது சொற்களில் மாத்திரமின்றி, செயற்பாட்டிலும் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதுவரை அவர் எதையும் பெரிதாகச் செய்து விடவில்லை. இருப்பினும் நாம் சாவகாசமாக அவருடன் பேசி எமது பிரச்சினைகளை தீர்க்கலாமென நினைக்கிறோம், இதனால் தமிழ் குழுக்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையே பேச்சு வார்த்தைகள் தொடர வாய்ப்புண்டு. இதனைக் குழப்ப நாம் விரும்புவில்லை.

இதனால் பிரேமதாசாவின் பொருளாதார கொள்கைகளையும் நாம் ஆதரிக்கிறோமென்றில்லை. பிரச்சினை என்னவென்றால், சர்வதேச ரீதியாக பெரும் மாற்றங்கள் இன்று நிகழ்கின்றன. இரண்டு முகாம்கள் தான் எப்போதும் இருக்குமென்று நாம் நினைத்தோம். ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. நாம் மிகவும் குழப்பமடைந்துள்ளோம். இதனால் வலது சாரியென்றோ அல்லது இடதுசாரியென்றோ அல்லது முற்போக்காளரென்றோ பெயரிடுவதில் முன்னரைப் போல நாம் தீவிரமாயில்லை. எமக்கு பொருத்தமானதை நாம் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. பிரதானம் என்னவென்றால் எமது மக்களுக்கு உதவ வேண்டும். வடக்கு, கிழக்கு அபிவிருத்தி என்ற விடயம் வேறாக கவனிக்கப்பட வேண்டிதாகும். மாகாணங்களுக்கு அபிவிருத்தி தொடர்பாக வேறாக திட்டம் அவசியமானது. கொழும்பை எல்லாவற்றிற்கும் நம்பியிருக்க முடியாது. எமது பொருளாதார திட்டம் வேறானதாக இருக்க வேண்டும். மத்தியின் பொருளாதார திட்டத்துடன் இதனை இணைப்பதை நாம் விருப்பவில்லை..

வெளிநாடுகளில் வாழும் எம்மவரிடம் போதுமான மூலதானமுள்ளது. (எமது பகுதிகளில் பல் தேசிய நிறுவனங்கள் எது விதத்திலும் அவசியப்பட மாட்டா.) அவர்களிடம் நாம் எமது பகுதிகளுக்கு வந்து மூலதனத்தை இடுமாறு கோரியுள்ளோம். இதனாலேயே எமக்கு அமைதியும் சமாதானமும் நிலவும் காலம் அவசியமாயுள்ளது. 1948 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு, கிழக்கு எத்தகைய அபிவிருத்தியையும் கண்டதில்லை. அவை விருத்தியடையாத, சலுகைகளற்ற பிரதேசங்களாகவே இருந்துள்ளன. 1984க்குப் பிறகு இருந்த கொஞ்ச நஞ்சமும் அழிக்கப்பட்டுவிட்டன. எமது பிரச்சினைகளை ஒருதுளி உதவியினைக் கொண்டு சரிக்கட்டிவிட முடியாது. நாங்கள் எங்கள் மக்களது மனோபாவங்களை மாற்றுவதிலிருந்து அபிவிருத்தி குறித்த அவர்களது எண்ணப் போக்குகளை சீர் செய்வதிலிருந்து ஆரம்பித்தல் வேண்டும். நாம் மிகப் பிரமாண்டமான, பாரிய ஆராய்ச்சி திட்டத்தினையும் அவசியம் செய்தாக வேண்டியுள்ளது. சகலவற்றை



படிப்பகம்

www.padippakam.com

யும் குறித்து அரை குறையற்ற, முழுமையான ஆராய்ச்சியில் நாம் உடனடியாக ஈடுபட்டாக வேண்டும். இதையடுத்தே அபிவிருத்தி தொடர்பாக எத்தகைய, அணுகுமுறைகளை, உபாயங்களை கைக் கொள்ள வேண்டுமென்பதை நாம் கண்டு கொள்ளலாம். இப்போது பிரச்சினைகள் பல்வேறு நிலையிலும் பல்கிப் பெருகியுள்ளன. எமது நிலம், கனிப்பொருள், கடல் வளங்கள், மண் அரிப்பு மற்றும் தண்ணீர் பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகள் குறித்தும் ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். எமக்கு அறிஞர்கள், ஆராய்ச்சியாளர், விஞ்ஞானிகள் போன்றோரது உதவிகளும் ஒத்துழைப்புகளும் இதற்கு வேண்டும். எமது அபிவிருத்தித் திட்டமானது, அதற்கான எமது நிகழ்ச்சி நிரலானது, மிக மிக வேறுபட்ட ஒன்றாகும் என்பதை திரும்பவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். எமக்கு விசேட கவனிப்பு இருத்தல் வேண்டும்.

மார்க்சியவாதிகள் என்ற வகையில் இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர் எமது தேசிய விடுதலை போராட்டத்திற்கு மாத்திரமின்றி முழு இலங்கையில் புரட்சிக்கும் உந்து சக்தியாக பலம் சேர்ப்பார்களென்று நாம் எண்ணியிருந்தோம். மேலும், இனரீதியாக இயங்கும் இலங்கை அரசாங்கம், இன அம்சமான - அதாவது அவர்களும் தமிழர்கள் என்பதை – மக்களை ஒடுக்குவதற்கு பயன்படுத்தினார்களென நாம் அப்போது எண்ணியிருந்தோம். 1983 ல் இருந்து இன வன்செயல்களின் போது, இவர்களும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே தாக்கப்பட்டார்கள், இதனால் எம்மை ஒடுக்குபவர்களுக்கு எதிராக நாம் இணைந்து போராட வேண்டுமென எண்ணினோம்.

ஆனால் இன்று எமது முன்னைய நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்கிறோம். மலையக தோட்டங்களிலே எமது செயற்பாடுகள் தொடர்கின்றன. ஆனால் வடக்கு, கிழக்கு நடவடிக்கைகளின் ஒரு பகுதி என்ற வகையிலல்ல. இந்த இரண்டு பகுதிகளது அபிவிருத்திகளும் வெவ்வேறான இரு திக்குகளில் நடப்பன. வடக்கு – கிழக்கு மலையகம் என்ற இரண்டிற்கும் இருந்த இடைவெளி, வேறுபாடு அப்போது எமக்கு புரியவில்லை. நாங்கள் அப்போது இளைஞர்களாக இருந்தோம். புதுமை நாட்டம் மிக்கவர்களாகக் கூட இருந்திருக்கலாம். வடக்கு கிழக்கிலிருந்து வேறுபட்டதான ஒரு வகை தன்னாதிக்கமுள்ள தாயகம் மலையகப்பகுதிகளில் இருப்பது அவசியமொன்று உணர்கிறோம்.

கிழக்கில் பிரதான பிரச்சினை காணியாகும். தமிழர்களும் முஸ்லிம்களும் அருகு அருகாக வாழ்கிறார்கள். சில முஸ்லிம்கள் செல்வந்தர்களாக இருப்பதால், தமிழர்களிடமிருந்து அவர்கள் காணிகளை வாங்குகிறார்கள். இதனால் பதற்றம், பீதி ஏற்படுகிறது. இதனை பல்வேறு அடிப்படைக் குழுக்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. முஸ்லிம்கள் எம்மிலிருந்து வேறுபட்டவர்கள் தான். அவர்களுக்கு இருக்கும் வேறுபாடுகள் தனித்துவமானவை. அவர்களுடைய கலாசாரமும், சமயமும் எம்மிலிருந்து வேறுபட்டனவாகும். அவர்களுடைய அரசியல் சார்புகள், ஈடுபாடுகள் எத்தகையனவாக இருப்பினும், முஸ்லிம்கள் என்ற ரீதியில் அவர்களுக்குரிய தனித்துவமான அம்சங்களே அவர்களை ஒன்றாக இணைக்கின்றன. ஆனால் முஸ்லிம்களுக்கு, தனியான முஸ்லிம் தாயகம் என்ற கோட்பாட்டில் கதைப்பதானது இன்னும் முதிராத, காலத்திற்கு முந்தியதொன்றாகவே நான் கருதுகிறேன். முஸ்லிம்கள், தமிழர்களுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்று நாம் ஒரு போதும் எண்ணவில்லை. அதேவேளை முஸ்லிம்களுக்கு தனியான தாயகம் என்பதையும் நாம் ஏற்கவில்லை. இத்தகைய இரு அதி தீவிரப் போக்குகளையும் நாம் நிராகரிக்கிறோம்

நாம் எப்போதும் அல்பேனியப் போக்கினை ஆதரித்து வந்துள்

பாலகுமார் ஈரோஸ் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகிறார்.







படிப்பகம்

ளோம். இப்போது நாம்குழப்ப மடைந்துள்ளோம். 1987 வரை மேற்கு நாடுகளிலிருந்து உதவியொன்றும் பெறப் போவதில்லையென எம்மால் தெளிவாகக் கூற முடிந்தது. ஆனால் சர்வதேச மாற்றங்கள் இத்தகைய நிலைக்கப் போக்கினை சாத்தியமற்ற தொன்றாக்கி விட்டது. இன்று நண்பர்களை ஏற்படுத்திக்கொள்கிறோம். எமது கொள்கைகளை யிட்டு மீண்டும் சிந்திக்கிறோம். தயான், விஜே சிந்தனை குறித்து எழுதுவதைப் போன்று ஏதாவது புதியதொன்றினை நாம் கண்டு பிடித்தாக வேண்டும். நாம் வைதிக மனப்பான்மை கொண்டவர்களல்ல. வறட்டுத்தனமாக கொள்கைகளை தூக்கிப்பிடிப்பவர்களுமல்ல. மேற்கு நாடுகளிடம் உதவி பெறக் கூடாது என்று இனிமேலும் நாம் எதிர் பார்க்கப் போவதில்லை. நாம் தாராள போக்கினை கைக்கொள்கிறோம்.

அமைதி ஏற்படுமானால் புனரமைப்பு பணிகளில் ஈடுபட விரும்புகிறோம். விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிப்பணிகளிலும் ஈடுபடலாம். சிலவேளை இது சாத்தியப் படுமோ தெரியவில்லை. ஷாவுக்கு எதிராக, கொமெய்னியை ஆதரித்த பெடாஈஸ்க்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரிந்தது தான். கொமெய்னிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்ததும் பெடாஈஸ்களை அழித்தொழித்தார்கள். எல். ரி. ரி. ஈ. யினர் சிலவேளைகளில் இதையே எமக்கும் செய்து விடலாம். நாங்கள் பலம் வாய்ந்த குழுவல்ல. எங்களை பாதுகாக்க எம்மால் முடியாது. இதனால் நாங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எப்'ஐ ஆதரிப்பதன் மூலம் சிங்கள இடதுசாரிகள் பெரிய தவறினைச் செய்கிறார்கள். எமது பகுதிகளில் என்ன நடக்கிறது என்பது அவர்களுக்கு தெரியாது. ஈ. பி. ஆர். எல். எப். க்கு மக்கள் ஆதரவு கிடையாது. எல். ரி. ரி. ஈ.க்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சு வார்த்தையை நாம் ஆதரிக்கிறோம். நீண்ட காலமாக இந்த இடதுசாரிகள் தீவிரவாதக்குழுக்களிடம் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையிலீடுபடுங்கள் என்று வெறுமனே சொல்லி வந்ததைத்தவிர உருப்படியாக வேறென்ன செய்தார்கள்? எல். ரி. ரி. ஈ. க்கும் அரசாங்கத்துக்குமான பேச்சுவார்த்தையினை எதிர்க்கும் அவர்களது இன்றைய நிலைப்பாடு முற்றிலும் ஆஷாடபூதித்தனமான ஒன்றாகும். விஜய இத்தகைய பேச்சு வார்த்தையினை ஆதரித்தார். நாங்கள் அரசாங்கத்துடன் பேச வேண்டுமென்றே அவர் எப்போதும் கூறி வந்தார். பிரச்சினை தொடர்பாகவும், பேச்சு வார்த்தை குறித்தும் இடதுசாரிகளின் இன்றைய நிலைப்பாடு முற்போக்கான தொன்றல்ல. படுபிற்போக்குத் தனமானது. பேச்சுவார்த்தையினை ஆதரிப்பது என்பது எல். ரி. ரி. ஈ. யினை ஆதரிப்பது என்றாகாது.

இந்தியா எம்மை ஆதரிக்குமமென நாம்நினைத்திருந்தோம். ஆனால் அவர்கள் எமக்கு ஆதரவு தரவில்லை. எமக்கு நண்பனோ அல்லது எதிரிதானோ என்று எம்மால் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாத மூன்றாவது சக்தியில் நம்பிக்கை வைப்பதைக் காட்டிலும், எதிரியை நம்புவது பயனுள்ளதென எல். ரி. ரி. ஈ. நினைக்கின்றது. இந்த நிலையில் தென் இலங்கை எதிர்க் கட்சிகள் மேலும் காலந்தாழ்த்தாது, இந்த நடவடிக்கையினை ஆதரிக்க வேண்டும். அதாவது பேச்சு வார்த்தையினை ஆதரிக்க வேண்டும். பிரேமதாசாவுக்காக அவர்கள் இதனை எதிர்க்கிறார்கள். இதற்கு நாம் என்ன செய்யலாம்? அவர் இந்தப்பதவியினை வகிப்பது எமது தவறல்ல. அவர் முற்போக்காளர் தானா அல்லது பிற்போக்காளரா அல்லது யு. என். பி. தானா என்பது எதுவிதத்திலும் பிரச்சினையில்லை. ஆனால் இந்த மனிதர் தவறுவாரே யானால், எல்லாமே தவறிப்போய்விடும். நாம் அனுபவம் இல்லாத வெறும் கற்றுக் குட்டிகள் அல்ல. ஒன்றில் எமக்குள்ளேயே பிரச்சினைக்கு தீர்வு கண்டு, ஐக்கிய இலங்கைக்குள் எமது பகுதிகள் அபிவிருத்தி காண வேண்டும்; இல்லையேல் பெரும் பூகம்பமே வெடிக்கும். இதுவே கடைசிச்சந்தர்ப்பம்.

**ரிச்சர்ட் டி. சொய்ஸா**

பத்திரிகையாளர், நாடகாசிரியர், நடிகர் ரிச்சர்ட் டி சொய்ஸா கடந்த மாதம் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு, பின்னர் கொலை செய்யப்பட்டார். எமது சமூகத்தைப் பீடித்துள்ள குரூரமான கொலை வெறிக்கு அவரும் இரையாகியுள்ளார். மூன்றாவது உலக முன்னோடி செய்தி நிறுவனங்களில் ஒன்றான இன்டர் பிரஸ் சேர்விஸ் அமைப்புக்காக அவர் பணிபுரிந்தார். பல்துறை சார்ந்த ஆற்றல்களை கொண்ட அக்கலைஞரின் முழுப்பரிமாணமும் படிப்படியாக விகசித்து வந்த வேளையில், அவரது உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த கொடூரச் செயலை கண்டனம் செய்து எழும் குரல்களில் 'பொருளியல் நோக்கு' தனது குரலையும் சேர்த்துக் கொள்கிறது.

**ரஞ்சித் குணவர்தன**

கலாநிதி ரஞ்சித் குணவர்தனவின் மரணத்தை 'பொருளியல் நோக்கு' ஆழ்ந்த கவலையுடன் இங்கு பதிவு செய்கிறது. கடந்த காலத்தில் 'பொருளியல் நோக்கு' சஞ்சிகைக்கு பங்களிப்புச் செய்தவர்களனிப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில பேராசியராகவும் 'லங்கா' பத்திரிகையின் இலக்கிய ஆசிரியராகவும் பயனுள்ள வகையில் பணிபுரிந்தவர். அவரது மறைவில் அவரது பெருந்தொகையான மாணவர்களும், வாசகர்களும் கவலையடைந்துள்ளனர்.

www.padippakam.com

## வடக்கு - கிழக்கு

# இலங்கை முஸ்லிம் சமூகம் தனது வரலாற்றை மீள எழுதும் - அஷ்ரப்

எழுபதுகளில் உருவாகி, எண்பதுகளில் வளர்ந்து முதிர்ச்சியடைந்த புதிய தலைமுறை அரசியல் தலைவர்களில் ஒருவர் அஷ்ரப். மாணவப் பருவத்திலிருந்தே சமூக மறுமலர்ச்சியிலும், அரசியலிலும்-ஓரளவுக்கு இலக்கியத்துறையிலும் - நாட்டமும் ஈடுபாடும் காட்டி வந்தவர். எண்பதுகளின் தொடக்கத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியை - பலத்த எதிர்ப்புகளுக்கிடையே - உருவாக்கி, அதனை பலம் பொருந்திய அரசியல் சக்தியொன்றாக வார்த்து, வளர்த்தெடுத்ததில் முக்கிய பங்கு வகித்தவர். பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்துக்கு வெளியிலும் வடக்கு - கிழக்கு நெருக்கடியில் முஸ்லிம்களின் கண்ணோட்டத்தை விளக்கிவரும் முன்னணி பேச்சாளர். இலங்கையின் இன்றைய குழப்பமும் சிக்கலும் நிறைந்த அரசியல் சூழ்நிலையில், 41 வயது நிரம்பிய இந்த வழக்கறிஞர் பரந்த கவனிப்பை தம் பக்கம் ஈர்த்து வருகிறார். கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை மற்றும் வருங்காலம், முஸ்லிம் சமூகத்தின் தேவைகள் போன்ற பரந்த விடயங்கள் குறித்து அவர் எம்முடன் உரையாடினார்.

**கேள்வி:**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலவ வாய்ப்புக்கள் உண்டா?**

**பதில் :**

அடுத்துவரும் வருடங்களில் விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலவுவதற்கான வாய்ப்புக்கள் என்னைப் பொறுத்தவரையில் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது. நாட்டின் இந்தப் பகுதிகளில் ஜனநாயகத் திற்கு தப்பி பிழைக்க வாய்ப்பிருக்குமா என்பதே இன்றைய பெரும் பிரச்சினையாகும். வடக்கு, கிழக்கு வெகுவிரைவில் தனிநாடாகப் போய்விடக் கூடியதற்கான உணர்வே வலுவடைந்து வருகிறது. சட்டத்தையும் அமைதியையும் காக்கும் பொறுப்பினை ஏற்க வேண்டிய அரசின் கட்டுப்பாட்டில் இவை இல்லை. ரி. என். ஏ., சட்டபூர்வமற்ற படையினர் என்றெல்லாம் கூச்சலிடும் அரசாங்கம், முழு வடக்கு கிழக்கையுமே இன்னொரு சட்டபூர்வமற்ற படையியான எல். ரி. ரி. ஈ. யினருக்கு தாரைவார்த்துக்கொடுத்துள்ளது. பொதுவாக ஜனநாயக ரீதியில், ஒரு குழுவினதோ அல்லது கட்சியினதோ பலம் அதனை ஆதரிக்கும் மக்களது பலத்தின் மூலமே தீர்மானிக்கப்படும். ஆனல், இந்த விடயத்திலோ, அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட குழுவினது பலத்தினை அவர்களிடமுள்ள ஆயுதங்களின் எண்ணிக்கை மூலம் தீர்மானிக்க முற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் இன்னொரு முக்கிய பிரச்சினை அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தப்பட்டது. அரசியலமைப்பு சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தங்களையடுத்து, விசேட அதிகாரங்கள் வடக்கு, கிழக்குக்கு பரவலாக்கப்பட்டுள்ளது. ஆனல், இந்த அதிகாரங்கள் வெறுமனே எழுத்தில் மாத்திரமுள்ளன. உண்மையிலே, அதிகாரங்கள் அடிமட்டத்தைச் சென்றடையவில்லை. அரசாங்கம் இவற்றைகையளிக்க தயக்கம் காட்டி வருகிறது. கூறப்போனல், மத்திக்கும், மாகாணத்திற்கும் இது குறித்து ஒரு இழுபறி நிலையே தொடர்கிறது.

ஜனநாயக ரீதியிலான அமைப்பொன்று உருவாகுமா என்ற கேள்வியிலேயே எல்லாமும் தங்கியுள்ளது. தற்போதய மாகாண சபை கலைக்கப்பட்டாலும், சுதந்திரமும் நீதியுமான தேர்தலொன்று நடந்தாக வேண்டும். ஆனல் எல். ரி. ரி. ஈ. யினர் மற்றைய குழுவினரை செயற்பட விடாமல் தடுத்துள்ளதுடன் சகலரையும் தமது ஆயுத பலத்தினல் பயமுறுத்தியும் வருகின்றனர். இந்த நிலை, சுதந்திரமும் நீதியுமான தேர்தலை நடாத்த உகந்ததாக இருக்குமா என்பது சந்தேகத்துக்குரியதே. இத்தகையதொரு சூழ்நிலையில் சுதந்திரமும் நீதியுமான தேர்தலொன்றினை அரசாங்கம் நடாத்துமென யாரும் எதிர்பார்க்க முடியாது. சர்வதேச அவதானிப்புக் குழுவினர் கண்காணிப்பரென்று கூறப்படுகிறது. இது நடக்கக் கூடிய ஒன்றல்ல. முறைகேடுகளை, மீறல்களை சர்வதேச குழுவினர் உரியவாறு கண்காணிக்க முடியுமென நான் நினைக்கவில்லை. பாராளுமன்ற தேர்தலின் போது இத்தகையதொரு அனுபவமே ஏற்பட்டது. எந்த நிலையிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினைகளை அலசி, ஆராய்ந்தாலும், இலங்கை அரசாங்கம் எவ்வாறு சுதந்திரமும் நீதியுமான தேர்தலொன்றினை நடாத்த முடியுமென்பதே அடிப்படைக் கேள்வியாகும். சுதந்திரமும் நீதியுமான தேர்தலொன்றினை நடாத்த, சட்டத்தையும் ஒழுங்கையும் ஏற்படுத்தக் கூடிய வகையில், நிலைமை அரசாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும். மேலும், குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையும் அரசாங்கத்தின் அதிகாரத்துவத்தை ஏற்கவேண்டும். மாகாணசபை கலைக்கப்பட்டதும் சில வேளை தேர்தல் நியமனப்பத்திரங்கள் கோரப்பட்டு, பத்திரங்களும் கையளிக்கப்படலாம். இதையடுத்து காட்டுத் தார்பாரே நடக்கும்.

**வடக்கு, கிழக்கு மக்களின் ஏகப்பேச்சாளர் அல்லது அவர்களின் ஏகப் பிரதி நிதி தாமேதான் என்ற உரிமை கோரலை நியாயப்படுத்துவது தொடர்பான பிரச்சினையையே தற்போதும் எதிர்காலத்திலும் எல். ரி. ரி. ஈ.எதிர் நோக்கியுள்ளது.**

இத்தகைய தொரு உரிமை கோரலை, நியாயப்படுத்த வேண்டுமானால் அவர்கள் 100% வாக்குகள் பெற்றாக வேண்டும். இது எது விதத்திலும் சாத்தியமான ஒன்றல்ல. பயமுறுத்தல் போன்ற வழிகள் மூலம் குறைந்தது 75 - 85% பெற முயற்சிக்கலாம். இத்தகைய தொரு நிலையில் விரைவில் அமைதி திரும்பி விடுமெனக் கூற வாய்ப்புகள் எதுவுமில்லை.

எமது உட் பிரச்சினையை எமக்குள்ளேயே தீர்க்க தவறியதாலேயே இந்திய – இலங்கை ஒப்பந்தம் எம் மீது திணிக்கப்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கினை ஒரு பிராந்தியமாகவே ஒப்பந்தம் கொள்கிறது. இதன் அடிப்படையிலேயே பிராந்திய ரீதியலமைந்த அதிகாரப்பரவலாக்கம் தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் வடக்கு, கிழக்கில் எமக்கிருந்த பிரச்சினை, பிராந்தியம் சம்பந்தப்பட்ட ஒன்றா அல்லது வடக்கு கிழக்கிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையேயான ஒன்றா என்பது ஒரு கேள்வியாகும். இதனை ஒரு பிராந்திய பிரச்சினையாக அல்லது அது சார்ந்த ஒரு சிக்கலாக கொள்வது பொருத்தமான ஒன்றல்ல. ஏனெனில் வடக்கு-கிழக்கில் தனித்துவமான அரசியல் அடையாளங்களைக் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட இனக்குழுக்கள் இருக்கின்றன. அங்குதமிழர்கள் இருக்கிறார்கள். சிங்களவர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் இருக்கிறார்கள். விசேடமாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 33% ஆகும். கிழக்கு மாகாணத்தில் முழுச்சனத் தொகையில் நாம் 1/3 பகுதியினராயுள்ளோம். கிழக்கு, தனித்திருக்குமானால் நாம் எமது அரசியல் அதிகாரத்தினை பங்கம் ஏதுமின்றிபயன் படுத்த முடியும். ஆனால் கிழக்கு, வடக்குடன் இணைக்கப்படும் பட்சத்தில் எமது அரசியல் பலம் 33% ல் இருந்து 17% ஆக வீழ்ச்சி கண்டு விடும். முஸ்லிம்கள் பலம் குறைந்த அரசியல் சிறுபான்மையினராகி விடுவர்.

கிழக்குமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை இலங்கையில் இதுதவிர்ந்த, மற்றைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களுடன் தொடர்புபட்ட ஒன்றாகும். முஸ்லிம்கள் இலங்கை பூராவும் சிறு, சிறு பகுதிகளில் செறிந்து வாழுகிறார்கள். கிழக்குமாகாணத்திற்கு வெளியே முஸ்லிம்களின் சனத்தொகையில் 2/3 பகுதியினர் வாழுகிறார்கள். எனவே இவர்கள் வெறுங்கடலில் வீசப்பட்ட உப்பு போலாகி விடுவர்.

**கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் பலமே, இலங்கை பூராவும் வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலமாகும்.**

எனவேதான் தீர்வு, பிராந்தியம் சார்ந்த அதிகார பரவலாக்கலில் அல்லாது சமூகம் சார்ந்த அதிகாரப் பரவலாக்கிலில் அடங்கியுள்ளதாக நாம் கருதுகிறோம். அதாவது அரசியல் அதிகாரம் தமிழர்களுக்கு பரவலாக்கப்பட வேண்டும். முஸ்லிம் சிறுபான்மையினருக்கு பரவலாக்கப்பட வேண்டும். சிங்கள சிறு பான்மையினருக்கும் பரவலாக்கப்பட வேண்டும். இதுவே எமது நிலைப்பாடாகும்.

**இணைப்பு குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?**

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே இணைப்பு குறித்து பிரச்சினைகள் எவையும் தோற்றுவிக்கப்படாத வகையிலேயே நாம் இதனை அணுகியுள்ளோம். அரசியல் சார்புகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் இணைப்பு குறித்து தமிழ் சமூகம் ஒற்றுமை கண்டுள்ளது. தமிழ் சமூகத்தின் அபிலாஷைகளையும் உணர்வுகளையும் நாம் புரிந்து கொண்டு அவற்றை மதிக்கிறோம்.

**தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கடுமையான சிக்கலை, பிரச்சினையினை உண்டு பண்ணும் விதத்தில், இணைப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்பினை ஒரு அரசியல் பிரச்சினையாக வளர்க்க அரசாங்கம் முற்பட்டுள்ளது.**

இந்தப்பிரச்சனையைத் தீர்க்க சர்வஜன வாக்கெடுப்பு ஏன் வேண்டியுள்ளது? ஏன் இந்த வாக்கெடுப்பு ஏதுமின்றி பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கக் கூடாது? தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஒரு நிரந்தரமாண இரும்பு சுவரினை எழுப்பும் விதத்தில் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பினை பயன் படுத்த விரும்புகிறது. இரு சமூகங்களும் இதையிட்டு சண்டையிட்டுக் கொண்டிருக்கவோ, அல்லது முரண் பட்டுக் கொண்டிருக்கவோ வேண்டுமென, முஸ்லிம் ஏஜன்டுகளை பயன்படுத்தி முஸ்லிம் மக்கள் மத்தியிலே வடக்கிலிருந்து கிழக்கினை பிரிப்பிக்கும் வகையில் அரசாங்கம் பிரசாரங்களை செய்வித்து வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களுக்கு அபிலாஷைகள் உள்ளன. அவர்களுக்கு நியாயமான பல பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் பல விதத்திலும் துன்பப்பட்டுள்ளனர். அவர்களது பிரச்சினைகள் அனுதாபத்துடன் நோக்கப்படவில்லை. அவர்கள் பல தொல்லைகளுக்குள்ளாக்கப்பட்டனர். எனவே, வடக்கு – கிழக்கு இணைப்பினை அவர்கள் கோருகின்றனர். இந்தப் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில், ஜனநாயக அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கை அரசாங்கம், அது எதுவாக இருப்பினும் (யு. என். பி. ஆக இருந்தாலென்ன, எஸ். எல் எவ். பி. யாக இருந்தாலென்ன) தவறான வழிகளில் சில முஸ்லிம்களை ஏவி தமிழர்களை கொலை பண்ண வைத்து விட்டு இந்தப் பின்னணியில் வடக்கு, கிழக்கு இணையக் கூடாதென சொல்லக் கூடும். சர்வஜன வாக்கெடுப்பு இருக்கும் பட்சத்தில், முன் கூட்டியே பெறுபேற்றினை தீர்மானித்துவிடலாம். சிங்களவர்களும், முஸ்லிம்களும் சேரும் பட்சத்தில் கிழக்கு மாகாணத்தில் அவர்கள் பெரும்பான்மையினராகி விடுவர். அதிகூடிய பெரும்பான்மையினராகி விடுவர். இதனால் சர்வஜன வாக்கெடுப்பு பெறுபேறு நிச்சயமான ஒன்றாகும். இதனை தமிழர்கள் இலகுவாக மறந்து விடுவார்கள் என்று கருதுகிறீர்களா? இது நடந்து விடுமானால் தமிழர்கள், முஸ்லிம்களுக்கிடையே என்றும் தீராத பிரச்சினைகள் தோன்ற இடமளித்து விடும். இதனை தவிர்க்கவே நாங்கள் முயற்சிக்கிறோம்.

நாங்கள் தமிழர்களது பிரச்சினைகளை நன்கு அறிந்துள்ள போதிலும், முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தினை அழித்தொழிக்கும் எதற்கும் சம்மதிக்க மாட்டோம், முஸ்லிம்களுக்கு, அவர்களுக்கே உரிய வேறுபட்ட தனித்துவங்கள் உண்டு. தமிழ் இனவாதத்தையும் அதே வேளை, சிங்கள இனவாதத்தையும் நாம் எதிர்க்கிறோம். 1956 ல் இருந்து சிங்கள இனவாதத்திற்கு எதிராக தமிழ் கட்சிகள் போராடி வந்துள்ளன. சிறுபான்மையினர் சரியான முறையில் நடாத்தப்படவில்லை. சிங்கள பெரும்பான்மையினரால் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்களென்றெல்லாம் அவர்கள் கூறுகிறார்கள். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு இன்று இதுதான் நடக்கிறது. சில தமிழ் குழுக்கள் அட்டகாசம் செய்து வருகிறார்கள், அவர்கள் முஸ்லிம்களை அழிக்க விரும்புகிறார்கள். அவர்களை அடிமைகளாக்க விரும்புகிறார்கள். முஸ்லிம்களை பயமுறுத்தி வருகின்றனர். எனவே தான் மனிதாபிமான அடிப்படையில் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென நாம் கோருகிறோம். நீங்கள் ஒன்றையிட்டு மன ஆறுதல் அடையலாம். முஸ்லிம்கள் எவ்வளவோ பிரச்சனைகளுக்கு மத்தியிலும் தமது திடாத்தை இழக்கவில்லை. கடந்த இரண்டரை வருடங்களிலும் எம்மவரில் ஆயிரத்திற்குமதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். அரசியல் தலைவர்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் ஆகியோரை அழிக்கவும், பொருளாதார சீர்குலைவினை உண்டு பண்ணவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகையதொரு சூழ்நிலையில் இந்த தமிழர்களுடன் வாழ முடியவில்லை, பிரிவினையே வழி என கோஷமிட்டு மிகவும் எளிதாக பிற்போக்குத்தனமான இனவெறியினைக் கிளறியிருக்கலாம். இதனையே, அரசாங்கமும் எம்மிடம் எதிர்பார்த்தது. ஆனால் தமிழர்களுடன் போராடுவது தான் இப்பிரச்சினை தீரவழியல்ல என்பது எமக்குத்தெரியும்.

**தீர்வு என்ன?** சர்வஜன வாக்கெடுப்பு இன்றி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக செறிந்து வாழும் பகுதிகளை இனங்கண்டு, சமூக அடிப்படையிலான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை ஏற்படுத்தி அவற்றை உள்ளடக்கும் விதத்தில் வரையறை செய்து கொள்வதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணலாமென நாம் கூறுகிறோம். இதனைச் செய்ய தடை என்ன உள்ளது? இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை ஒரு நிருவாக அமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கு உள்ள தடை என்ன? வடக்கு, கிழக்கினை இணைத்த போது, சர்வஜன வாக்கெடுப்பினை நடத்தவில்லை என்பதனை மறப்போம். 'சுவிஸ்' மாதிரியிலமைந்த ஒரு நிருவாக அமைப்பினை ஏற்படுத்துவோம். (மூன்று படிகளிலான நிருவாக அமைப்பு).

இந்த நாட்டின் ஒவ்வோரு அங்குல நிலப்பகுதியும் இலங்கையனுக்கே சொந்தமானதாகும். வடக்கு, கிழக்கில் சிங்களவர் வாழக்கூடாது என்று நாம் கூறவில்லை. முஸ்லிம்களும் தமிழர்களும் கொழும்பிலும் மற்றுமிடங்களிலும் வாழ முடியுமானால், சிங்களவர்கள் வடக்கு, கிழக்கின் எப்பகுதியிலேனும் ஏன் வாழ முடியாது? இங்கு தமிழ் சிறுபான்மையினருக்கு நடந்தது. வடக்கு, கிழக்கில் சிங்களவர்களுக்கு நேரக் கூடாது. நான் பாராளுமன்ற உறுப்பினன். எனக்கு கடிதங்கள் சிங்கள மொழியில் வருகின்றன. இதனால் இவற்றை வாசித்து விளங்க மிகவும் கஷ்டப்படுகிறேன். இது எனது பிரச்சினை. சாதாரண ஒரு பிரஜைக்கு எத்தகைய பிரச்சினையாக இது இருந்திருக்கும். இதே போன்று வடக்கு, கிழக்கு மாகாணம், தமிழ்மொழியினை மாத்திரம் பிரயோகிக்க தொடங்கினால் படித்த அந்த சிங்கள மக்களுக்கு எவ்வாறு இருந்திருக்கும்? ஆனால் அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றத்தினை நாம் எதிர்க்கிறோம். அரசாங்கம் திட்டமிட்ட அடிப்படையில், படிப்படியாக கிழக்கு மாகாணத்தில் இதனைச் செய்து வருகிறது. குடிசன செறிவினை மாற்றும் விதத்தில் அரசாங்கத்தினால் இது மேற்கொள்ளப்படுகிறது. ஏன் இதனை அவர்கள் செய்து வருகின்றனர்? ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கியிருக்கும் இந்த தருணத்தில், மேலும் பிரச்சினைகள் எம்மீது ஏன் சுமத்தப்படுகின்றன? நாம் எல்லோரும் இலங்கையரே என்பதை



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனைக்கட்டி எழுப்பும் விதத்தில் நாம் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். இதற்கு தடையாக இருப்பவற்றை அகற்ற நாம் முனைப்புடன் ஈடுபடவேண்டும்.

இலங்கையர் என்ற அடையாளம் என்பதால், சகல இலங்கையரும் பௌத்தர்களாக மாற வேண்டு மென்ற அர்த்தம் இல்லை. மற்றைய மொழிகளை மறந்து நாம் எல்லோரும் சிங்கள மொழியினை கட்டாயம் கற்க வேண்டுமென்ற அர்த்தமும் இல்லை. மக்கள் எல்லோரும் விரும்பிய வகை உடைகளை அணிவதைப் போல,அதற்கு எவ்வாறு உரிமையுடையவர்களாக விளங்குகிறார்களோ அதே போல, வெவ்வேறு கருத்துக்களுக்கும் சொந்தம் பாராட்டும் உரிமையுடையவர்களாக விளங்க வேண்டும். இலங்கையர் என்ற அடையாளமும் இத்தகையதொரு பரந்துபட்ட தாத்பரியத்தை அர்த்தப்படுத்துமொன்றாக அமைதல் வேண்டும். அரசியல் ரீதியாக என்னிலிருந்து வேறுபட்ட ஒரே காரணத்திற்காக, நான் உன்னையோ அல்லது நீ என்னையோ கொல்லாதிருக்க வேண்டும்.

**கேள்வி :**

கடந்த தசாப்தத்தில் இன நெருக்கடியின் உச்சக் கட்டமாக, மிதவாத தமிழ் கட்சிகள் ஓரத்தில் ஒதுங்க, தீவிரவாதிகள் ஆதிக்கம் பெற்றவர்களாக முன்னணிக்கு வந்தார்கள். இத்தகையதொரு நிலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஏற்பட வாய்ப்புண்டா? உக்கிரமடைந்து வரும் இஸ்லாமிய தீவிரவாதம், 'முஸ்லிம் பிரபாகரனை' தோற்றுவித்தால்?

**பதில் :**

இது சுவாரசியமான ஒரு கேள்விதான். தமிழ் இளைஞர்கள் தமது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க ஆயுதமேந்தியதை தமிழ் தலைமை எப்போதும் கண்டித்து வந்துள்ளது. ஆனால் நாங்கள் வேறுபட்டவர்கள்.

நான் ஒரு மிதவாத அரசியல் தலைவர். அதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். எனது நிலையை நான் இலங்கை அரசுக்கும் அதற்கும் மேலாக உலகுக்கும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன். இன்று முஸ்லிம்கள் எதிர்நோக்கும் கடுமையான பிரச்சினை, எமது பாதுகாப்பு சம்பந்தப்பட்டதாகும். இன்று முஸ்லிம்கள் தமது கல்வியையோ, தொழிலையோ, அபிவிருத்தியையோ பற்றி கவலைப்படவில்லை. அவர்களை கவலை கொள்ளச் செய்யும் ஒரே பிரச்சினை அவர்களின் பாதுகாப்பாகும். மக்களைப் பாதுகாப்பது தான் அரசாங்கத்தின் கடமை என்று நான் கூறியுள்ளேன். அரசு இதற்குத் தயாராக இல்லாவிடில், அல்லது மக்களைக் காப்பாற்றுவதற்கும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கும் முடியாத ஒரு பலவீன நிலையில் அரசு இருப்பதாயின், ''எமக்கு சட்டபூர்வ ஆயுதங்களைக் கொடுங்கள். எம்மைநாமே பாதுகாத்துக் கொள்ள முடியும்.'' என்பதே எமது நிலையாகும். எம்மைப் பாதுகாக்கவோ அல்லது எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள எமக்கு ஆயுதங்கள் கொடுக்கவோ அரசு தயாரில்லாவிடில் அப்புறம் அதன் மூலம் தவறு செய்துவிடாதீர்கள். முஸ்லிம்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ள உறுதி பூண்டுள்ளார்கள். எம்மைப்பாதுகாத்துக் கொள்ள நாம் சட்டபூர்வமற்ற ஆயுதங்களை எடுப்போம். அது ஒரு மனித உயிரின் அடிப்படை உரிமையாகும். நம்பிக்கை இழந்த நிலையில் முஸ்லிம் இளைஞர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ள முயல்வதை நாம் கண்டிக்கவில்லை. அந்த இளைஞர்களை நான் உற்சாகத்துடன் ஆதரிக்கும் ஒருவன். இதைப் பாராளுமன்றத்தில் கூறியுள்ளேன்.

முஸ்லிம்கள் கூறுவதைக் கேட்க அரசு தயாராக இல்லை. 1984 இல் நடைபெற்ற முதலாவது சர்வ கட்சி மாநாடு இன்னும் எனக்கு தெளிவாக நினைவில் இருக்கிறது. எவ்வளவு நம்பகமான முறையில் ஜே. ஆர். ஜயவர்தன பேசினார். ''தமிழ் தீவிரவாதிகள் தங்கள் ஆயுதங்களை கீழே வைக்காதவரை எந்தத் தமிழ் தீவிரவாதியுடனும் பேசமாட்டேன்'' என்று அவர் கூறினார். அவருக்கு என்ன நடந்தது? தாம் சொன்ன வார்த்தைகளையே அவர் மறுதலிக்கவேண்டியிருந்தது.

பெண்கள், குழந்தைகள், சிசுக்கள் உட்பட ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை இலங்கைப்படைகளும், புலிகள் இயக்கத்தினரும் சென்று கொன்றொழிக்க முடியாது. சர்வதேச உலகு இது குறித்து மௌனமாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா? வரலாற்றில் இருந்து ஒருவர் பாடம் படிக்க வேண்டியுள்ளது. அல்லது பாடம் படிக்க ஒருவர் தயாராக இருக்க வேண்டும். ஒருவர் வரலாற்றில் இருந்து பாடங்கள் படிக்கத்தவறினால் வரலாறு மீண்டும் திரும்ப நிகழும்.

முஸ்லிம் சமூகம் தனது சொந்த தலைவிதியை திருப்பி எழுத உறுதி பூண்டுள்ளது. நாம் சட்ட பூர்வமற்ற ஆயுதங்களை எடுக்க நிர்ப்பந்திக்கப்படும் நாளில், -''நிர்ப்பந்திக்கப்படும்'' என்ற சொல்லைக் குறைத்து மதிப்பிட விரும்புகிறேன் - எல்லா சிங்கள மக்களும் எம் மீது அனுதாபம் கொள்வர். முஸ்லிம்கள் சாவதற்கு அஞ்சவில்லை. வாழ்க்கையில் இரு நிச்சயங்கள் மட்டும் இருப்பதாக யாரோ ஒருவர் என்னிடம் கூறினார். அவற்றில் ஒன்று உனதுதாய்; மற்றது உன்னுடைய மரணம். ஆகவே நாம் மரணிப்பதற்கு அஞ்சவில்லை.

**தவறான கருத்து**

**கேள்வி:**

இலங்கையில் வடக்குகிழக்குக்கு வெளியிலும் மற்றும் இலங்கைக்கு வெளியிலும் உள்ள தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்தில் தமது ஒற்றுமையைக் காட்டியுள்ளார்கள். அவர்கள் அந்தப்போராட்டத்தை



படிப்பகம்

www.padippakam.com

ஆதரித்தனர். வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம்கள் குறித்தும் அவர்களின் கோரிக்கைகளை ஆதரிப்பது குறித்தும் வடக்கு கிழக்குக்கு வெளியில் உள்ள முஸ்லிம்கள் தமது ஒற்றுமையைக் காட்டும் வாய்ப்பு எப்படி இருக்கிறது?

பதில் :

முஸ்லிம்கள் சௌகரியமாக வாழ்கிறார்கள் எனவும் முஸ்லிம்கள் வசதி படைத்தவர்கள் எனவும் ஒரு நம்பிக்கை நிலவுகிறது. ஆனால் இலங்கையில் ஒரு சராசரி முஸ்லிமின் தனி நபர் வருமானம் ஒரு இந்திய கூலித் தொழிலாளியைவிட மிகவும் குறைவாகவே இருக்கிறது. கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கு பாதுகாப்பின்மை உணர்வு எந்த அளவுக்கு அதிகமாக உள்ளதோ அந்த அளவுக்கு வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ளமுஸ்லிம்களும் அதிக பாதுகாப் பின்மை உணர்வினால் துயருறுகின்றனர்.

இன்னொரு உண்மையற்ற கூற்று என்னவெனில், முஸ்லிம்கள் சிங்கள மொழியைக் கற்க முற்பட்டிருக்கிறார்கள் என்பதாகும். வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் 99% சதவீதமானவை தமிழ் மூலம் பயிற்றுவிக்கும் பாடசாலைகளாகும். முஸ்லிம்கள் சிங்களத்தில் பேசுகிறார்கள் என்பது உண்மை தான். பண்டாரநாயக்கா வருவதற்கு, சிங்களம் உத்தியோக மொழியாக ஆக்கப்படுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரே முஸ்லிம்கள் சிங்களத்தில் பேசத் தொடங்கி விட்டனர். அவர்கள் தமது பாடசாலைகளில் சிங்களம் படித்ததால் அவ்வாறு பேச வில்லை. சிங்களம் படித்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறு சிங்களம் படித்தவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமல்ல, தமிழர்கள் மத்தியிலும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாவரும் விதிவிலக்கானவர்கள்.

முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினையாக இருப்பது அவர்களது உயிர் பாதுகாப்பாகும். முஸ்லிம்கள் தமது பிரச்சினைகள் பற்றிப் பேசவும் அவை என்ன என்பது பற்றி எடுத்துக் கூறவும் கூட முடியாத அளவுக்கு அடக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் சில வருடங்களுக்கு முன்னர் தான் தோன்றியது. ஆனால்,முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றுக்கான தேவை நீண்ட காலத்திற்கு முன்னரே - 1960 ஜூலையில்-உணரப்பட்டது. 1960 ஜூலையில் நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருந்த அகில இலங்கை முஸ்லிம் லீக் ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது. ஐ. தே. க. தீர்வாக மாட்டாது, ஸ்ரீ. ல. சு. க. தீர்வாகமாட்டாது என்பதை இது காட்டுகிறது. 1976 இல் புத்தளம் பள்ளிவாசலுக்குள் ஒன்பது முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டு, அவர்களுடைய தலைகள் துண்டுகளாக நொறுக்கப்பட்டன. புத்தளம், வடக்கு கிழக்கிற்கு வெளியே அமைந்துள்ளது. அதேநேரத்தில் பதியுதீன் மஹ்மூத் ஒரு அமைச்சாராக இருந்தார். பிரதி சபாநாயகர் ஒரு முஸ்லிமாக இருந்தார். பாராளுமன்றத்தில் பன்னிரண்டு முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவராவது இந்தப் பிரச்சினையை பாராளுமன்றத்தில் எழுப்பத் தயாராக இருக்கவில்லை. ஸ்ரீ. ல. சு. க. ஆட்சியிலேயே அது நிகழ்ந்தது. ஐ. தே. க. ஆட்சியின் போது காலியில் மோதல்கள் இடம்பெற்றன. முஸ்லிம்கள் அடித்து உதைக்கப்பட்டனர். யாரும் பேசவில்லை. புத்தளம் சம்பவம் நிகழ்ந்தபோது செல்வநாயகம்தான் அது பற்றிப் பேசினார். காலியில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போது பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் தான் எழுந்து அதுபற்றிய பிரச்சினையை எழுப்பினார்.

முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களை விட அம்மாகாணத்திற்கு வெளியேயுள்ள முஸ்லிம்கள் மத்தியில் அதிக ஆதரவைப் பெற்றுள்ளது. நாங்கள் தேர்தலில் போட்டியிட்ட போது ஸ்ரீ. ல.சு.க. வும் ஐ. தே. க. வும் ஒன்று சேர்ந்து எம்மை எதிர்க்க முன்வந்தன. ஆனால் முஸ்லிம்கள் எழுந்து நின்றார்கள். மாளிகாவத்தை, கொம்பனித்தெரு ஆகிய இந்த இடங்களுக்கெல்லாம் போய் என்ன நிகழ்கிறது என்று பாருங்கள். முஸ்லிம்கள் அந்த அளவுக்கு கொடுமையான நிலைமையில் வாழ்கின்றார்கள்.

கேள்வி:

ஆனால், வறுமை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி பொதுவாகவுள்ள ஒரு பிரச்சினை அல்லவா?

பதில்

அது உண்மைதான். முஸ்லிம்கள் மட்டுமன்றி தமிழர்களும் சிங்களவர்களும் கூட அப்படித்தான் வாழ்கிறார்கள். ஆனால், எமது குறை என்னவென்றால் இந்தப்பிரச்சினை மீது இதுவரையில் முழுக் கவனமும் செலுத்தப்படவில்லை என்பதாகும். அண்மைக்காலம் வரை எவரும் முஸ்லிம் பிரச்சினை பற்றி எழுதவில்லை. முஸ்லிம்கள் துன்பப்படுகிறார்கள் என்று எவரும் கூற வில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தோன்றுவதற்கு முன் இருந்த கருத்து என்ன? ''ஆகா, முஸ்லிம்கள் இரத்தினக்கல் வியாபாரிகளாக இருக்கிறார்கள். அவர்கள் பென்ஸ் கார் வைத்திருக்கிறார்கள்'' என்றார்கள். ஒரு சிலரின் அசிங்கமான செல்வ வெளிப்பாடு முழு உலகத்திற்கும் மிகவும் தவறான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விட்டது.

**வட்டியில்லாத வங்கிக் கடன்**

கேள்வி :

உங்களுடைய பொருளாதார தத்துவம் என்ன? இந்தப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம்? நீங்கள் ஆதரிக்கும் அபிவிருத்தித் திட்டம் என்ன?

பதில் :

முதலாவதாக நாங்கள் கிழக்குமாகாணத்துக்கு

( 20 ம் பக்கம் பார்க்க )



படிப்பகம்

www.padippakam.com



# அபிவிருத்தி உத்தி

## பிரச்சினைகளும் வாய்ப்புக்களும்

கலாநிதி நீலன் திருச்செல்வம் நாடறிந்த சட்ட அறிஞர்; அரசியல்வாதி; மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் எழுப்புபவர். சிலகாலம் தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

நீலன் திருச்செல்வம்

வடக்கு – கிழக்கில் மாகாண சபைமுறை, கட்டமைப்பு அபிவிருத்தியில் பெரும்பாலும் ஒன்றுசேர்ந்த கவனத்தைச் செலுத்துவதுடன் ஒருவகை நிறுவன கட்டமைப்பிலும் ஈடுபடவேண்டும். இத்தகைய முயற்சி முதல்கட்டத்தில் அபிவிருத்தி முறை கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பரந்த எண்ண வடிவமைப்பு ஒன்றிலும், மிகவும் விசேடித்த முறைப்படியான அபிவிருத்தி மாதிரியொன்றிலும் இடம் பெறுவதாக நான் கருதவில்லை..

வடக்கு - கிழக்கில் பொருளாதார, சமூக பிரச்சினைகளுடன் உடன்பாட்டுக்கு வருவதில் இருந்து அரசியல் நடைமுறையைத் தடுத்துள்ள மூன்றுவகையான பிரச்சினைகள் இருக்கின்றன.

முதலாவதாக, மாகாண அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் அதிகாரங்களினதும், அமைப்புக்களதும், சட்டத்தினதும் பரவலாக்கலின் பரிமாணத்தை வரையறை செய்து கொள்வது தொடர்பாக தொடர்ந்து போராட்டம் இருந்துவருகிறது. அது ஏராளமான சக்தியையும் நேரத்தையும் உட்கொண்டுவிட்டது. இது வடக்கு-கிழக்குக்கு மட்டும் புதுமையான ஒரு பிரச்சினை அல்ல. இதேமாதிரியான நெருக்கடிகளை ஏனைய மகாணங்களும் அனுபவரீதியாக எதிர்கொள்வதைக் காணலாம். முக்கியமாக, கல்வி, சுகாதாரம், மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளில் மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையில் அதிகாரம், செயற்பாடு ஆகியவற்றை எல்லை நிர்ணயம் செய்வதில் இதே போன்று பிரச்சினைகள் இருந்துவருகின்றன. மத்திய அரசின் பொறுப்புக்களது எல்லைகள் எவை? மாகாணங்களினது பொறுப்புகளின் எல்லைகள் என்ன? இந்த பொறுப்புக்களின் இடமாற்றத்தைப் பூர்த்திசெய்வதற்கு எந்த அளவுக்கு சாதனங்கள் தேவை?-பொதுவாக எல்லா மகாணங்களாலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் இவை.

இரண்டாவது தடை வட – கிழக்கு மாகாணம் எங்கிலும் சட்ட பூர்வ தன்மையை வட - கிழக்கு மாகாண சபை அனுபவிக்க முடியாமல் இருந்ததாகும். இது பாரிய அபிவிருத்தித் திட்டங்களை பயனுள்ளவாறு வகுக்கவும் அமுல்படுத்தவும் அல்லது ஆகக்குறைந்தது வட – கிழக்கின் பல பகுதிகளில் ஒரு தொடர்ச்சியான நிர்வாகத்தைப் பேணுவதற்கும் ஒரு முக்கிய முன் நிபந்தனையாகும்.

மூன்றாவது பிரச்சினையும் பரவலாக்கலின் கடினநிலை பற்றியதாகும். சரியான முறையிலான, உண்மையான வருமானப்பங்கீட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை. மாகாணங்களுக்கு ஏதாவது கடன் வாங்கும் அதிகாரங்கள் உள்ளனவா என்பதில் கணிசமான அளவு சந்தேகம் இருந்துவருகிறது. வெளிவாரியாக நிதியளிக்கும் திட்டங்களை ஒரு மாகாணத்துக்குள் நடைமுறைப்படுத்த முடியுமா என்பதிலும், நிதியளிக்கும் மத்திய அரசுக்கும் மாகாணத்துக்கும் இடையில் எத்தகைய உறவு இருக்கும் என்பதிலும் நிச்சயமற்ற நிலை இருக்கிறது. அத்துடன் முத்திரை வரி, மொத்த விற்பனை வரிகள் போன்ற வருமானங்களைப் பெறுவதற்காவும் தேவையான புள்ளி விவரங்கள் சரியாக வைக்கப்படவில்லை. எனவே, ஒரு பரவலாக்கல் ஆட்சி நிர்வாகத்தின் முழு நிதி அடிப்படையும் திருப்திகரமாக வகுக்கப்படவில்லை. பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் முதலியவை பற்றிய வழமையான நிர்வாக செயற்பாட்டை நிர்வகிப்பதை விட மாகாணங்கள் ஏதாவது முக்கியமான செயற்பாட்டை மேற்கொள்வதுபற்றி சிந்திப்பதற்கு வகை செய்யப்படவில்லை. தொடர் செலவினங்கள் விடயத்தில் மாகாணங்களுக்கு அளிக்கப்படும் பணங்கள் வழமையான அரசாங்க செயற்பாடுகளை மேற்கொள்வதற்குக் கூட போதுமானவை அல்ல என்றே நான் நினைக்கிறேன். எனவே, சமூகத்தைப் புனரமைப்பதற்கான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விடயத்தில் சிந்திப்பதற்கான இடைவெளி மேலும் போதாததாகவே ஆகிறது.

இந்த கட்டமைப்புப் பிரச்சினைகளில் சிலவற்றைப் பார்க்குமிடத்து இவற்றில் நிதிகள், சட்டம் பற்றிய சில பிரச்சினைகள் இனம் பிரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஓரளவு இணக்கமான அம்சமும் உள்ளது. இத்தகைய கட்டத்தில் இப் பிரச்சினைகளில் சிந்தனைக்குரிய எத்தகைய விளைவுகள் தோன்றும் என்பதை இப்போது நாம் நோக்குவோம்.



படிப்பகம்

www.padippakam.com

### புனர்வாழ்வு

முதலாவதாக, முழு புனர்வாழ்வு, புனர் நிர்மாணதிட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். இது சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட தொகைப்பணம் நன்கொடை வழங்கும் சமூகத்தால் கொடுக்கப்பட்டது. உண்மையில் இதில் மிகவும் சொற்ப தொகையே செலவிடப்பட்டது. அரசு கட்டிடங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் போன்றவற்றை மாற்றியமைத்தல், மீள அமைத்தல் ஆகிவற்றுக்கு பெரும்பாலும் இதை உபயோகப்படுத்தி இருக்கலாம். இதில் ஒரு பகுதியை இடம் பெயர்ந்த மக்களை மீள குடியேற்றுவதற்கு பயன்படுத்தி இருக்கலாம். இது நாம் கட்டியெழுப்ப விரும்பும் சமூகத்தின் முழுக் கண்ணோட்டத்துடன் ஒன்றுக்கொன்று சம்பந்தமாக புனர்வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கையாக அமையவில்லை. ஆனால் இதில் ஒரு அம்சம் எவ்வாறிருப்பினும் மிக முக்கியமானதாகும்.

புனர்வாழ்பு - புனர் நிர்மாண திட்டத்தில் எந்த அளவுக்கு புனர் நிர்மாணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதில் விவாதம் இருந்துவருகிறது. முக்கியமாக பழைய விவசாயத்தையும் மீன்பிடியையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை புனர் நிர்மாணம் செய்வது பற்றியும் பாரம்பரிய தொழில் முறைகளில் இருந்து ஜனங்களை அப்பால் எடுத்துக் கொள்ளும் சில தொழில் உற்பத்தி நிலையங்களை நிறுவ வழிவகுக்கும் புனர் நிர்மாண முயற்சியை எந்த அளவுக்கு மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் விவாதிக்கப்படுகிறது. எந்த அளவுக்கு விவசாய, கைத்தொழில் அபிவிருத்தியை சில குறிப்பிட்ட அபிவிருத்தி நிலையங்களில் இடம்பெறச் செய்ய முடியும் என்பதுபற்றியும் ஆலோசிக்கப்படுகிறது. சில உள்ளூர் தொழில் அதிபர்கள் பிரதேச தொழில் அதிபர்களின் கூட்டுறவுடனோ அல்லது முதலீட்டு நிதிகளை உருவாக்குவதன் மூலமோ வடக்கு-கிழக்கில் கைத்தொழில்களை உருவாக்குகின்றனர்.

மாகாண சபைகளினால அதிக செலவான ஒருவகை முதலீட்டுத் திட்டத்தைத் தாங்கிக்கொள்ளக் கூடிய மேலதிக வருமானத்தை உருவாக்குவதற்கும், முக்கியமாக வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு அப்பால் உள்ள தனியார் முதலீட்டில் இருந்து அல்லது உட்பகுதியில் உள்ள அரசாங்க வளங்களில் இருந்து எந்த அளவுக்கு வளங்களைப் பெறலாம் என்பதற்கும் அடிப்படையில் வடக்கு – கிழக்கின் கொள்ளளவு என்ன என்பது கவனிக்கற்பாலதாகும். வடக்கு - கிழக்கு மாகாண சபை செயற்படுவதில் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக இக்கேள்விகள் அச்சபையில் தீவிரமான முறையில் எழுப்பப்படுவதாக எனக்குத் தெரியவில்லை அல்லது வடக்கு - கிழக்கில் தோன்றும் அரசியல் போக்குகள் இந்த பிரச்சினைகள் மீது கவனம் எதுவும் செலுத்துவதாகவும் எனக்குத் தெரியவில்லை.

நாட்டின் முழுதான அபிவிருத்தி திட்டம் தொடர்பான வடக்கு - கிழக்கு அபிவிருத்தியின் முழு பிரச்சினையையும் நீங்கள் கவனிப்பீர்களானால் அதில் உள்ள அடிப்படை முரண்பாடு தெரியும். அந்த அடிப்படை முரண்பாடாவது- அரசாங்கம் செயற்பாடுகளில் கொடுக்கும் முக்கியத்துவம் (உலக வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளின் நிலையில்) அரசாங்கத்தால் வர்த்தக - தொழில் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ள இடமளிக்காத நலிந்த நாடு என்ற ரீதியில் அமைந்திருப்பதாகும். அரசாங்கம் அதன் செயற்பாட்டை மட்டுப்படுத்துவதுடன் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை தனியார்மயப்படுத்துகிறது. மாணங்களைப் பொறுத்த வரை நாம் அபிவிருத்தியில் பின்னடைவு நிலையைக் கொண்டுள்ளோம். மாகாண அரசானது அபிவிருந்தியின் முக்கிய இயந்திரமாகும். அது தேவையான வளங்களைத் தயார் படுத்துவதுடன் மாகாண தொழில் முயற்சிகளை நிறுவி, பொருளாதார புனர் நிர்மாணத்தின் செயல்முறையை வழிநடத்தவும் நிர்வகிக்கவும் அதற்கு சக்தியூட்டவும் செய்கிறது. எனவே இத்த இரு அணுகுமுறைகளுக்கும் இடையில் ஓரளவு முரண்பாடு இருக்கிறது.

இப்போது இத்தகைய முக்கிய அரசாங்க முதலீட்டு திட்டமொன்றை மாகாணங்கள் உண்மையில் எந்த அளவுக்கு தாங்கிக் கொள்ளும் என்பது நிச்சயமற்றதாக இருக்கிறது. வடக்கு - கிழக்கில் மேலதிக வருமானத்தைக் குறைந்த அளவே திரட்ட முடியும் என நம்பிக்கை நிலவுகின்ற போதிலும் தீவிரவாத இயக்கங்கள் இந்தப் பகுதிகளில் இருந்து பெருந்தொகையான பணத்தைத் திரட்டி அசாதாரண யுத்த முயற்சியொன்றுக்கு முதலீடு செய்ய முடிந்துள்ளது. இருப்பினும் மேலதிக வருமானத்தைக் கறப்பதற்கு இங்கு வழக்கத்துக்கு மாறான முறைகளே கையாளப் பட்டுள்ளன. எல்லாதிருப்பினும் உள்ளூர் வளங்களைப் பொறுத்த வரை அங்கு சில பலமான சக்திகள் இருக்கலாம்.

### நிதி அளித்தல்

ஆனால், நீண்ட கால நெருக்கடிகளுக்குப்பின் தன்னை புனர் நிர்மாணம் செய்ய ஆரம்பித்திருக்கும் ஒரு பொருளாதாரத்தில் ஒரு மக்கள் நிர்வாகம், அதாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட வரிவிதிப்பு ஒன்றை சட்டமாக்குவதில் கஷ்டத்தை



படிப்பகம்

www.padippakam.com

எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனவே, அந்தப்பகுதியில் அபிவிருத்தி செயல் முறைக்கு நிதியளிக்கும் முழு விவகாரமும் உண்மையில் எவ்வாறு செயற்படுகிறது என்பது எனக்குத் தெரியாது. அணி இலக்கணத்துடன் இது பேசப்பட்ட போதிலும் இது முக்கியமாக பெருமளவில் இன்னொன்றில் சர்ந்துள்ள வகையான பொருளாதாரமாக, தேசிய பொருளாதாரத்தில் இருந்து அதிக வேறுபாடு இல்லாத பொருளாதாரமாக இருக்கும். மாகாணத்தில் உள்ள வருமான அடிப்படை தொடர் செலவினத்தை அரிதாகவே சமாளிப்பதுடன் முதலீட்டுச் செலவினம் வெளிவாரி வழிகள் மூலம் நிதியளிக்கப்பட வேண்டியுள்ளது. இணைப்புகள் உண்மையில் தெற்கு இலங்கையுடன் ஏற்படுத்தப்படுமா அல்லது வர்த்தகம், முதலீடு தென்னிந்தியாவுடன் ஏற்படுத்தப்படுமா என்ற கேள்வி அடுத்து எழுகிறது. எதிர்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார கூட்டுறவு. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார இணைப்பு போன்றவற்றில் வடக்கு–கிழக்கு ஒருமுக்கிய பங்களிப்பை ஆற்ற முடியும். அதாவது, இந்திய சந்தையில் பிரவேசிக்க உதவும் ஒரு வாகனமாக வடக்கு - கிழக்கு இயங்க முடியும். இது ஒரு சுவாரஸ்யக் கருத்து. ஆயினும் அரசியல் நோக்கு காரணமாக சமீப வருங்காலத்தில் அந்தத்திசையில் முக்கிய முன்னேற்ற நடை இருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. முதலீட்டைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கை விட தெற்கு இலங்கை இலாபகரமானது என்பதை இந்திய முதலீட்டாளர்கள் கண்டுள்ளதாக நான் நினைக்கிறேன். வரலாற்று ரீதியாக இந்திய முதலீடு தெற்குக்கு நகர்ந்தது. வடக்குக் கிழக்கை விட சுதந்திர வர்த்தக வலயத்துக்கு அது சென்றது. தொழிற்சாலைகளை நிறுவும் இடங்கள் திரும்ப வேறு இடத்துக்கு மாறும் சாத்தியம் சமீப வருங்காலத்தில் ஏற்படும் என எனக்குத் தோன்றவில்லை. சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்புகள் ஆகிய விடயங்களில் வடக்கு கிழக்கில் அசாதாரண சமத்துவமின்மை நிலவுவதும் எதிர்கால அபிவிருத்தி முயற்சியைப் பொறுத்தவரை அடிப்படைப் பிரச்சினையாக நான்கருதுகிறேன். யாழ்ப்பாண குடாநாட்டில் வசதிகளின் அதிகமான குவிவு இருந்துள்ளது. இந்த ஏற்றத்தாழ்வான நிலைகளை எவ்வாறு சரி செய்வது என்பது முக்கிய பிரச்சினையாக இருக்கும்.

இது போன்ற ஒரு கவலை பல்வேறு இனமக்களைக் கொண்ட கிழக்கு மாகாணம் சம்பந்தமாகவும் எழுகிறது. மகாண நிர்வாகம் அங்குள்ள பிரதேசங்களுக்கு இடையிலும், சமூகங்களுக்கு இடையிலும் நீதி, நியாயம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சாதியுடன் சம்பந்தப்பட்ட சமூகரீதியான நசுக்குதல் ஆகியவை பற்றிய முழுப் பிரச்சினையையும் எந்த அளவுக்கு மனப்பூர்வமாக எடுத்துச் சொல்ல முடியும் என்பது இன்னொரு பிரச்சினையாகும். சாதி, வகுப்பு பிரச்சினைகளைதணிவிக்கும் நடவடிக்கைகளை சிறிது சிறிதாக மேற்கொண்டிருந்தாலும் அது நசுக்கப்பட்ட இம்மக்களின் வாழ்வை உயர்த்த உதவி இருக்கும். வரலாற்று ரீதியான இந்த அநீதிகளைப் போக்குவதற்கு உறுதியான செயல் திட்டங்கள் எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்பதைப் பார்க்கவேண்டும். இது மிகவும் உன்னிப்பாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

*

ஒரு கற்பனா ரீதியில் இப்பிரச்சினை பேசப்படுவதைப் பார்க்க நான் தனிப்பட்ட முறையில் விரும்புவேன். இந்த அணுகு முறைகள் உண்மையில் எந்த முறைக்கு பலனளிக்கக் கூடியவை என்பது குறித்து ஒருவர் உறுதி கொள்ள முடியாது. உதாரணமாக, இந்தியாவில் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுக்கான ஒதுக்கீட்டுக் கொள்கை அதை உருவாக்கியோர்கள் எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்தியதா என்பதில் சமூக விஞ்ஞானிகள் நிச்சயமற்று இருக்கின்றனர்.

சர்வதேச மூலதனத்துடனான வளர்ச்சியிலும் பிணைப்பிலும் கவனம் செலுத்துவதாகவும் சேமநலத் திட்டங்களை சீர்குலைப்பதாகவும் இன்று உலகப் போக்கு இருந்து வருகிறது. வடக்கு. கிழக்கில் உள்நாட்டு யுத்தங்களின் அழிவுகளுக்கு அதிகம் அப்பால், ஒரு நிலைமை இருக்கிறது. அங்கு சமூகத்தை ஒரு அடிப்படையான வழியில் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளது. வளங்களின் கட்டுப்பாடுகள் இருக்கும் நிலையில் சமூகத்தை புனர் நிர்மாணம் செய்தல், மீளவழிநடத்துதல், மீள தெளிவுபடுத்துதல் என்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது கிழக்கு ஐரோப்பிய சிக்கல் நிலையை ஒத்தது. அடிப்படை சமூக மீள் ஒழுங்கை மேற்கொள்வதற்கு மேலதிக வளங்களை எப்படிக் கையாளுவது? இந்தப் பிரச்சினை வடக்கு கிழக்கு நிலைமையில் மிகவும் கூர்மையாக தலைகாட்டும். இந்நிலையில் இலகுவான தீர்வுகள் இல்லை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இங்கே இரு கஷ்டங்கள் இருப்பதாக உணர்கிறேன். அவற்றில் ஒன்று தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று வகுக்கப்படுகின்றது என்பது தெளிவாக இல்லை என்பதுவும் நீடித்த தீர்வு ஒன்று ஏற்படப் போகின்றது என்பதுவுமாகும். அந்த அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

தீர்வின் அம்சங்கள் மீள பேச்சு வார்த்தை நடத்தப்படவும் மீள விவாதிக்கப்படவும் வேண்டும் என்ற கோரிக்கைகள் எழும். இது வெறுமனே பலப்படுத்துதல், அமைத்தல் பற்றிய பிரச்சினை அல்ல. இது நிர்மாணம் பற்றிய தாகும்.

இரண்டாவது கஷ்டமாவது இன சமூகங்களுக்கிடையில் உண்மையான பிணைப்புகள் இல்லை என்பதாகும். எம்முடையதைப் போன்ற ஒரு கலப்பு சமூகத்தை இது போன்ற இணைப்புகள் எமக்கு இல்லாவிடின் எமக்கிடையில் பிளவு ஏற்படும். ஸ்திரத் தன்மை நிலவாது. ஆகவே இது ஒரு நிச்சயமற்ற நிலைமை தொடர்வதற்கு உதவும் இன்னொரு அம்சமாகும்.

மத்தியில் அதிகாரத்தில் இருக்கும் அரசுகளும் மாகாணங்களில் அதிகாரத்திற்கு வரக்கூடிய அரசுகளும் ஒன்றுக்கொன்று ஒருவகையான உறவுகளை வைத்துக் கொள்வதில் அக்கறை கொள்ள லாம் என நான் நினைக்கிறேன். அத்தகைய ஓர் உறவு இன்றி மாகாண முறை தானே இயங்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. அபிவிருத்தி மாற்றீடுகளை உருவாக்குவதில் வடக்கு கிழக்கில் பாரம்பரியமாக ஒரு குறிப்பிட்ட அளவு அக்கறை இருந்து வந்துள்ளது. கூட்டுறவு வங்கிகள் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கின்றன. அபிவிருத்தி மாற்றீடுகள் பற்றிச் சிந்திப்பதற்கும் அவற்றை அமுல் செய்வதற்கும், கணிசமான சக்தி இருந்தது. ஆனால் இப்போது அப்படியில்லை. இதற்கு ஒருபகுதி காரணம் ஆயுதபோராட்டம் ஏராளமான மக்களின் சக்திகளை உட்கொண்டு விட்டதாகும். அரசியலிலோ அல்லது பொருளாதாரத் துறையிலோ உள்ள சுயபோக்குள்ள அரசு அல்லாத இயக்கங்கள் குறைந்த அளவாவது அங்கீகாரத்தை இன்று பெற்றிருப்பது இன்னொரு காரணமாகும். அகதிகள் புனர்வாழ்வு அமைப்புகள் கூட தீவிரவாத இயக்கங்களிலேயே தங்கியுள்ளன.

நிபுணத்துவம், வளங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கு தமிழ் அகதிகள் அதிக பங்களிப்பைச் செய்யக்கூடிய சக்தியாக விளங்குகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

( 24 ம் பக்கம் பார்க்க )

( 16 ம் பக்கத் தொடர்ச்சி )

மட்டுமல்ல முழு நாட்டுக்குமான வட்டியில்லாத வங்கிக் கடன் வழங்கும் திட்டமொன்றை ஆதரிக்கிறோம். நாட்டின் சகல பொருளாதார தீமைகளுக்கும், வட்டியில்லாத வங்கிக் கடன் வழங்கும் முறையே ஒரே தீர்வு என நாம் பலமாக நம்புகிறோம். வட்டிதான் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. வட்டி விகிதம் எவ்வளவுக்கு உயர்கிறதோ அந்த அளவுக்கு வேலையில்லாப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு ஆகியவற்றின் விகிதமும் உயர்கிறது. வட்டி விகிதத்தை உங்களால் குறைக்க முடியுமானால் வாழ்க்கைச் செலவையும் வேலையில்லாப் பிரச்சினையையும் நீங்கள் குறைப்பீர்கள். வட்டி விகிதம் எதுவுமே இல்லாமற் செய்ய உங்களால் முடியுமானால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்பட்டுவிடும். ஆகவே வட்டியில்லாத வங்கிக்கடன்திட்டமும், வட்டியில்லாத அடிப்படையில் இலங்கைப் பொருளாதாரத்தை முற்றிலுமாக புரைமைத்தலும், எமது பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்று நாம் பலமாக நம்புகிறோம். இந்த அடிப்படையில் ஒரு சில வழிகாட்டியான திட்டங்களை ஆரம்பிக்க நாம் ஏற்கனவே தீர்மானித்து உள்ளோம்.

**பொருளாதார தத்துவம்**

எமது பொருளாதார தத்துவமாவது பணத்திற்கு மனிதன் உரிமையாளன் அல்ல என்பதாகும். பணம் கடவுளுக்கே சொந்தமானது. மனிதன்வெறும் நிதிப் பாதுகாவலனாகவே அமைகிறான். மற்றவர்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பாளன் என்றவகையில் பணத்தை வைத்திருக்கிறான். இந்த நம்பிக்கைகளை, யதார்த்த பூர்வமாக உருவாக்குவதும், இந்த நம்பிக்கைகளின் அர்த்தங்களை செயலுருவாக்குவதுமே இப்போது நாம் எதிர்நோக்கப்போகும் சவாலாகும். மனிதனின் இயற்கையான திறமைகளை விருத்தி செய்வதற்கும் மனிதனின் ஆளுமையை விருத்தி செய்வதற்கும், அவன செய்வதுடன் அதே சமயத்தில் மனிதனின் அடிப்படைத் தேவைகளைத் தீர்மானிக்க அரசு உரிமை கொண்டுள்ளது என நாம் நம்புகிறோம். இந்த அடிப்படை தேவைகளுக்காக வேண்டியவற்றைச் செய்தபின், மனிதனது இயற்கையான திறமைகளும் அடிப்படை ஆளுமையும் வளர்ந்து மலர்ச்சிபெற போதிய ஏற்பாடுகளைச் செய்தபின் ஏனைய எல்லாமும் பொது திறைசேரிக்குள் வரவேண்டும். பொதுதிறைசேரி மக்களின் அடிப்படை தேவைகளான உணவு. உடை, வீடு, மருந்து, கல்வி போன்றவற்றைக் கவனித்து, அவற்றை வழங்கும். மனிதன அன்றாடப் பிரச்சினைகளால் அல்லலுறக் கூடாது என்பதே எமது கொள்கையாகும். மனிதன், மனித சமூகத்துக்கும் மனித மேம்பாடுகளை விருத்தி செய்யவும் உதவ வேண்டும். இன்று மனிதனின் முழுச் சக்தியும் காலையில் இருந்து இரவு வரை வேலை செய்வதிலேயே விரயமாகிவிடுகிறது. இந்நிலையில் அவனில் எதுவும் விருத்தியடையவும் இல்லை. அவனால் உதவவும் முடியவில்லை. எமக்கு ஒரு முஸ்லிம் மாகாணசபை கிடைத்தால், ஒவ்வொரு பிரஜைக்கும் வீடு வழங்கும் பொறுப்பை எம்மால் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அபிவிருத்தி முயற்சியில் பெண்கள் மிகவும் முக்கியமான ஒரு பங்களிப்பை ஆற்றவேண்டியுள்ளனர். ஏனெனில் பெண்ணின் பங்கு சமத்துவமாக இல்லாவிடினும் ஆணின் பங்கைவிட பெண்ணின் பங்கை அதிக முக்கியத்துவமானதாக நாம் கருதுகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# வடக்கு - கிழக்கு
# இந்திய கண்ணோட்டம்

ஸி. ராத்

ஸி. ராத், முன்னர் ஐக்கிய அமெரிக்காவிலும், சோவியத் யூனியனி லும் அமைந்துள்ள இந்திய தூதுவராலயங்களில் பணிபுரிந்தவர். இப் பொழுது இலங்கைக்கான இந்தியாவின் பிரதி உயர் ஸ்தானிகராக செயலாற்றி வருகிறார்,

கேள்வி :

எல். ரி. ரி. ஈ. இயக்கத்துடன் இந்தியா நடத்திய போர் மிக நீண்டது. அத்துடன், 1962 ன் இந்திய-சீன யுத்தத்துக்குப் பின்னர் அடைந்த முதல் இராணுவ தோல்வி யையும் இந்தியா இங்கு கண்டது. உலகின் நான்காவது மிகப்பெரிய இராணுவத்தினால் ஒரு சிறிய கெரில்லா அமைப்பொன்றை நசுக்க முடியாது போய்விட்டது. இத்தகைய இராணுவ ரீதியான பின்னடைவுக்கும் அரசியல் நெருக்கடிக்கும் காரணங்கள் என்ன?

பதில் :

உங்கள் முடிவுகள் மற்றும் வார்த்தைப் பிரயோகங் கள் குறித்து நான் முரண்படுகிறேன். இராணுவ பின்ன டைவு, அரசியல் நெருக்கடி என்றெல்லாம் கூறினீர்கள். இந்திய அமைதிப்படையின் நோக்கங்களையும், இந்தியாவின் நோக்கங்களையும் முற்றிலும் தவறாக விளங்கிக் கொண்டிருப்பதனையே இது காட்டுகிறது. முதலில், இலங்கை அரசின் அழைப்பின் பேரிலேயே அமைதிப்படை இங்கு வந்தது. கொந்தளிப்பான காலகட்டமொன்றில் இலங்கையின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்குப் பாரிய பொறுப் பினை சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியா பொறுப்பேற்றுக் கொண்டது. அந்த நோக்கம் எய்தப் பட்டிருக்கிறது. மேலும், இந்த இரண்டு வருடங்களில் எல். ரி. ரி. ஈ. இயக்கம் அரசியல் பேச்சுவார்த்தைகளை நோக்கி நகர்ந்து வருவதனையும் நாங்கள் பார்த் தோம். ஆகவே, அமைதிப்படை அந்த வகையில், வெற்றி கண்டே இருக்கிறது.

கேள்வி ;

இலங்கை அரசாங்கத்துடன் புலிகள் பேச வேண்டு மென்று இந்தியா விரும்பியது என கூறுகிறீர்களா? அப்படியானால் ஜனாதிபதி பிரேமதாஸ புலிகளுடன் பேசுவதனை இந்தியா எதிர்த்தது ஏன்? திரு. பிரேமதாஸ பிரதம மந்திரியாக இருந்தபோது எல். ரி.ரி. ஈ. யுடன் பேச விரும்பியதாகவும், ஆனால் இந்தியா அதனை எதிர்த்தத னால் முடியாமல் போய் விட்டது என்றும் யோகி தனது பேட்டியில் கூறியுள்ளார். அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

பதில் :

யோகி உங்களிடம் என்ன கூறினார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் எம்மைப் பொறுத்த வரையில், புலிகள் இலங்கை அரசாங்கத்துடன் பேசு வதனை நாங்கள் எதிர்க்கவில்லை. உண்மையிலேயே, புலிகளின் தூதுக்குழுவை இங்கு எடுப்பதற்கு நாங்கள் உதவியுள்ளோம். எல். ரி. ரி. ஈ. இயக்கம் பேச்சு வார்த்தை மேசைக்கு வந்ததற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று, அமைதிப்படையிலிருந்து வந்த நெருக்குதலாகும்.

கேள்வி :

நீங்கள் முன்னர் குறிப்பிட்டது போல அமைதிப்படை அதன் நோக்கங்களில் பலவற்றை அடைந்திருந்தால், ஜனாதிபதியால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது, படையை விலக்கிக்கொள்வதற்கு இந்தியா தயங்கியதேன்? படைவிலகல் திகதி குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் ஒரு சொற்போரே இடம் பெற்று வந்தது. அமைதிப்படை அதன் நோக்கங்களை எய்துவதில் வெற்றி கண்டிருந்தால், இலங்கை அரசாங்கம் கூறியவுடனேயே அது வாபஸாகி இருக்க வேண்டுமல்லவா?

பதில் :

இதன் பின்னணி உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். உங்கள் வெளிநாட்டமைச்சர் 1989 ன் தொடக்கத்திலேயே இதனை பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதனால், படை விலகலுக்கான வேண்டுகோள் குறித்த பிரச்சினை இங்கு எழவில்லை. அமைதிப்படை ஏற்கனவே அந்த தீர்மானத்தை எடுத் திருந்தது. அது இங்கு வந்ததற்கான பல நோக்கங்கள் அடையப்பட்டிருந்தமையால் திரும்பச் செல்ல ஆயத்த மாகவே அது இருந்தது. அதனால், ''தயக்கம்'' அல்லது ''முடியாது'' என்ற பிரச்சினை இங்கு எழவில்லை. இரு நாடுகளுக்குமிடையில் கைச்சாத் திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் எங்களுக்கு இன்னும் சில கடப்பாடுகள் இருந்தன. அதனை நிறைவு செய்து விட்டுப் போகவே நாங்கள் முயற்சி செய்து கொண்டிருந் தோம்.

கேள்வி :

ஆனால், புலிகளை நிராயுதபாணிகளாக்குவது என்ற உங்கள் முக்கிய நோக்கத்தை நீங்கள் அடையத்தவறவிட்டீர் கள் அல்லவா?

பதில் :

நெருக்கடியான காலகட்டமொன்றில் இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

யின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாது காப்பதே எமது நோக்கமாக இருந்தது என்று நான் ஏற்கனவே கூறினேன். எல். ரி. ரி. ஈ. யின் பிரசன்னத் துக்கு மத்தியிலும் அமைதிப்படை அந்நோக்கத்தை நிறைவேற்றியது. புலிகளை எம்மால் நிராயுதபாணி களாக்க முடியவில்லை என்று நீங்கள் கூறியது சரிதான். அதன் காரணமாகத்தான் சண்டைகள் மூண்டன; அமைதிப்படை பலாத்காரத்தை பிரயோ கிக்க வேண்டிய நிலை உருவாகியது. ஆனால், எமது அந்தச்செய்கையின் அரசியல் நோக்கம், புலிகளை பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கச் செய்வதாகத்தான் இருந்தது. அது நிறைவு செய்யப்பட்டால், அமைதிப் படை நோக்கத்தின் பெரும்பகுதி அடையப்பட்டு விடும்.

**கேள்வி :**

**வடக்கிலும் கிழக்கிலும் சமாதானம் நிலவுவதற்கு வாய்ப்பிருக்கிறதா?**

**பதில் :**

வடக்கு - கிழக்கில் சமாதானம் நிலவுவதையே நாங்கள் விரும்புகிறோம், அதற்காகத்தான் நாங்கள் போராடினோம். பல்வேறு சமூகங்கள், பல்வேறு அரசியல் கட்சிகள் என்பன இணைந்து செயற்படு வதற்கு எவ்வளவு தூரத்துக்கு தயாராக இருக்கின் றனவோ சமாதானத்துக்கான வாய்ப்பு அதனைப் பொறுத்தே அமையும்.

**கேள்வி :**

**இந்தியாவுக்கும், (வருங்காலத்தில்) புலிகள் ஆதிக்கம்**

( 6 ம் பக்கத் தொடர்ச்சி )

மாற்றமடையும். ஜனாதிபதியும் திரு. வி. பி. சிங்கும் சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொள்ள வாய்ப் பிருக்கிறது. இந்தியாவுக்கு எதிரான ஒரு சக்தியாக நாங்கள் இருக்க மாட்டோம் என்பதற்கு சாத்தியப் பாடு இருக்கிறது. எமது விவாரங்களில் இந்தியா இராணுவ ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ தலையிடக் கூடாது என்பதைத்தான் நாங்கள் சொல்லி வருகிறோம். நாங்கள் இந்தியாவுக்கு எதிரான ஒரு சக்தியல்ல. இந்தியா எம்மீது தீர்வொன்றைத் திணிப் பதைத்தான் நாம் எதிர்த்தோம்.

**கேள்வி :**

**உங்கள் தமிழ் குழுக்களிடையே இனி மேலும் மோதல் கள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறதா?**

**பதில் :**

ஏனைய குழுக்களுடனான போர் முடிந்து விட்டது. இப்பொழுது எந்தச்சண்டையும் இடம் பெறவில்லை. ஒவ்வொருவரும்தமது சொந்த நலன்களை முன்னிட்டு, இல்லாத வற்றை புனைந்து காட்டுகிறார்கள். வடக்கு கிழக்கில் கடந்த 1½ மாதங்களாக எந்த மோதலும் இடம்பெறவில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது அங்கு முழு அளவில் சமா தானம் நிலவி வந்துள்ளது.

**கேள்வி :**

**வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களின் பாதுகாப்பு பற்றி?**

**பதில் :**

சிங்களவர்களுக்கோ அல்லது முஸ்லிம் மக்களுக்கோ எவ்விதத்திலும் நாங்கள் தொல்லை கொடுக்கப் போவதில்லை. இவ்விரு பிரிவு மக்களதும் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காக நாங்கள் ஒழுங்குமுறை யொன்றை வகுத்துக்கொள்ள வேண்டும். ஒரு தீர்வில் இந்த அம்சங்கள் அனைத்தும் அடக்கப்பட்டு விடும். இவற்றை வெவ்வேறாக எடுத்துப்பார்க்க முடியாது. எல்லாவற்றையும். உள்ளடக்கும் முழுமையான திட்ட மொன்றை வகுத்துக்கொள்ள வேண்டும்.

எனினும், எல்லாம் பிரபாகரனிலேயே தங்கியிருக் கிறது. எங்கள் பெருந்தலைவர் அவர். தீர்மானங் களை எடுப்பது அவர்தான். அவருடன் நான் ஒத்துப் போகாத சந்தர்ப்பங்களிலும் கூட நான் அவருடன் இணங்கி நடக்கிறேன்.

**செலுத்தும் வட - கிழக்கு மாகாண சபைக்கும் இடையில் பொருளாதார ஒத்துழைப்பு இடம் பெறுவதற்கான சாத்தி யம் உண்டா?**

**பதில் :**

இலங்கை அரசாங்கத்திலும் வட - கிழக்கு மாகாண அரசிலுமே அது தங்கியிருக்கிறது.

**கேள்வி :**

**இலங்கையின் இனப்பிரச்சினையில், இந்தியாவின் இது வரைகால தலையீடு குறித்த கூட்டுமொத்த நிலைமைக் கூற்றொன்றை தர முடியுமா?**

**பதில் :**

முதலில், இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப் பாட்டையும் பேணுவதற்கு நாம் உதவினோம். அடுத்தது, பயனளிக்கக் கூடிய அமைப்பொன்றை உருவாக்கிக் கொள்வதில் நாங்கள் வெற்றி கண்டோம். தேர்தலின் போது ஜனநாயகப்படிமுறை இயங்குவதற்கு உதவினோம். அவ்வாறு செய்ததன் மூலம் சட்டம், ஒழுங்கு மற்றும் நிர்வாக அமைப்பில் காணப்பட்ட பல இடைவெளிகளை நிரப்பினோம். ஆகவே இறுதிப் பகுப்பாய்வில், அமைதிப்படை தலையீடு சாதகமாகவே முடிந்திருக்கிறது என்பதை காண்பீர்கள். நீங்கள் சொன்னது போல, முழு இலக்குகளையும் எம்மால் அடைய முடியாது போனமை உண்மைதான். பத்துக்கு பத்தும் சரியாக வரவில்லை. ஆனால் இன்னமும், அதிகளவில் நன்மையே விளைந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



# கிழக்குக் கரையில் வாய்ப்புக்கள்

விக்டர் சந்தியாபிள்ளை

**லண்டனில் வர்த்தக ஆணையாளராக செயல் பட்டபோது பல மேற்கைரேப்பிய நாடுகளுடன் இலங்கையின் வர்த்தக உறவுகளை கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கு வகித்தவர் விக்டர் சந்தியாபிள்ளை. பின்னர், ஜெனீவாவில் அமைந்துள்ள சர்வதேச வர்த்தக மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக பணிபுரிந்தார். இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவராகவும் (1979 – 1984) செயற்பட்டவர். தற்பொழுது இலங்கை வணிக மேம்பாட்டு மையத்தின் தலைவராகவும், முன்னோடி ஏற்றுமதி முயற்சியொன்றின் நிர்வாக பணிப்பாளராகவும் இருக்கிறார்.**

நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணம் கல்வி நிலையில் மிகவும் பின்தங்கியதாகவே இருக்கிறது. இம் மாகாணத்தில் வாழும் இளைஞர்களும் யுவதிகளும் வாழ்க்கையிலும் அபிவிருத்தி நிகழ்வுப் போக்கிலும் பங்கெடுப்பதற்கு போதியாளவில் பயிற்றப்படாதவர்களாகவே இருக்கிறார்கள். அதனால் பண்ணைத் தொழிலாளர், சிற்றூழியர், காவலாளர் போன்ற தேர்ச்சியற்ற தொழில்களையே அவர்களால் பெற்றுக்கொள்ள முடிகிறது. தொழில் நுட்ப, தொழில் பயிற்சிகளுக்கு அறவே வசதிகளில்லை. இந்த வகையில், கிழக்கிலங்கை தொழில் நுட்பக் கழகம் மட்டுமே ஓரளவுக்கு வசதிகளை வழங்கி வருகிறது. ஒரு காலத்தில் இப்பகுதியின் முதன்மை தொழில் நுட்பப்பயிற்சிக்கல்லூரியாக விளங்கிய ஹார்டி தொழில் நுட்பக்கல்லூரி இப்பொழுது சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. தொழில் பயிற்சி வசதிகளை விருத்தி செய்யும் பொருட்டு இக்கல்லூரி உடனடியாக புனருத்தாரணம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

1983 ன் பின்னர், இனப் போராட்டம் தீவிரமடைந்ததையடுத்து இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பெரும்பாலான கட்டடங்கள் ஒன்றில் சேதமடைந்துள்ளன, அல்லது முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடங்களை புனரமைப்பதற்கு மேசன்மார், தச்சர்கள் போன்ற தொழில்தேர்ச்சி பெற்ற பெருந்தொகையானோர் தேவைப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் இத்தகு பயிற்சி பெற்ற ஆட்கள் போதியளவில் இல்லை. இங்கு நிலவும் கொந்தளிப்பு நிலை காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து (தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற) தொழிலாளர்கள் இங்கு வருவதற்கு தயங்குகிறார்கள். இதன் காரணமாக, புனருத்தாரண வேலைகளுக்கென கிழக்குப்பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் செலவழிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. சில கட்டடங்களில் ஓரளவுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கட்டடம் கட்டுதல் மற்றும் அது சம்பந்தப்பட்ட துறைகளில் உடனடி வேலை வாய்ப்புக்கள் காணப்படுவதனால் தொழில் பயிற்சி மையங்களை உடனடியாக நிறுவுதல் பயனுள்ள ஒரு முயற்சியாக இருக்கும்.

**பல்கலைக்கழகம்**

கல்வித்துறையைப் பொறுத்த வரையில் கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்பகுதியில் 1984 வரையில் பல்கலைக் கழகம் எதுவும் இருக்கவில்லை. பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக கல்லூரியாக கிழக்குப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. எமது பல்கலைக் கழகங்கள், பிரிட்டிஷ் பல்கலைக் கழக மாதிரியிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரி பல உள்ளார்ந்த குறைபாடுகளைக் கொண்டதாகும். இந்த முறைமையின் முதன்மையான குறிக்கோள் கல்வியின் பொருட்டு கல்வி என்பதாகும். கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான பெருந்திட்டம், இந்த பிரிட்டிஷ் பாரம்பரியத்திலிருந்து விலகி, வித்தியாசமான உயர் கல்வி நிறுவனமொன்றை நிறுவுதனை நோக்கமாக கொண்டிருந்தது. கல்வியை வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது இப்பிரதேச அபிவிருத்திக்கு ஒரு கிரியா ஊக்கியாக இப் பல்கலைக்கழகம் செயற்பட வேண்டுமென பெருந்திட்டம் எதிர்பார்த்தது. இந்த நோக்கத்தை எய்துவதற்கான முதற்படியாக, பேராதனை பல்கலைக் கழகத்துடன் கொண்டிருந்த இணைப்பு துண்டிக்கப்பட்டு கிழக்கு பல்கலைக் கழகம் என்ற பெயரில் இது தனியொரு பல் கலைக்கழகமாக மாற்றப்பட்டது.

பேராதனை பல்கலைக்கழகத்துடனான இணைப்பினைத் துண்டித்து புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகம், பின்வருவனவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் உள்ளூர் சமூகத்துக்கான அதன் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

1. உள்ளூர் கைத்தொழில்
2. விவசாயம்
3. கல்வி

இந்நோக்கங்களை எய்தும் வகையில் பல்கலைக்கழக பாடத்திட்டம் மீளமைக்கப்பட்டது. ஆரம்ப குறிக்கோள்களை எய்துவதற்காக கணிசமான அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு வளாகமும் ஒவ்வொரு துறையில் சிறப்புத் தேர்ச்சி கொண்ட, பல வளாகங்களைக் கொண்ட ஒரு பல்கலைக் கழமாக அது அமைக்கப்படவிருந்தது. உயிரியல் விஞ்ஞானங்கள் மற்றும் இயற்கை விஞ்ஞானங்கள் துறைகள் வந்தாறுமூலையிலும், வணிகம் மற்றும் பண்பாட்டுத்துறைகள் மட்டக்களப்பிலும் அமைந்திருந்தன. பல்கலைக்கழகத்துக்கான பெருந்திட்டத்தின் படி, கடல்வாழ் உயிரின கற்கை பீடம் திருகோணமலையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருந்தது.

**மூலவளங்கள்**

கிழக்கு மாகாணம் மூலவளங்கள் குன்றிய ஒரு பிரதேசம் என்றே கூற வேண்டும். இப்பகுதியைப் பொறுத்தவரையில் நீர்வளமே - நன்னீரும் உப்புநீரும் - பிரதான மூலவளமாக இருக்கிறது. பொருளாதார ரீதியில் அகழ்ந்தெடுக்கக் கூடிய, இங்கு காணப்படும் ஒரே கனிப்பொருள் இல்மனைட்டாகும். வடக்கில் பாரிய கண்ணாடி மணல் திட்டுக்கள் காணப்படுகின்றன. இல்மனைட்டைப் பொறுத்தவரையில் உலகின் மிக வளமார்ந்த படிவங்களில் ஒன்று எம்மிடம் இருக்கிறது. புல்மோட்டையிலேயே இப்படிவுகள் பெருமளவில் காணப்படுகின்றன. இங்கிருந்து ஆண்டொன்றுக்கு 150,000 மெட். தொன் செப்பனிடப்பட்ட இல்மனைட்டைப் பெற்று, சந்தைப்படுத்த முடியும்.

செப்பனிடப்பட்ட இல்மனைட்டைப் பொறுத்தவரையிலும் கூட, எமது போட்டி நாடுகளிலும் பார்க்கசார்புரீதியில் நாங்கள் நல்ல அனுகூல நிலையிலேயே இருக்கிறோம். எமது படிவுகளிலிருந்து குறைந்தபட்சம் 70-80% செப்பனிடப்பட்ட இல்மனைட் தாதைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், உலகின் மிகப் பெரிய உற்பத்தி நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியா 50% மட்டுமே செப்பனிடப்பட்ட இல்மனைட் தாதினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறது. சில கட்டங்களில் இந்த விகிதம் 5% வரையில் வீழ்ச்சியுற்றுச் செல்கிறது. இப்பொழுது ஆண்டொன்றுக்கு 100,000 தொன் இல்மனைட்டே அகழ்ந்தெடுக்கப்படுகிறது.

நீரியல் துறையில் நீரின் தரம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், முல்லைத்தீவிலிருந்து பொத்துவில் வரையில் அமைந்துள்ள நீர் நிலைகள் இறால் வளர்ப்புக்கு உகந்தவை என்பது கண்டறிப்பட்டுள்ளது. 1980களின் ஆரம்பத்தில் தனியார் நிறுவனமொன்றினால் மட்டக்களப்பில் அமைக்கப்பட்ட இறால் பண்ணை இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னோடி முயற்சியாகும். இது மிகவும் வெற்றிகரமான முறையில் செயற்பட்டுக் கொண்டு வந்தது. ஓரளவுக்கு செறிவு மிக்க வளர்ப்பு முறையினைப் பிரயோகித்த இந்தப் பண்ணை, உலகில் பதியப்பட்ட மிக உயர்ந்த அறுவடையைப் பெற்று சாதனை படைத்தது. இந்த முறையின் கீழ் பல நாடுகள் ஹெக்டயார் ஒன்றுக்கு சராசரி 1000-1200 கிலோகிறாம் அறுவடையையே பெறுகின்றன. ஆனால், (1987 ல் சேதப்படுத்தப்பட்டு, பின்னர் செயலிழந்து போன) கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில், நீரின் தரம் காரணமாக ஹெக்டயார் ஒன்றுக்கு 2000 கி. கிறாமுக்கும் கூடிய அறுவடை பெறப்பட்டது.

இப்பண்ணை 1987 ல் சேதப்படுத்தப்படாதிருந்தால், கிழக்கு கரையில் ஏராளமான சிறு பண்ணைகளை நிறுவுவது சாத்தியமாகியிருக்கும். உப்பு நீரேரிகளைச் சுற்றிவாழும் ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயடைந்திருப்பார்கள். இப்பகுதியில் உவர்த் தன்மை காரணமாக, நெற்செய்கை பண்ணப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இப்பொழுது கைவிடப்பட்டிருக்கிறது. நீர்வாழ் விலங்கின வளர்ப்புக்கே இப்பகுதி உகந்ததாகும்.

(20 ம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம்களின் பிரச்சினையைப் பொறுத்தவரை முஸ்லிம் சமூகம் தமிழ் இன தலைமைத்துவத்தை ஏற்காது அதிகாரத்திலுள்ள அரசியல் குழுக்களின் அமைப்பு ரீதியான தலைமைத்துவத்தை ஏற்பதாக இருக்கலாம். இது பற்றிய கவலையை அவர்கள் சில குழுவினரிடம் தெரிவித்துள்ளார்கள் என்றவரையில் அவர்களுக்கு நியாயமான அளவு இடம் அளிக்கப்படுமென நான் நினைக்கிறேன். மாகாண சபையில் தாக்கமான பிரதிநிதித்துவம், முதலமைச்சர் பதவியில் மாற்றம், அமைச்சுக்களைப் பகிர்ந்தளித்தல் ஆகியவை கொண்ட நிர்வாக முறையொன்றை அவர்கள் கோரி உள்ளனர், கல்வி, சமயம் முதலியவை தொடர்பாக ஒரு குறிப்பிட்ட அளவு கலாசார சுதந்திரத்தை அவர்கள் கோரி உள்ளனர்.

தாங்கள் ஒரு பரந்த அரசியல் கட்டுக்கோப்புக்குள் உங்கள் இன தனித்துவத்தை ஏற்றுக்கொள்வோம் என்பதும் அமைப்பு ரீதியில் உங்கள் அரசியல் தனித்துவத்தை நிராகரிப்போம் என்பதும் நீண்ட காலத்திற்கு செயற்பட முடியாத ஒரு விடயமாகும். முஸ்லிம்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பதானால் அவர்களுக்கு ஒரு அரசியல் கட்சி இருக்க வேண்டும்; நாங்கள் அவர்களுடைய அரசியல் தனித்துவத்தை நிராகரித்தால் எமக்கு அது அதிக நஷ்டத்தை ஏற்படுத்தும்.



படிப்பகம்

www.padippakam.com



# ஒருங்கிணைந்த அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றல

கே. டி. அருள்பிரகாசம்

பேராசிரியர் அருள்பிரகாசம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர். முன்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விலங்கியல்துறை பேராசிரியராக இருந்தவர். கடல் வாழ் உயிரினம் குறித்து சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

கடந்த ஏழு ஆண்டு காலமாக நாட்டின் வடக்கு-கிழக்கு பிரதேசங்கள், பாரிய அளவிலான போராட்டங்களில் மூழ்கிப் போயிருந்தன. இந்தப் போராட்டங்கள் எடுத்துவந்த பின்விளைவுகள் பாரதூரமானவை. இப்பிராந்தியங்களில் மக்களது வாழ்க்கையிலும், வாழ்க்கை மாதிரிகளிலும் பலத்த தாக்கங்களை அவை ஏற்படுத்தின. மரணித்தவர்களின் சரியான எண்ணிக்கை ஒரு போதுமே தெரியவராதிருக்கலாம். இப்பிரதேசங்களை விட்டு வேறு பிரதேசங்களுக்கும், வேறு நாடுகளுக்கும் செல்லக்கூடிய வசதிபெற்றிருந்தவர்கள் அனைவரும் அவ்விதம் சென்றுவிட்டார்கள். அவர்களில் பெருந்தொகையானோர் மீண்டும் அங்கு திரும்பி வரப்போவதில்லை. இப்பிரதேசங்களில் அமைந்திருந்த கட்டடங்கள், தொலைத் தொடர்பு அமைப்பு மற்றும் உபகரணங்கள் போன்ற பொது வசதிகள் ஒன்றில் மோசமாக சேதப்படுத்தப்பட்டுள்ளன; அல்லது முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தின் பொருளாதார அடித்தளமும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் மீது யுத்த மேகங்கள் கவிந்திருந்த அந்த இருண்ட நாட்களில், அந்நாட்டின் பல நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இந்த அழிவிலிருந்தும், இடிபாடுகளிலிருந்தும் அழகிலும் வடிவமைப்பிலும் புதிதாக பல நகரங்கள் எழுந்து வந்தன. இத்தகைய நாடுகளின், யுத்தத்துக்கு பிற்பட்ட அனுபவங்களிலிருந்து பல படிப்பினைகளை நாம் பெற முடியும். எமது துன்பங்களிருந்து மீண்டு, மீளக் கட்டியெழுப்புவதற்கான மாபெரும் வாய்ப்பு இப்பொழுது தரப்பட்டிருக்கிறது.

எதிர்கால அபிவிருத்திக்கான அடிப்படைத் தத்துவம், மீளக் குடியமர்த்தல், புனருத்தாரணம் ஆகியவற்றில் மட்டும் மட்டுப் படுத்தப்பட்டிருக்கக்கூடாது. அபிவிருத்திக்கான அனைத்து திட்டமிடல் முயற்சிகளிலும் நம்பிக்கை மிகுந்த ஓர் அணுகு முறை காணப்படுதல் அவசியம். கிடைக்கக் கூடிய மூலவளங்கள் மற்றும் உச்சமட்ட மக்கள் பங்கேற்றல் என்பவற்றின் அடிப்படையில், எதிர்காலத்துக்கான ஒரு புதிய தரிசனத்துடன் இத்திட்டம் வகுக்கப்படுதல் வேண்டும்.

குறுங்கால நலன்களுக்கென்று ஒழுங்கற்ற விதத்தில் அவ்வப்போதைக்கு திட்டங்களை வகுத்துக் கொள்ளும் முறை முற்றாக தவிர்க்கப்படுதல் வேண்டும். மாறாக, இப்பிராந்தியத்தின் அபிவிருத்திக்காக நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்கப்பட்ட, கூடிய கரிசனையுடன் தயாரிக்கப்பட்ட, ஒருங்கிணைந்த செயல் திட்டமொன்று தேவை.

## மனித வளம்

வடக்கிலும் கிழக்கிலும் காணப்படும் மிகப் பெரிய இயற்கை மூலவளமும் புதுப்பிக்கப்படக் கூடிய மூலவளமும் அப்பகுதியின் மக்களாவர். இந்த வளத்தில் பெரும்பகுதியை துரதிர்ஷ்டவசமான, மரணம், காயம் அல்லது வெளியேறுதல் போன்றவற்றில் நாங்கள் இழந்திருக்கிறோம்.

அபிவிருத்தி திட்டமிடலுக்கு தேவையான ஆராய்ச்சி, தரவு சேகரிப்பு என்பவற்றை இதுவரை காலமும் மேற்கொண்டிருந்தவர்களையும், இத்துறையில் அறிவும் அனுபவமும் பெற்றிருப்பவர்களையும் இப்பொழுது நாங்கள் ஒன்று திரட்ட வேண்டும். நிபுணர்களின் குழுமொன்றாக அவர்களை சேர்த்தெடுக்க வேண்டும். சமீப காலத்தில் பல உசாத்துணை குழுக்கள் தோன்றியுள்ளன. ஆனால், இதில் ஒரு விஷயத்தில் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். வெளிநாட்டிலோ அல்லது சர்வதேச முகவரகங்களிலோ பணிபுரிந்து பெற்றிருக்கும் அனுபவம் மட்டும், ஒருவரை, உள்ளூர் நிலைமைகளில் மிகத் தகுதியானவராக ஆக்கி விடுவதில்லை என்பதே அது.

## கல்வி முறை

எந்த மீள் அபிவிருத்தி உத்தியிலும் பள்ளி மற்றும் பல்கலைக் கழக கல்வியில் உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இன்றைய சிறுவர்கள், இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் எங்கள் தலைவர்களாக இருப்பார்கள். இச்சிறார்களில் மறைந்திருக்கும் உள்ளார்ந்த ஆற்றல்கள் அனைத்தையும் முழு அளவில் வெளிக்கொணரும் வகையில் கல்வி முறையொன்று வகுத்துக் கொள்



படிப்பகம்

www.padippakam.com

ளப்படுதல் அவசியமாகும். முன்னர் நிலவி வந்த முறைமை யை உருவத்திலும் உள்ளடக்கத் திலும் அதே விதத்தில் பேணுவது மட்டும் போதாது. ஒவ்வொரு குழந்தையும் - அதன் பொருளாதார பின்னணி, சமூக அந்தஸ்து என்பன எதுவாக இருந்தாலும் - கல்வியிலும் தொழிலிலும் சமமான வாய்ப் பினைப் பெறும் உரிமையைக் கொண்டுள்ளது. இதனை உறுதிப் படுத்தும் விதத்தில் பள்ளி, பல் கலைக்கழக கல்வி மீளமைக் கப்படுதல் வேண்டும்.

பாடசாலை அமைப்பு பல அடுக்குகளாக உருவாக்கப்பட வேண்டும். இளைஞர் அமைதி யின்மை தொடர்பான ஜனாதி பதி ஆணைக்குழுவும் இதனை எடுத்துரைத்துள்ளது. தொடக் கப்பள்ளி, கீழ் இரண்டாந்தரம், மேல் இரண்டாந்தரம் என்று இவை அமையும். அத்த கைய பாடசாலைகள் ஒவ்வொன் றும் சனத்தொகைக்கு ஏற்ற விதத்தில் பொருத்தமான அமை விடங்களில் நிறுவப்பட வேண் டும். அத்துடன் அவற்றில் சமமான வசதி வாய்ப்புக்களும் இருக்க வேண்டும். பாடசாலை யையும் அதன் நடவடிக்கைகளை யும் அபிவிருத்தி செய்வதில் பூரணமான சமூக பங்கேற்றல் இடம்பெறுவதும் அவசியம்.

இப்பிரதேசத்தின் அபிவிருத் திப்படிமுறையின் முன்னோக்கிய பயணத்தில் இங்கமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் முக்கிய பங்காற்ற முடியும். முன்னணி சமூக நிறுவனங்களாக வளர்ச்சி காண்பதற்கு இவற்றுக்கு இட மளிக்கப்படுதல் வேண்டும். பயிற்சி பெற்ற ஆட்களை உரு வாக்கி அனுப்புவதன் மூலம் மட்டும் இப்பல்கலைக்கழகங் களின் பணி நின்று விடுவதில்லை. அதைவிட முக்கியமாக, அபி விருத்திப் பயணத்தை தொடர்ச் சியாக இடம் பெறச் செய்வதற்கு அவசியமான முனைப்புக்களை யும், கருத்துக்களையும் இவை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

ஒரு புறத்தில், பாட நெறி களும் போதனா உத்திகளும் நெகிழ்ந்து கொடுக்கக் கூடியன வாக இருத்தல் அவசியம். அறி வின் பல்வேறு துறைகளிலும் தொடர்ந்து இடம்பெற்றுவரும் முன்னேற்றங்களை மாணவர்கள் கண்டறிவதற்கு இது வகை செய்யும். மறுபுறத்தில், புதிய பொருளாதாரத்துக்கு தேவைப் படும் தரவு அடித்தளத்தையும், கருத்து முனைப்புக்களையும் அபி விருத்தி செய்வதில் அவர்கள் முழு ஆற்றல்களையும் கவனத் தையும் செலுத்துதல் வேண்டும். பாரம்பரிய போதனா முறை, பயிலும் முறை என்பவற்றுக்கு மேலதிகமாக, தேவைகளுக்கேற்ற பயிற்சிகளைப்பெற்ற, அரசுக்கு பாரமாக இராது நாட்டுக்குள் ளேயோ அல்லது நாட்டுக்கு வெளியேயோ தொழில்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பட்ட தாரிகளை உருவாக்கித்தரும் ஆற்றல் இந்தப் பல்கலைக்கழகங் களுக்கு இருக்க வேண்டும். தாதி தொழில், மருந்தகம், விசேட தொழில்நுட்ப திறன்கள், விவ சாயம், கைத்தொழில் தொடர் பான துறைகள் என்பவற்றில் உயர்மட்ட பாடநெறிகள் வழங் கப்படுதல் வேண்டும்.

கரையோர மற்றும் சமுத்திர வியல் விஞ்ஞானங்கள் நிறுவன மொன்றை அமைப்பதற்கு ஆரம் பத்திலேயே முயற்சியொன்று எடுக்கப்படுதல் அவசியம். வட - மேற்கில் மன்னாரிலிருந்து கிழக்கில் பொத்துவில் வரையில் விரிந்து செல்லும் கடற்கரை யொன்றை வட - கிழக்குப்பகுதி பெற்றிருக்கிறது. இக்கரை யோரப்பகுதிக்கான நடவடிக்கை கள் ஒருங்கிணைந்த திட்ட மொன்று வகுக்கப்படுதல் வேண் டும். கரையோர மீன்பிடி, கடற் றொழில் துறைமுக அபிவிருத்தி கரையோர வளங்களை பேணுதல் போன்ற நடவடிக்கைகளாக இவை அமையலாம். இந்த நிறுவனம் திருகோணமலையில் நிறுவப்பட்டால் மிகப்பொருத்த மாக இருக்கும். தமிழ் பேசும் மக்களுக்காக பல்கலைக்கழக மொன்றை நிறுவும் நோக்கில், தமிழ் பல்கலைக்கழக இயக்கம் சில வருடங்களுக்கு முன்னர் காணியொன்றை கையகப்படுத் தியிருப்பதாக நினைக்கிறேன்.

### ஒருங்கிணைந்த அபிவிருத்தி

அனைத்துமடங்கிய ஒரு திட்டம் பல்வேறுபட்ட அம்சங் களை ஒன்றிணைக்க வேண்டும். அவற்றுள் மிக முக்கியமானவை வருமாறு:

1. போக்குவரத்தும் தொலைத் தொடர்பும்

சிறந்த முறையில் அமைக்கப் பட்ட, சிறந்த முறையில் பராமரிக் கப்பட்ட வீதியமைப்பொன்று, அபிவிருத்தியின் அனைத்து அம் சங்களுக்கும் அடிப்படையான ஒரு தேவையாகும். பெருந் தெருக்கள் மன்னாரையும் யாழ்ப் பாணத்தையும், யாழ்ப்பாணத் திலிருந்து கிளிநொச்சி, முல்லைத் தீவு, திருகோணமலை, மட்டக் களப்பு, பொத்துவில் வரையில் இணைக்கக் கூடிய விதத்தில் அமைய வேண்டும். பொருத்த மான இடங்களில், இந்த வீதிய மைப்பு தேசிய வீதியமைப்புடன் இணைய வேண்டும். வடக்கு கிழக்கு பிரதேசத்துக்குள்ளேயும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் எளிதாகவும் வசதியாகவும் மனிதர்களையும், உற்பத்திப் பொருட்களையும் போக்குவரத் துச் செய்வதே இதன் நோக்கமா கும். தற்போதைய ரெயில்வே அமைப்பு போதுமானதாகவே தெரிகிறது. ஆனால், இப்போது இயக்கத்தில் இருப்பதனை விடவும் கூடிய வேகத்தில் போக்கு வரத்தினை அபிவிருத்தி செய் வதற்காக இவ்வாமைப்பு பலப் படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. பிராந்தியத்துக்குள்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கும் அமைப்பும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு, மீளமைக்கப்படுதல் வேண்டும்.

**2. நீர்வளங்களின் முகாமையும் பாதுகாப்பும்**

வடக்கின் நீர் வளங்கள், தீபகற்பத்திலும் அதனையடுத்த பகுதிகளிலும் இயற்கையான தரைநீரை அடிப்படையாக கொண்டவையாகவே இருக்கின்றன. கிழக்கு பகுதி, அதிர்ஷ்டவசமாக மனிதனால் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கங்களையும், நதி அமைப்பொன்றையும் கொண்டிருக்கிறது. அதே போல வவுனியாவுக்கு வடக்கேயுள்ள பகுதியும் நீண்ட காலமாக நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பொன்றைப்பெற்று வந்திருக்கிறது.

தரை நீர் அமைப்புக்கு வருடத்தின் மூன்று மாதங்களில் இடம் பெறும் மழைவீழ்ச்சியே உதவுகிறது. தீபகற்மெங்கும் பரந்திருக்கும் கிணறுகளின் விரிவான அமைப்பொன்றுக்கு இது ஆதரவளிக்கிறது. இப்பகுதி மக்கள் முழுவதும் இக்கிணறுகளையே நம்பியிருக்கிறார்கள். பெறுமதி வாய்ந்த இந்த வளம் கடந்த சில வருடங்களாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. அத்துடன் அவை சரியான கவனிப்பைப் பெறவுமில்லை. அதுதவிர, தாய்மைக் கேட்டினாலும் பாதிப்படைந்துள்ளன. சரியான விளக்கமும் அறிவும் இன்மையே இதற்கான மூல காரணமாகும்.

விவசாய விளைச்சலைப் பெருக்கும் நோக்கில் பெருவாரியான உரவகைகளும், பூச்சிகொல்லிகளும் பாவிக்கப்பட்டு வந்துள்ளன. நீர்ப்பாய்ச்சலின் போது நீர் பம்புகள் தேவைக்கும் அதிகமான நீரை உறிஞ்சி எடுக்கின்றன. அதனால் தரை நீரில் நைட்ரேட் அமிலமும், ஏனைய அபாயகரமான மாசாக்கிகளும் திரண்டுள்ளன. தரை நீர் குறித்த நிபுணர்களைக் கொண்ட ஓர் ஆய்வும், பகுப்பாய்வும் அவசியமாகும். விஞ்ஞானபூர்வமான நீர் எடுக்கும் முறை மற்றும் முகாமை என்பன குறித்து கொள்கையொன்று உருவாக்கப்படுதல் வேண்டும். நீர் வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதற்கும், மாசாக்கலை ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கும் விஸ்தரிப்புச் சேவைகள் மூலம் விவசாயிகளை பயிற்றுவிக்க வேண்டும்.

குளங்கள் மற்றும் கால்வாய்களின் போக்கு என்பன குறித்து முற்றுமுழுதான மதிப்பீடொன்று செய்யப்படுதல் அவசியம். இந்த நீர் நிலைகளை புனருத்தாரணம் செய்வதற்கும், விரிவுபடுத்துவதற்கும், சரியான முறையில் பயன்படுத்துவதற்குமான மாதிரிகளை வகுத்துக்கொள்வதற்காக ஆய்வொன்று செய்யப்படுதல் வேண்டும்.

**3. விவசாய முறைகளும் நிலப்பாவனையும்**

எங்கு அமைந்திருந்தாலும் நிலம் என்பது மிகப்பெறுமதி வாய்ந்ததும், வரையறுக்கப்பட்டதுமான ஒரு மூலவளமாகும். வடக்கு கிழக்கு-மாகாணங்களைப் பொறுத்த வரையில் இது மிகப் பொருந்தும். ஒவ்வொரு ஏக்கர் நிலமும் அதற்குரிய சரியான பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனையும், விஞ்ஞானபூர்வமாக சரியாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பனையும் உறுதி செய்யும் விரிவான நிலப்பயன்பாட்டு உத்தியொன்று வடக்கு – கிழக்கு பகுதிக்கென்று உருவாக்கப்பட வேண்டும்.

விவசாய முறை அபிவிருத்தியின் பிரதான நோக்கம், பிழைப்பூதிய மட்டத்தில் வாழ்க்கை நடாத்தும் விவசாய சமூகமொன்றை உருவாக்குவதல்ல. சமூகத்தினதும், பொருளாதாரத்தினதும் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகள் சமூகமொன்றை கட்டியெழுப்புவதே அதன் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

விளைவிக்கப்படும் பயிர்கள் மற்றும் விவசாய முறைகள் குறித்த மீள் மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு இது உகந்த தருணமாகும். குறிப்பிட்ட ஒரு பயிர் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் முன்னர் பயிரிடப்பட்டு வந்திருக்கிறது என்ற காரணத்தை வைத்துக்கொண்டு அதுதான் மிகப்பொருத்தமான பயிர் என்று கூற முடியாது. பனைமரத் தோட்டக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வது குறித்து இப்பொழுது பேசப்பட்டு வருகிறது. பனை மரம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சிறிய மக்கள் கூட்டமொன்றுக்கு ஆதரவளிக்கக்கூடியதாக இருந்தது. சனப்பெருக்கம் ஏற்பட்டு, தேவைகள் பாரிய அளவுக்கு மாற்றமடைந்துள்ளன. வடக்கில் அல்லது கிழக்கில், பனையும் அதன் அதன் உற்பத்திகளும் அப்பகுதி பொருளாதாரத்தில் இனிமேலும் முக்கிய பங்கொன்றை வகிக்க முடியும் என்று நினைப்பது மடமையாகும்.

கேள்வி நிலைமைகளுக்கேற்ப விவசாயிகள் தமது பயிர்களை மாற்றி வந்திருப்பதனை கடந்த காலத்தில் கண்டிருக்கிறோம். ஒரு காலத்தில் புகையிலை பயிரிடப்பட்ட பகுதிகளில் இப்பொழுது வெங்காயமும், மிளகாயும் பயிரிடப்படுகிறது. பயிர்ச் செய்கை முறைக்கு புதிதாக வந்து சேர்ந்த இரு பயிர்களை இங்கு சிறப்பாக குறிப்பட வேண்டும். உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையும், திராட்சைச் செய்கையுமே அவை.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நுகர்வுக்கென்று பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய அடிப்படை



படிப்பகம்

www.padippakam.com

யிலான உற்பத்திகளை உற்பத்தி செய்யும் சாத்தியப்பாடுகள் குறித்து முனைப்புடன் ஆராய்ந்து பார்த்தல் அவசியம். இது பொருத்தமான நிலப்பாவனை, உற்பத்தி பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றின் ஒருங்கிணைப்பை வேண்டி நிற்கும். மாம்பழ உற்பத்தி மற்றும் அதனை தகரத்திலடைக்கும் தொழிற்சாலை என்பவற்றுக்கு இப்பகுதி பொருத்தமானதா என்பதனையும் பார்க்க முடியும்.

கரையோரத்தின் சில பகுதிகளில் மணல் நிறைந்திருப்பதுடன், மணல் குன்றுகளும் அங்கு காணப்படுகின்றன. இந்தியாவில் இத்தகைய பகுதிகளில் கசுவாரினா தாவரம் பரவலாக நடப்பட்டுள்ளது, அத்தகைய பயிர்ச்செய்கையினால் பல்வகைப்பட்ட பயன்கள் கிடைக்கின்றன. ஒழுங்கான பயிர்ச்செய்கை மற்றும் மீள்நடுகை என்பவற்றின் மூலம் விறகு எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியும். மண்ணின் நிலை விருத்தியடைந்து, பலப்படுத்தப்படுகிறது. சூழலின் கடுமையான தன்மை தணிகிறது.

சாத்தியமான இடங்களில், பருவகால குளமொன்றை சுற்றி சமூக அடிப்படையிலான ஒருங்கிணைந்த செய்திட்டங்கள் வகுக்கப்படலாம். இந்தப் பருவகால குளங்களில், ஒரு சமூக முயற்சியாக பாரியளவு மீன் உற்பத்தியை மேற்கொள்ள முடியும்.

#### 4. கால்நடை வளர்ப்பு

பிழைப்பூதிய அணுகுமுறையிலிருந்து, வர்த்தக மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட அணுகுமுறையொன்றுக்கு மாறிச் செல்லல் அவசியமாகும். மந்தைக் கூட்டங்களும், தனியாக இருக்கும் விலங்குகளும் பெரும்பாலும் தரம் குறைந்தவையாகும். இத்தகைய விலங்குகளில் பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி மட்டங்கள் மிகக்குறைவாகவே இருப்பதுண்டு. செயற்கை முறை சினைப்படுத்தல் திட்டங்கள் கால்நடைகளின் தரத்தை விருத்திசெய்ய முடியும். ஆனால், இது மிக மெதுவான ஒரு படிமுறையாகும். தர விருத்தியும் நிலையானதாக இருக்கமாட்டாது. உள்நாட்டுப் பசுக்களுக்கு உயர்தரமான பசுக்களின் கருக்களை மாற்றுவதன் மூலம் குறுகிய காலத்தில் நல்ல விளைவுகளை பெற்றுக்கொள்வது சாத்தியமாகும். இத்தகைய செய்திட்டங்களுக்கு குளங்களைச் சூழவுள்ள கிராமங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களைக் கொண்டு இத்திட்டம் முற்றிலும் கண்காணிக்கப்படல் அவசியம். மாற்று வேலை, பசுக்களின் பராமரிப்பு, கன்றுகளை அபிவிருத்தி செய்தலும் வளர்த்தலும், பால், இறைச்சி உற்பத்தி ஆகிய அனைத்து அம்சங்களிலும் இந்த கவனிப்புத் தேவை. ஒரு கிராமத்தில் இம்முயற்சியில் ஈட்டும் வெற்றி, ஏனைய பகுதிகளுக்கான ஒரு மாதிரியாக அமையமுடியும். பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஒரு பகுதியாக பட்டர், சீஸ், நெய் போன்றவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்படலாம். இதற்கென போதிய வழிகாட்டு முறைகளும், பொது வசதியமைப்புக்களும் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

#### 5. மீன்பிடியும் நீரியல் துறையும்

கரையோரப்பகுதிகளின் மீன்பிடித்துறை நடவடிக்கைகள் கடந்த சில வருடங்களாக மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், இக்காலப் பகுதியில் மீன்களின் எண்ணிக்கை பெருகுவதற்கு இது வழிகோலி இருக்க முடியும்.

வடக்கு - கிழக்கு இரு பிரதேசங்களிலும் விரிவான ஓர் உப்பு நீரேரி அமைப்பு காணப்படுகிறது. இதில் இறால் வளர்ப்பினை அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. முதலில் இப்பிரதேசங்கள் இனங்காணப்பட்டு, அதன் பின்னர் இறால் வளர்ப்புக்கான விரிவான திட்டமொன்று வகுத்துக்கொள்ளப்படல் வேண்டும். மூலதனச் செறிவுமிக்க பெரிய தொழில் முயற்சியாளர்களின் முயற்சிகளுக்கும், சிறு அளவு விவசாயிகளின் பங்கேற்புக்குமிடையே ஒரு சமநிலை பேணப்படுதல் வேண்டும். இதற்காக, உற்பத்தி திறமையை தியாகம் செய்ய வேண்டுமென்பதில்லை. குஞ்சு பொறிக்கும் மையங்களை அபிவிருத்தி செய்வதற்கும், அறுவடையின் பின்னரான வினியோகத்துக்கும், சிறு உற்பத்தியாளருக்கான விரிவாக்கப்பணிக்கும், நல்ல போக்குவரத்து, சந்தைப்படுத்தல் அமைப்புக்கும் என திட்டங்கள் அவசியம்.

பருவகால குளங்களை உள்ளூர் மீன்பிடிக்கு பயன்படுத்துவது குறித்து ஏற்கனவே குறிப்பிட்டோம். பொருத்தமான குளங்களும், கால்வாய் அமைப்புக்களும் இருக்கும் இடங்களில் மீன் உற்பத்திக்காக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். மீன் எப்பொழுதும் மிக மலிவான ஒரு புரதமாக இருந்து வருகிறது. எனினும், வளர்ப்புக்கென பொருத்தமான மீன் இனங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அத்துடன், குஞ்சு பொறிக்கும் நிலையங்களும் அமைக்கப்பட வேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்நாட்டு மீன் வளர்ப்பில் திலுபியாஸ் என்ற தரம் குன்றிய மீனே வளர்க்கப்படுகிறது.

#### 6. கைத்தொழில்

குறுங் காலத்தில், கைத்தொழில் முயற்சிகள் வளர்ச்சி கண்டு,

www.padippakam.com

பொருளாதாரத்தின் மீது தாக்கமொன்றை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் குறைவாகும், முதல் நிலை உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதியைச் சேர்க்கும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகள் அபிவிருத்தியின் முக்கிய கவனத்தைப் பெறுவனமாக இருக்க வேண்டும்.

அகழ்ந்தெடுக்கக் கூடிய நல்ல தரமான மணல் பெருமளவில் காணப்படுவதால், கண்ணாடிக் கைத்தொழிலொன்றை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பும் தென்படுகிறது. அலங்கார கண்ணாடிப் பொருட்களையும், பாவனைக் கண்ணாடிப் பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

### 7. சுற்றுலாத்துறை

உஷ்ண வலய நாடுகளிடம் இருக்கும் பெரிய சொத்துக்களில் ஒன்று, அந்நாடுகளின் எழிலும், பல்வேறு விதங்களில் அமைந்துள்ள அவற்றின் சூழலுமாகும். சரியான முறையில் பராமரிக்கப்பட்டு, முறையாக பயன்படுத்தப்பட்டால் வடக்கினதும், கிழக்கினதும் சுற்றுச் சூழல் மற்றும் பண்பாட்டு முதிசத்தைச் வைத்து சுற்றுலாக் கைத்தொழிலொன்றை கட்டியெழுப்ப முடியும். 1983 க்கு முன்னர் கிழக்குப் பிராந்தியம் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுத்தது. முன்னைய படிப்பினைகளை அடிப்படையாக கொண்டு வடக்கிலும், கிழக்கிலும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். சுற்றுலாக் கைத்தொழிலின் தேவைக்கும், பண்பாட்டுத்தனித்துவத்தையும் அடிப்படைப் பெறுமானங்களையும் பேணிக்காத்துக் கொள்வதற்கும் இடையில் சரியான சமநிலையொன்று வைத்துக்கொள்ளப்பட்டால் சுற்றுலாத்துறையின் தீய விளைவுகளை குறைத்துக் கொள்ள முடியும்.

### அமுல்படுத்துவதற்கான உத்தி

வடக்கு - கிழக்கின் பொருளாதாரத்தை விவேகமான முறையில் திட்டமிட்டு, துரிதகதியில் அபிவிருத்தி செய்ய வேண்டியது, மாகாண நிர்வாகமொன்றின் முழுமுதல் கடமையாகும். பிரதான அபிவிருத்தித்துறைகள் குறித்த சில கருத்துக்கள் இந்தக் கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை அல்லது வேறேதும் அபிவிருத்தி முயற்சிகளை திட்டமிடும் போது முதல் படியாக செய்ய வேண்டியது, அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் மாதிரிகள் என்பன குறித்து ஆழமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கென (பெரும்பாலும் உள்நாட்டு) நிபுணர்களைக் கொண்ட குழுக்களை அமைப்பதாகும். இங்கு விவரிக்கப்பட்ட பல திட்டங்கள் வடக்குக்கும், கிழக்குக்கும் சிறப்பானவையாக இருந்த போதிலும், இவற்றின் வெற்றிகரமான அமுலாக்கலுக்கு ஏனைய மாகாணங்களினதும், மத்திய அரசினதும் ஒத்துழைப்பும், கூட்டும் முக்கியமாக தேவை. அழிவுகள் இடம்பெற்று முடிந்துள்ள தற்போதைய சூழ்நிலையில், ஒருங்கிணைந்த திட்டமொன்றின் கீழ் தனித்தனித்திட்டங்கள் முறையாக வகுக்கப்பட்டால் அவற்றுக்கு உதவுவதற்கு வெளிநாட்டு நிதி வழங்கும் முகவரகங்கள் முன்வரும். அழிவின் சாம்பலிலிருந்து புதிய, வளமான சமூகமொன்றை கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எங்கும் தெரிகிறது.

( 8 ம் பக்கத் தொடர்ச்சி )

வைப்பதாக இலங்கை அரசாங்கம் எமக்கு உறுதி அளித்தது. ஆனால் இன்று வரை எதுவும் நடைபெறவில்லை. முதலில் இவைகள் எல்லாம் ஒன்று கூடி பேசவேண்டும். இது சாத்தியமில்லாத போது எமக்குள்ளே ஒரு புரிந்துணர்வினை எவ்வாறு ஏற்படுத்துவது? இதனால் சபையில் நாங்கள் தொடர்ந்திருப்போம். கூடிய அதிகார பரவலாக்கலுக்கான எமது போராட்டமும் தொடரும். அதிகாரபரவலாக்கலை செய்யாதவிடத்து, எமக்கு காட்டுக்கு போவதைத்தவிர வேறு வழி கிடையாது. இலங்கை அரசாங்கத்துக்கு திட்டவட்டமான கொள்கை எதுவும் கிடையாது.

இலங்கை அரசாங்கம் அதிகார பரவலாக்கலுக்கு சம்மதிக்குமாயின், சுமுக சூழ்நிலை உருவாகும். இது நடக்காது போனால், போராட்டம் தொடரும். இது தான் நிலைமையாயின், எல். ரி. ரி. ஈ கூட இலங்கை அரசாங்கத்துடன் மோத வேண்டியேற்படும். இவ்வாறான நிலைமையில் எம்முடன் பேச்சு வார்த்தையினை ஆரம்பிக்கும் நோக்கில் எல். ரி. ரி. ஈ. யினர் எம்மை அணுகுவர். இதனால் தீவிரவாதக்குழுக்கள் யாவும் மீண்டும் ஒன்றிணைய வாய்ப்பில்லை என்றும் கூறிவிட முடியாது.

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்துரை இந்தியா கைகழுவிவிட்ட தென்றே கூற வேண்டும். இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து வரும் பரிவர்த்தனைகளைத்தவிர இந்தியத் தலையீடு ஏதேனும் எதிர்காலத்தில் ஏற்படாதென்றே நான் கருதுகிறேன். இதனால், 1983 க்கு முந்திய தொரு நிலைக்கே நாம் செல்ல வேண்டியேற்படலாமென நான் நினைக்கிறேன். இவ்வாறான சூழ்நிலையில், மீண்டும் இனப்போர் மூண்டால், நான் முன்பு கூறியதைப் போன்று இலங்கை இராணுவத்தை எதிர்த்து சகல தமிழ் குழுக்களும் ஒன்றிணைந்து போராடும்.



படிப்பகம்

www.padippakam.com

# வடக்கு - கிழக்கு

## மத்திய அரசு மற்றும் மாகாணங்களின் உறவுகளின் முக்கியத்துவம்

சி. சூரியகுமாரன்

பேராசிரியர் சி. சூரியகுமாரன் சர்வதேச அரங்கில் பொறுப்பு மிக்க பல பதவிகளை வகித்து ஓய்வு பெற்றவர். இப்பொழுது லண்டன் பொருளியல் பள்ளியில் கௌரவ பேராசிரியராக இருக்கிறார்.

இப்பொழுது வடக்கு-கிழக்கில் முழு அமைப்பும் சீர்குலைந்து போயிருக்கிறது. இயற்கை வளங்கள், மனிதவளம், பொது வசதிகள் போன்ற அனைத்துமே இதிலடங்கும். மனித வளம் சிதைந்தும் பலம் குன்றியும் உள்ள ஒரு நிலை காணப்படுகிறது. நீடித்த போராட்டம், குடிபெயர்வு, அபிவிருத்தி முன்னுரிமைகளில் சரியான கவனம் செலுத்தப்படாதிருந்தமை போன்ற பல காரணிகளின் கூட்டு விளைவாக இந்நிலைமை தோன்றியுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் செலுத்தப்பட்ட கவனம், அதே அளவில் வடக்கு - கிழக்கில் செலுத்தப்படவில்லை.

பல வருடங்கள் நீடித்துச் சென்ற, நெருக்கடிகள் சூழ்ந்த கொந்தளிப்பு நிலை தணிந்து வரும் இவ்வேளையில், புனருத்தாரணம், புனரமைப்பு, அபிவிருத்தி என்பவற்றின் தெரிவில் நாம் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். இந்தப் பின்னணியில் நான்கு அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. முதலில் நீங்கள் நிவாரண உதவியை வழங்குகிறீர்கள். இரண்டாவதாக, புனருத்தாரணம் செய்கிறீர்கள். அடுத்து புனரமைப்பு, இறுதியாக அபிவிருத்திக்கு திட்டமிடுவதிலும், சிந்தனை செய்வதிலும் நாங்கள் ஏற்கனவே காலம் பிந்திவிட்டோம். மாகாண சபைகள் செயற்பட்டு வருவதனால், அபிவிருத்தியில், மத்திய அரசு தனது பொறுப்பை கைகழுவிவிட முடியாது. ஏனென்றால், 13 ஆவது திருத்தத்தின் பிரகாரமும் கூட, திட்டமிடலிலும் அபிவிருத்தியிலும் மத்திய அரசு முக்கிய பங்கினை வகிக்க வேண்டியிருக்கிறது. கொள்கை வகுப்பு, மூல வளக் கட்டுப்பாடு, தீர்மானங்கள், அன்னியச் செலாவணி, வெளிநாடுகளுடனான பேச்சு வார்த்தைகள் போன்ற விடயங்களில் இது அமைகிறது.

வடக்கு - கிழக்குப் பிரதேசம் பொதுவாக ஒரு வரண்ட பகுதி என்றும், கலவரமோ குழப்ப நிலைமைகளோ இல்லாதிருந்தாலும் கூட அப்பகுதியை குறிப்பிட்ட ஒரு மட்டத்துக்கு மட்டுமே அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் ஒரு தப்பபிப்பிராயம் நிலவி வருகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளில் காணப்படும் சராசரி உள்ளார்ந்த ஆற்றல் வடக்கு - கிழக்கில் இல்லையென்றும் கருதப்படுகிறது. ஆனால், இந்த நம்பிக்கைகளுக்கு மாறாக, வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் மிகச்சிறந்த உள்ளார்ந்த அபிவிருத்தி ஆற்றல்களைக் கொண்டுள்ளன என்று நான் துணிந்து கூறுவேன். சரியான கொள்கைகள் வகுக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்துக்கும் மாகாணத்துக்கும் இடையில் நல்ல ஒத்துழைப்பு நிலவும் பட்சத்தில், இனி வரும் 10 வருட காலத்தில் வடக்கு – கிழக்கு பாரிய அபிவிருத்தியை இலகுவில் எய்த முடியும். தெற்கில் நிலவும் மிகச் சிறந்த வாழ்க்கைத் தரங்களுடன் ஒப்பிடக் கூடிய வாழ்க்கைத்தரம் இங்கு உருவாகும். யதார்த்த ரீதியான மதிப்பீடொன்றின் அடிப்படையிலேயே இதனை நான் கூறுகிறேன்.

அபிவிருத்திப் படிமுறையொன்றை ஆரம்பிக்கும் போது, மனிதவள அடித்தளம் வறியது என்று கூறுவதும் தவறானதாகும். தொழிலில் இருந்து கொண்டே ஒருவர் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு எடுக்கும் காலம் பாடசாலை வருடங்களைவிடவும் குறைவானதாகும். வேலையில் இருந்து கொண்டே பயிலும் விஷயத்தில் எமது மக்கள், சாய்வு நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் எம்மை விடவும் எவ்வளவோ கெட்டிக்காரர்கள்.

### திட்டமிடல்

நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ள தேர்ச்சி பெற்ற நபர்களில் பெருந்தொகையானோர் மீண்டும் இங்கு திரும்பி வருவார்கள் என்று கூற முடியாது. ஆனால், வேறு சில வழிகளில் அவர்களால் பங்களிப்புச் செய்ய முடியும். இதிலான்று நிதிகளின் பாய்ச்சல். பிரிந்து சென்ற மக்கள் பொதுவாக தமது இல்லங்களை, கிராமங்களை பிரதேசத்தை ஏக்கத்துடன் நினைவு கூர்வது இயல்பு. அதனால் நிதிகளின் வருகை சாத்தியமானதே.

ஏனைய பிரதேசங்களில் போலவே, வடக்கு – கிழக்கிலும் அபிவிருத்தி நிகழ்வுப் போக்கு வெற்றிகரமாக அமைவதற்கு முதலில் சில அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். சில ஆதார நிறுவனங்களின் ஸ்தாபிதத்துக்கு ஆழ்ந்த கரிசனையுடன் திட்டமிடப்படுதல் அவசியம். கடல்வாழ் விலங்கின உயிரியல், உயிர் - தொழில்நுட்ப



படிப்பகம்

www.padippakam.com

வியல், விவசாயம் மற்றும் பௌதீக, இரசாயன, பொறியியல் விஞ்ஞானங்கள் என்பவற்றில் இந்த அடிப்படைக்கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படல் வேண்டும். இவ்விஷயத்தில் இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிறையவே வாய்ப்பிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து அவர்களால் இவற்றை நிதிப்படுத்த முடியும்.

பொதுவான நோக்கில், திட்டமிடும் விஷயத்தில் வடக்கு-கிழக்குப் பகுதிக்கென்று ஒரு தனியான முறை இல்லை. கரு, உட்கிடக்கை போன்ற அம்சங்களில் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கான திட்டமிடலுக்கும் வடக்கு-கிழக்கு திட்டமிடலுக்கும் இடையில் எந்த வித்தியாசமுமில்லை. எங்கும் திட்டமிடும் முறை ஒன்றே. தற்போது நிலவும் பொருளாதார வளர்ச்சி மட்டங்கள், தேவைகள் அல்லது இலக்குகளின் மதிப்பீடு நிதி, இயற்கை, மானுட மற்றும் தொழில்நுட்ப மூலவளங்களின் ஆற்றல்கள் குறித்த மதிப்பீடு என்பவற்றின் அடிப்படையிலேயே, பொதுவாக திட்டமிடல் மேற்கொள்ளப்படுகிறது. வழமையாக, உள்ளார்ந்த ஆற்றல்களை இரு கட்டங்களில் மதிப்பீடு செய்ய முடியும். கிடைக்கக்கூடிய உடன் ஆற்றல், இரண்டாவது கட்டம் அல்லது நீண்ட கால ஆற்றல். உடனடியாக கடற்றொழில், விவசாய இரசாயனங்கள் மற்றும் கடதாசி என்பவற்றில் உற்பத்தியினை அதிகரிப்பது சாத்தியமாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் பாரிய அளவிலான உள்ளார்ந்த ஆற்றல் புதைந்து கிடக்கிறது. ஆனால், முதலில், இதனைச்சாத்தியமாக்குவதற்கு பொது அமைப்பு வசதிகள் கட்டியெழுப்பப்படுதல் அவசியம். முதல் கட்டம் உற்பத்தி செய்வதல்ல; உற்பத்திக்கு அவசியமான பொது வசதி அடித்தளமொன்றை அமைத்துக் கொள்வதாகத்தான் இருக்க வேண்டும். புனருத்தாரணத்துக்கும், புரைமைப்புக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஆனால், ஒரு முக்கியமான இணைப்பு இருக்கிறது. புனருத்தாரண, புனரமைப்புப் பணிகள் இடம்பெறும் காலகட்டத்தில், அதனை நாம் கவனத்தில் எடுப்போமேயாயின் நல்ல திறமையுடன் செயற்பட முடியும். உதாரணமாக, எளிதில் தொடர்புகொள்ளும் வசதியோ, சென்றடையும் வசதியோ ஏனைய வசதிகளோ காணப்படாத பல பின்தங்கிய பிரதேசங்கள் இருக்கின்றன. ஆனால், ஏதாவதொரு இயற்கை வளத்தைப் பொறுத்த வரையில் வளமார்ந்த பகுதிகளாக இவை இருப்பது வழமையாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் தாவர எண்ணெய், பருத்தி, சீனி என்பவற்றின் உற்பத்திக்கு பாரிய அளவில் வாய்ப்புக்கள் தென்படுகின்றன. கடற்றொழிலை மேலும் வலுவான முறையில் அபிவிருத்தி செய்ய முடியும். மரமுந்திரிகை போன்ற உற்பத்திகளைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுச் சந்தைகள் தொடர்ந்தும் விரிவடைந்து வருகின்றன. இத்தொழில்கள் தொடர்பாக இப்பிரதேசத்துக்கு விரிவான உள்ளார்ந்த ஆற்றல் இருக்கிறது. ஆனால், இந்தக் கைத்தொழில்களும், இவற்றுடன் தொடர்பான ஏனைய தொழில்களும் அபிவிருத்தி செய்யப்பட முன்னர், நிறைவேற்றி வைக்க வேண்டிய தேவையொன்றிருக்கிறது. சமூக பொது வசதி அமைப்பு ஆதாரம், நிறுவன அமைப்பு என்பனவே அந்தத் தேவைகளாகும்.

சில பிரதேசங்கள் அதிகளவில் உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் இது இயற்கை மூலவளங்கள், திறன்கள், தொழில் முயற்சி ஆற்றல், மூலதனம் கிடைக்கும் தன்மை போன்ற பல காரணிகளின்கூட்டினை அடிப்படையாக கொண்டதாகும். இப்பிரதேசங்கள் உபரி உற்பத்திகளையும் காண முடியும். சுதந்திர நாடொன்றில் உபரி மற்றும் குறை என்பன ஏற்றுமதிகள் மூலமும் இறக்குமதிகள் மூலமும் நிவர்த்தி செய்யப்படுகின்றன. ஆனால் ஒரு மாகாணத்தைப் பொறுத்தவரையில், இந்த விஷயம் மத்திய அரசாங்கத்தின் கூட்டுமொத்த திட்டமிடல், கொள்கைத் தீர்மானங்கள் என்பவற்றிலேயே தங்கியிருக்கிறது. அதனால் தான் மத்திய அரசாங்கம் ஒரு முக்கிய பங்கினை வகிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

**பங்குபற்றல்**

அதிகாரபரவலாக்கல், அடிப்படைத் திட்டமிடலுக்கு இரு சிறப்பு அனுகூலங்களை வழங்கும். முதலில், அதிகார பரவலாக்கலின் விளைவாக, தனிப்பட்ட பிரதேசங்கள் என்ற முறையில் ஒவ்வொரு பிரதேசமும் செறிவாக கவனிப்பைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. பொதுவான பொருளாதார அலகொன்றின் ஒரு பகுதியாக இருந்து, உற்பத்தி செய்வதிலும் பார்க்க கூடியளவு உற்பத்தியை இந்த முறையின் கீழ் அவை மேற்கொள்ள சாத்தியப்பாடு உண்டு. இரண்டாவதாக, அபிவிருத்தியில் அதிகளவில் பங்களிப்பு நிகழும் ஒரு சூழ் நிலையை அவை உருவாக்கும்.

தேசிய பற்றாக்குறை, தேசிய உபரி என்பன குறித்த நிரல் பட்டியலொன்று கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். முதலீட்டு வளங்கள், நிறுவன வளங்கள், சேவைகள், மற்றும் பொது வசதிகள் என்பவற்றில் குறிப்பிட்ட ஒரு மாகாணம் எந்த நிலையில் இருக்கிறது என்பதனை அது தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். நிலைமைகள் குறித்த அனைத்துமடங்கிய தோற்றமொன்றினை மத்திய அரசு வழங்கவேண்டும். முதலீட்டு மூலவளங்களே தடங்கல்களில் ஒன்றாக இருக்கப் போகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# சென்மதி நிலுவை

## கருத்து கோட்பாடு இலங்கை அனுபவம்

டப். ஹெட்டியாரச்சி

சென்மதி நிலுவை (செ. நி) என்பதன் கருத்து மற்றும் கோட்பாடு என்பவற்றை விளக்குவதும், அதன் பின்னர், விளக்கப்பட்ட கருத்துரைகளின் பின்னணியில், இவ்விடயத்தில் 1977 - 1982 காலப்பிரிவுக்கான இலங்கையின் அனுபவத்தை பகுப்பாய்வு செய்வதும் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். இதன் பிரகாரம், இக்கட்டுரை இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகம் செ.நி.யின் கருத்து, கோட்பாடு என்பவற்றை விளக்கும். செ. நி. அபிவிருத்திகளில் 1977 - 1982 காலப்பிரிவில் இலங்கையின் அனுபவங்கள் கட்டுரையின் இரண்டாம் பாகத்தில் விளக்கப்படும்.

### பாகம் I கருத்தும் கோட்பாடும்

சென்மதி நிலுவை என்பது ஒரு நாடு வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் பெறுவனவுகளையும், வெளிநாடுகளுக்குச் செலுத்தும் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும் ஒரு பதிவு என்று சுருக்கமாக கூற முடியும். பெறுவனவுகளுக்கும் கொடுப்பனவுகளுக்கும் இடையிலான வித்தியாசம், மிகை அல்லது பற்றாக்குறை என்று கூறப்படுகிறது. இந்த பொறிமுறைக்கூடாகவே பொருளாதார உறவுகள் ஒரு நாட்டிலிருந்து உலகின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துக் செல்லப்படுகின்றன. அதன் காரணமாக, ஒரு நாட்டின் சென்மதி நிலுவை நிலை அந்நாட்டின் பொருளாதார அதிர்ஷ்டங்கள் மீது பாரியதாக்கங்களை எடுத்து வரக்கூடிய. தாகும். உதாரணமாக, உறுதியான சென்மதி நிலுவை நிலையைக் கொண்டிருக்கும் ஒரு நாடு அதன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவைப்படும் வெளிநாட்டு மூலவளங்களை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும். அதே வேளையில், பலவீனமான செ. நி. நிலையைக் கொண்டிருக்கும் ஒரு நாடு வெளிநாட்டு மூல வளங்களைப் பெறுவதில் உள்ள தடங்கல்கள் காரணமாக, தனது அபிவிருத்தி திட்டங்கள் பாதிக்கப்படுவதனை கண்டுகொள்ளும். இதுதவிர பலவீனமான செ. நி. நிலையைக் கொண்ட நாடுகளில் செலாவணி விகிதம் அடிக்கடி பெறுமதியிறக்கத்துக்கு உள்ளாகும். அத்துடன் (அல்லது) வர்த்தகத்திலும், கொடுப்பனவுகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன் அது சமூக சேம நலத்திலும் வளர்ச்சியிலும் பாதிப்புக்களை எடுத்து வருவதாக இருக்கும். ஆகவே, ஆரோக்கியமான செ. நி. நிலைமையொன்றை பேணி வருவது, ஒவ்வொரு நாட்டையும் பொறுத்தவரையில் மிக முக்கியமான ஒரு முயற்சியாகும்.

### நடைமுறைக் கணக்கு

சென்மதி நிலுவைக் கணக்கு இரு பகுதிகளைக் கொண்டது. அவை நடைமுறைக்கணக்கு, மூலதனக்கணக்கு என்பனவாகும். பொருட்கள், சேவைகள் மற்றும் மாற்றல்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியதாக நடைமுறைக் கணக்கு அமைகிறது. பண்ட ஏற்றுமதிகள், இறக்குமதிகள், கேள்வு, காப்புறுதி, துறைமுக போக்குவரத்து, வெளிநாட்டுப் பயணம், முதலீட்டு வருமானம், இராஜதந்திர செலவுகள் போன்ற பணிக்கொடுப்பனவுகள், தனியார், அலுவல்சார் மாற்றல்கள் போன்ற கொடுக்கல் வாங்கல்களே இதில் பொதுவாக அடக்கப்படுகின்றன. அசையக் கூடிய பொருட்களிலான செ. நி. கொடுக்கல் வாங்கல்கள் பலவற்றை வணிகப் பொருட்கள் அடக்குகின்றன. ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் கப்பற்றளம் வரையில் இலவசம் என்ற அடிப்படையில் பதியப்பட வேண்டியனவாகும். ஆனால், நடைமுறையில் ஏற்றுமதிகள் மட்டுமே கப்பற்றளம் வரையில் இலவசம் என்ற அடிப்படையில் பதியப்படுகின்றன. அதே வேளையில் இறக்குமதிகள், கேள்வு, காப்புறுதி செலவுகளையும் சேர்த்தே பதியப்படுகின்றன. இறக்குமதி செய்யும் நாட்டின் சுங்கத்தளம் வரையில், சர்வதேச கேள்வு, காப்புறுதிச் செலவுகளை உள்ளடக்கியதாக இறக்குமதிகள் அமையும் என்பதே இதன் கருத்தாகும். வணிகப்பொருட் கணக்கில், பண்ட ஏற்றுமதிக்கும் பண்ட இறக்குமதிகளுக்கும் இடையிலான வித்தியாசம் வர்த்த நிலுவை என்று குறிக்கப்படுகிறது. இந்த நிலுவை மிகையாகவோ பற்றாக்குறையாகவோ இருக்க முடியும். நாட்டின் ஏற்றுமதிகள் மொத்த இறக்குமதிகளிலும் பார்க்க கூடுதலாக இருந்ததா அல்லது குறைவாக இருந்ததா என்பதைப்பொறுத்தே இது அமையும். பல நாடுகளில், இது சென்மதி நிலுவையின் பலம் அல்லது பலவீனத்தை நிர்ணயிக்கும் அடிப்படைக் குறிகாட்டியாக இருந்து வருகிறது.

முக்கியமான சுற்றுலா மையங்களைக்கொண்ட நாடுகள், இராணுவ தளங்களைக் கொண்ட நாடுகள் அல்லது பாரிய அளவில் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றிருக்கும் நாடுகள் போன்ற பணித்துறையில் அதிகளவில் ஈடுபாடு காட்டும் நாடுகளைப் பொறுத்தவரையில், சென்மதி நிலுவையின் பணிகள் பிரிவு முக்கியத்துவம் பெறுகிறது. அத்தகு நாடுகளில் மோசமான வர்த்தக நிலுவைகள், பல சந்தர்ப்பங்களில், முற்றிலும் அல்லது ஒரு பகுதி பணிகளின் சாதகமான நிலுவைகளினால் ஈடு செய்யப்படுகின்றன. பணிகள் வணிகப் பொருட் கொடுக்கல் வாங்கல்களுடன் சேர்ந்து நடைமுறைக்கணக்கின் பொருட்கள் மற்றும் பணிகள் பிரிவாக அமை



படிப்பகம்

www.padippakam.com

கிறது. மாற்றல் கொடுப்பனவுகள், ஒரு தலைப்பட்சமான மாற்றல்கள் அல்லது கொடைகள் என்பன பொதுவாக மாற்றல்கள் என்று அழைக்கப்படுகின்றன. மாற்றல் கொடுப்பனவுகள் இரண்டு வகையானவை; தனியார் மாற்றல்கள் மற்றும் அலுவல்சார் மாற்றல்கள். தனியார் மாற்றல்களில் ஒரு முக்கியமான கூறு வெளிநாட்டில் தொழில் புரிவோர் அனுப்பும் பணமாகும். அலுவல்சார் மாற்றல்களில் பொதுவாக காணப்படும் ஒரு கூறு வெளிநாட்டு உதவிக்கொடைகளாகும். பொருட்கள், பணிகள் மற்றும் மாற்றல்கள் என்பவற்றில் காணப்படும் நிலுவை நடைமுறைக்கணக்கு நிலுவையாகும். ஒரு நாட்டின் சென்மதி நிலுவை நிலையை நிர்ணயிக்கும் அதி முக்கிய காரணியாக இந்த நடைமுறைக்கணக்கு நிலுவை கருதப்படுகிறது. அலுவல்சார் மாற்றல்கள், பல சந்தர்ப்பங்களில் மூலதனப்பாய்ச்சலை பிரதிநிதித்துவப்படுத்தும் காரணத்தினால் சில வேளைகளில் அது நடைமுறைக்கணக்கு நிலுவையிலிருந்து விலக்கப்படுகிறது. மாற்றல்களை மூலதனக் கணக்கில் பதிவு செய்வதனால் ஏற்படும் ஒரு பிரச்சினை மெய் மூலவளங்களின் ஒரு கொடை, பெறும் நாட்டின் சென்மதி நிலுவையை மோசமாக்கக்கூடியது என்பதாகும். பொருட்கள், சேவைகள் மற்றும் மாற்றல்கள் என்பன தொடர்பான நிலுவை அல்லது நடைமுறைக்கணக்கு நிலுவை, பொருளாதாரம் ஒன்றின், வெளியுலகுடனான மெய் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக கிடைக்கும் நிதிச்சொத்துக்களின் தேறிய மாற்றத்தை பிரதிபலிக்கின்றது.

**மூலதனக் கணக்கு**

பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல், மாற்றல் கொடுப்பனவுகள் என்பவற்றிலிருந்து வரும் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக, ஒரு நாட்டின் கடன்பட்டோர் கடன கொடுத்தோர் நிலையில் ஏற்படும் மாற்றம் மூலதனக்கணக்கில் பதிவு செய்யப்படுகிறது. ஒரு நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றில் மாற்றங்களை பிரதிபலிக்கும் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் இதில் பதியப்படுகின்றன. நாணயத் துறை, நாணயம் சாராதுறை என்ற இரு பிரிவுகளை மூலதனக்கணக்கு கொண்டிருக்கிறது. நேரடி முதலீடாகவும் கடன்களின் உருவத்திலும் உள்ளே வரும் வெளியே செல்லும் மூலதன வகைகளை நாணயம் சாரா துறை பொதுவாக உள்ளடக்குகிறது. எவ்வித கட்டாயப்படுத்தலுமின்றி தாமாகவே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் என்று இவை குறிக்கப்படுகின்றன. மூலதனக்கணக்கின் தேறிய நிலுவை நாணய துறையின் கொடுக்கல் வாங்கல்களினால் நிதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், நாணய துறையின் கொடுக்கல் வாங்கல்கள் செ. நி. யை முகாமை செய்யும் அதிகாரிகள், செ. நி. யின் ஏனைய துறைகள் தொடர்பாக காட்டும் எதிர்விளைவுகளை பிரதிபலிக்கின்றன. தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலையில், செ. நி. யை நிதிப்படுத்துவதற்காக ஒதுக்குகளை திரட்டுவதும், பாவிப்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமை, சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்கள், சிறப்பு எடுப்பனவு உரிமை வைப்பில் மாற்றங்கள் போன்ற விடயங்களும் இதில் சேர்க்கப்படுகின்றன.

**மிகைகளும் பற்றாக்குறைகளும்**

நடைமுறைக்கணக்கில் காணப்படும் மிகை, சென்மதி நிலுவையின் சாதகமான ஒரு நிலையென்று பொதுவாக கருதப்படுகிறது. அதே வேளையில், ஒரு "பற்றாக்குறை" சாதகமற்ற செ. நி. நிலை என்று கூறப்படுகிறது. ஒரு நாடு அதன் நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான நிதிப்படுத்தலை காண முடியாத பட்சத்தில், கொடுப்பனவு பிரச்சினைகளை எதிர்கொள்ளும். அதே வேளையில், மிகையை அனுபவிக்கும் ஒரு நாடு ஒதுக்குகள் திரண்டு வரும் ஒரு சாதக நிலையை அல்லது வெளிநாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளும் ஒரு நிலையை அனுபவிக்கும். மிகைநிலை அல்லது பற்றாக்குறை நிலை இரண்டும் இல்லாத நிலையில் இருக்கும் ஒரு நாடு "வெளிநாட்டுச் சமநிலை"யில் இருக்கிறது என்று கூற முடியும்.

சென்மதி நிலுவையில் மிகை அல்லது பற்றாக்குறை என்பன குறித்த கருதுகோள், தொடர்ந்தும் பல முரண்பட்ட கண்ணோட்டங்களை ஈர்த்துள்ள ஒரு விடயமாக இருந்து வந்துள்ளது. சரியாக சொல்வதானால், சென்மதி நிலுவையில் ஒரு மிகையோ அல்லது பற்றாக்குறையோ இருக்க முடியாது. எனினும், செ. நி. யில் மிகை அல்லது குறை என்பன குறித்து ஒருவர் பேசும்போது, கொடுக்கல் வாங்கலின் ஒரு பகுதியிலிருந்து வரும் நிலுவை குறித்தே அவர் குறிப்பிடுகிறார். (பொருட்கள், பணிகள் மற்றும் மாற்றுக் கொடுப்பனவுகளைக் கொண்ட) நடைமுறைக் கணக்கு நிலுவையே பொதுவாக செ. நி. மிகை அல்லது பற்றாக்குறை என்று பேசப்படுகிறது. உண்மையிலேயே பல நாடுகளில், செ. நி. நிலையின் உறுதிப்பாட்டினை அல்லது பலவீனத்தை நடைமுறைக்கணக்கு நிலுவையே நிர்ணயிப்பதாக இருக்கிறது. எனினும், நடைமுறைக் கணக்கில் காணப்படும் சமனின்மைகள் அவசியமாகவே உறுதிகுலைந்த செ. நி. நிலையைக் காட்ட வேண்டுமா என்பது குறித்து கேள்வியெழுப்ப முடியும்.

(மிகுதி அடுத்த இதழில்)

படிப்பகம்